Registered as a News Paper in Sri Lanks
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
ஜன.29 - பெப்.04, 2015

# வாரமலர் தினமுரசு



THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1103




## தெற்கில் திடுக்கிடும் தேடுதல் வேட்டை



## ஏமாற்றிப் பிழைக்கும் அரசியல் நாகரிகம்



## சர்வதேச மூலதனமும் வறுமையும்

## சுதந்திர இலங்கை ஒரு பார்வை

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## சிவராத்திரி விரத பலன்

இந்துமக்கள் பலவகையான விரதங்களை அனுஷ்டிப்பார்கள். அதில் சிவராத்திரி விரதமும் ஒன்றாகும். இவ்விரதத்தில் சில வகையும் அதற்கேற்ற பலனும் உண்டு எனக்கூறப்படுகிறது.

மகா சிவராத்திரி தினமானது ஞாயிறு அல்லது செவ்வாய்க் கிழமையாக இருந்தால் மிகச் சிறப்பென்றும், மூன்றரை மடங்கு அதிகபலன் உண்டெனவும் கூறப்படுகிறது. யோக சிவராத்திரி விரதம் இருந்தால் மூன்று கோடி சிவராத்திரி விரதம் அனுஷ்டித்த பலன் கிடைக்குமென சிவமகாத்மிய நூல்கள் கூறுகின்றன.

இதுதவிர, நித்திய சிவராத்திரியானது தை மாதம் பௌர்ணமி நாளில் தொடங்கி: பதின்மூன்று நாட்கள் ஒரு வேளை உணவருந்தி, பதின்னான்காம் நாள் (சதுர்த்தசி) முழுவிரதம் அனுஷ்டித்து, கண்விழித்து சிவனை வழிபடுவது உகந்த பலனைத் தருமென்றும், மகாசிவராத்திரி விரதத்தை அறியாமல் செய்தவர்கள்கூட சிவனின் பேரருளைப் பெற்றார்கள் என்றும் சிவ–புராணம் கூறுகிறது. **அனந்தநாராயணன், கைவேலி**

## ஆன்மீகம்

## விசுவாசம் - கடவுளின் கொடை

இயேசு கடவுளின் நற்செய்தியை உலகெங்கும் எடுத்துச்செல்ல திருத்தூதர்களை தேர்ந்தெடுக்கிறார். இயேசுவின் இந்த செயல், விசுவாசம் என்பது போற்றிப் பாதுகாக்கவேண்டியது மட்டுமல்ல, அது பறைசாற்றப்பட வேண்டியது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

கத்தோலிக்க திருச்சபை இரண்டாயிரம் வருடத்திற்கும் மேலான பாரம்பரியத்தைகொண்டு இருக்கிறது. இந்த இரண்டாயிரம் வருட பாரம்பரியத்தின் வெற்றி, ஒவ்வொரு தலைமுறையினரின் அர்ப்பணத்திலே இருந்திருக்கிறது. அன்றைக்கு சீடர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட விசுவாசத்தை அர்ப்பண உணர்வோடு தலைமுறையினர் தோறும் அடுத்த தலைமுறையினர்க்கு மிகுந்த பாதுகாப்போடு, மகிழ்ச்சியோடு, தியாக உள்ளத்தோடு பரிமாறியிருக்கிறார்கள்.

இதற்காக அவர்கள் சந்தித்த துன்பங்கள், துயரங்கள், கொடுமைகள் எண்ணிலடங்காதவை. ஆனாலும், தாங்கள் பெற்றுக்கொண்ட அந்த மாட்சிமையை, உண்மையை மற்றவர்களும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக தாங்கள் சந்தித்த இன்னல்களை பொறுமை–யோடு ஏற்றுக்கொண்டார்கள். இதற்கு சிறந்த உதாரணம் திருத்தூதர்கள். திருத்தூதர்கள் அனைவரும் இயேசுவுக்காக சிந்திய இரத்தம் அதற்கு சாட்சி.

## இஸ்லாம் அனுமதித்துள்ள வியாபாரமுறை

ஒருவர் சில பொருட்களை மற்றொருவரிடம் இருந்து வாங்கிக் கொண்டு கையளிக்கும் பணக்கொடுப்பனவை குறிப்பதே வியா–ப்பாரம் எனப்படும். இது இஸ்லாத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

இதற்கான எல்லா விதிமுறைகளையும் அல்லாஹ் அவன் சிருஷ்டியான மனிதனுக்கு ஏற்பாடு செய்து கொடுத்துள்ளான். இவற்றை உரியமுறையில் பேணி, வியாபாரத்தை நேர்மையாக செய்வோருக்கே ஈருலகிலும் உயர்வுண்டு. நாணயமும், வாய்மையுமுடைய வியாபாரி மறுமையில் நபிமார்கள், ஸித்தீகீன்கள், ஷுஹதாக்களுடன் இருப்பார்.

ஆதாரம்: இப்னுமாஜா

இவ்வேளையில் இன்னும் சில விடயங்களை வியாபாரத்தின் போது நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். பொருட்களை வாங்குவோரும் விற்போரும் போதையில் இருப்பவர்களாகவோ, பைத்தியக்காரர்களாகவோ, மந்த புத்தியுடையவராகவோ, பருவ–மடையாத சிறுவர்களாகவோ இருக்கக்கூடாது. இதுவே இஸ்லாம் அனுமதித்துள்ள வியாபார முறை.

**எம்.சி.கலீல், கல்முனை -05**

## கவிதைப்போட்டி 1100



### ● பாராட்டுக்குரியது ●

### கேட்கப் போவது...!

நாங்கள் கேட்டதோ
நரித் தொண்டையில்
சிக்கிய முள்ளை
நாரை எடுத்த கதை.
எங்கள் பேரப் பிள்ளைகளின்
கேட்கப் போவதோ
நாய்த் தொண்டையில்
சிக்கிய முள்ளை
குரங்கு எடுத்த கதை.

அ.சந்தியாகோ,
கண்டி.

### 'காவலன்'

கடித்துவிட்டேன் அவசரமாய்
எலும்புத் துண்டொன்றை - அது
ஒடிந்துவிட்டதோ வெகு சீக்கிரமாய்
பல் இடுக்குகளின் உள்ளே - அதை
எடுத்துவிடுவாயோ பொறுமையாய்
என்னுயிர் நண்பனே - நான்
துடித்துவிடமாட்டேன் ஒருபோதும்
கருணை கொண்ட உன்னை - ஆனாலும்
காத்திடுவேன் காவலனாக உன்னை
உயிர் என்பது என்னிடம் உள்ளவரை.

இளம்பிறை,
புத்தளம்.

## கவிதைப் போட்டி இல 1103



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08. 02. 2015

கவிதைப் போட்டி இல. 1103 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### ஐக்கியம்

சொல்ல முடியாத வேதனையை
வாய்திறந்து காட்டுகிறதோ – இங்கே
வாய்பேசாத ஒரு ஜீவன் – அதை
கைபோட்டுப் பரீட்சிக்கின்றதோ
கருணை கொண்ட மற்றொரு ஜீவன்.
இதைக் கண்கொண்டு பார்க்கிற போதோ
ஐயறிவுகளின் ஐக்கியம் என்பது
இதுதான் என நமக்கும் புரிகின்றதோ.

யோகன், புத்தளம்.

### சிறந்த பாஷை

இதைப் பார்த்தாவது
மனிதர்கள்
திருந்தமாட்டார்களா?
இந்த உலகம் புரிந்து கொள்ள
இதைவிடச் சிறந்த பாஷை
வேறொன்றில்லை.

கே.எஸ்.சிவஞானராசா, யாழ்ப்பாணம்.

### சேட்டை

ஏய் குரங்காரே நம்
வீட்டைக் காக்கும் இந்த
மிருகத்திடம்
நீ செய்யும் சேட்டைக்கு
ஒரு அளவே இல்லையா?

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.

### பாசம்

அன்று தாயைப் பிரிந்து
தனித்து நின்ற குரங்கை
அன்பு காட்டி
அரவணைத்து பாலூட்டி
பராமரித்த நாய்
இன்று இருவரும் இணைந்து
பாசத்தை பகிர்ந்து கொள்ளும்
பண்பு இது.

எம்.சி.கலீல், கல்முனை–05.

### உதவி செய்!

நண்பரே நாடறிந்த பகைவர்கள்
நாம் எனக்கு என் வாய்ப்பல்லில்
மீன் முள்ளோ எலும்போ சிக்கி
வேதனை படுத்துவது தாங்க
முடியவில்லை. இதை எடுத்து
உதவிடு. நம் நிலைமையை
மனிதர்கள் கண்டால் இருவருக்கும்
ஆபத்து நண்பரே!

ஆர்.கொங்கா,
மகிழூர்முனை.

## உங்கள் பக்கம்

### தனியார் பேரூந்துகளின் பொறுப்பற்ற செயல்கள்

கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலே தொடர்ச்சியாக பயணம் மேற்கொண்டு வருகின்ற பொதுமகன் என்றவகையில் குறித்த வீதியால் பயணத்தை மேற்கொள்கின்ற ஆயிரக்கணக்கான மக்களின் சார்பில் இம்மடலை தினமுரசு வாரமலருக்கு எழுதி அனுப்புகின்றேன்.

தனியார் பேரூந்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் பயணிக்கின்ற பிரயாணிகளை ஏற்றுவதற்கான பஸ்தரிப்பிடம் யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்டு இருக்கின்றது.

இருந்தபோதிலும் தனியார் பேரூந்துகள் புறப்படுவதற்கான நேர அட்டவணைகளோ ஒழுங்குமுறைகளோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் தனியார் பேரூந்துகள் ஒவ்வொன்றும் தங்கள் இஷ்ரத்துக்குச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதன்போது அவர்களுக்குள் பிணக்குகளும் போட்டிகளும் ஏற்பட்டு இடைநடுவில் முரண்பட்டுக் கொள்வதும் பேரூந்துகளின் கண்ணாடிகளை உடைப்பதும் தொடர்கதையாகவே சென்று கொண்டிருக்கின்றது. இவ்வாறான துரதிர்ஷ்ட சம்பவங்கள் குறித்த பேரூந்துகளில் பயணிக்கின்ற என் போன்ற பிரயாணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது.

சில பிரயாணிகள் பாதிக்கப்படுகின்ற சம்பவங்களும் நடைபெறுகின்றன. இதுதொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை. எனவே, உங்கள் பக்கம் ஊடாக சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் மீண்டும் கொண்டுவர விரும்புகின்றேன்.

பாதிக்கப்பட்ட பயணிகள்




மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

## வாசகர்சாலை

### நிலைத்திருப்பவை

முரசின் பல வாசகர்களில் நீண்டநாள் வாசகன் நான். அற்புதராஜா பேனா கொண்டு கிறுக்கிய கிறுக்கல்களை என்றுமே மறக்கமுடியாது. அவருடைய பல ஆக்கங்கள் இன்றுமே நிலைத்திருக்கின்றது. அது அவரது அர்ப்பணிப்பும், எழுத்தும்தான் என்பதற்கு மறுப்பதற்கில்லை. அவர் மறைந்தாலும் அவர் சென்ற எழுத்துக்கள் இன்றும் நிலைத்திருக்கின்றது. அன்றைய கால கட்டத்திற்கு தினமுரசு வரவேண்டுமென்பதே எனது விருப்பமாகும்.

**க.ராஜஜோதி, நுவரெலியா.**

### ஆசீர்வாதம்

முரசுக்கு வணக்கம், பாப்பரசரின் இலங்கை விஜயம் என்ற கட்டுரை திருத்தந்தை பாப்பரசர் பற்றி முரசு அறியத் தந்தமைக்கு நன்றிகள். பாப்பரசின் வருகை எமது இலங்கை மண் செய்த புண்ணியம் ஆகும். அவரின் ஆசீர்வாதத்தால் எமது மண் புனிதப்படுமென நம்புகின்றேன். முன் பக்கத்தில் பாப்பரசரை தாங்கிய முன்பக்கமும் அருமையாக உள்ளது. முரசு பல படிகளைத் தாண்டி முன்னேற்றங்களைக் காணவேண்டும்.

**என்.ஜூட், மன்னார்.**

### அவ்சரம் தேவை

வாசகர் மத்தியில் முரசு தனக்கென தனியிடம் பிடித்திருக்கின்றது. முரசு வாசகர்கள்மீது வைத்திருக்கும் அளவற்ற பற்று முரசில் வெளிவரும் அம்சங்கள்மூலம் வெளிப்படுத்தி நிற்கிறது. உன் பக்கங்கள் என் நெஞ்சை தொட்டுச் செல்கின்றது. மருத்துவப் பக்கத்தில் வரும் மருத்துவத் தகவல்கள் குறைவாகவே காணப்படுகின்றது. மருத்துவம் இன்னும் கனமான கட்டுரைகள் தேவையெனவே நினைக்கின்றேன்.

எம்.மதிமலர், கண்டி.

### அமைதியின் சொற்கள்

உங்களுக்குள் ஓர் இடம் உள்ளது. அங்கு பேரின்பம் வீற்றிருக்கின்றது. அங்கு சென்று நீங்கள் அந்த எல்லையில்லா ஆனந்தத்தை, சாந்தியை அனுபவிக்க முடியும்

**இணையத்தளம்:** www.wopg.org

**- பிரேம் ராவத்**

# புதிய அரசின் தமிழ் மக்கள் தொடர்பான நிலைப்பாடு



## ஈ.பி.டி.பியின் முயற்சிக்கு கிடைத்த வெற்றி

**அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் வெளிப்படையாக கூறியிருக்கும் தமிழ் மக்கள் தொடர்பான கருத்துக்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நீண்டகால அரசியல் முயற்சிகளுக்கு கிடைத்திருக்கும் வெற்றியாகவே பார்க்க முடிகின்றது. அதற்காக எமது மக்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள" அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள்மையானது, இலங்கையில் தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்தப்படாததற்கும், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு உரிய தீர்வுகாணப்படாமைக்கும் கடந்த காலங்களில் தென்னிலங்கையில் ஆட்சிக்குவந்த் அரசியல் தலைமைகளின் அரசியல் விருப்பமின்மையே காரணமாக இருந்தது என்றும் இப்போது அந்த அரசியல் விருப்பம் இருக்கின்றது. ஆகவே இனங்களுக்கிடையே தேசிய நல்லிணக்க்மும், அரசியல் பிரச்சினைக்கு தீர்வும் காணப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் இந்தியாவில கூறியிருக்கும் கருத்துக்கள் தமிழ் மக்களிடையே புதிய நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் இந்தியாவுக்கான விஜயத்தின் போது வடக்கிலிருந்து படைக் குறைப்பு நடைபெறும் என்றும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமும், நீதியும் வழங்கப்படும் என்றும், புலம்பெயர்ந்து வாழும் எமது தாயக உறவுகளுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என்றும் கூறிய கருத்துக்கள் எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றன.

எனவே, இந்த விடயங்கள் தமிழ் மக்களின் முன்னுரிமைக்குரிய கோரிக்கைகளாக முன்னைய அரசுகளிடமும், தற்போதைய புதிய அரசிடமும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் முன்வைக்கப்பட்டவை ஆகும். எமது மக்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கும்விதமாக இவ்வாறான முன்னெடுப்புக்களை நாம் ஒத்துழைப்போடு வரவேற்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விசாரணை வளையத்தில் குமார்

முன்னணி சோசலிச கட்சியின் தலைவர் குமார் குணரட்ணம் இலங்கைக்கு திரும்பியதன் பின்னர் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகள் குறித்து, அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்வதறகு விரும்புவதாக குடியகல்வு மற்றும் குடிவர்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

குடிவரவு திணைக்களத்துககு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து, பன்னிப்பிட்டியவிலுள்ள கட்சி அலுவலகத்துக்கு விஜயம் மேற்கொண்ட குடிவரவு திணைக்கள அதிகாரிகள், குமார் குணரட்ணத்திடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்ததாக, கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜயகொடி தெரிவித்தார். இதன்போது, கட்சியின் தலைவர் அலுவலகத்தில் இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## காணவில்லை

நோர்வூட், சென் ஜோன் டிலரி மேற்பிரிவை சேர்ந்த 13 வயதான தமிழ்ச்செல்வன் [illegible]ாகர், என்ற மாணவனை கடந்த 24ஆம் திகதி முதல் காணவில்லை என்று அவரது பெற்றோர், நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர், சென்.ஜோன் டிலரி தமிழ் வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி பயின்றவராவார்.

## பறக்கும் வெள்ளை மாளிகை

அமெரிக்க ஜனாதிபதியின் அலுவல் விமானத்தின் பெயர் 'ஏர்போர்ஸ் 1'. போயிங் 747 ரக விமானமான இதில்தான் அவர் டில்லிக்கு வந்தார். அணு ஆயுதங்களால்கூட இந்த விமானம் பாதிக்கப்படாது. 1580 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த விமானமே ஒரு "பறக்கும் வெள்ளை மாளிகை".

அதாவது, இதிலேயே ஜனாதிபதி அலுவலகமே இயங்கும்: அதிநவீன தகவல் தொடர்பு சாதனங்கள் இதில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவுக்குள் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதற்கு அவர் 'மெரைன் ஒன்' என்ற ஹெலிகொப்டரை பயன்படுத்தினார்.

இதுவும் அமெரிக்காவில் இருந்து வரவழைக்கப்பட்டது. ஜனாதிபதியுடன் அமெரிக்காவின் நவீன 'மெரைன்' பாதுகாப்பு படையினர் இருந்தனர். வானிலும் அமெரிக்க விமானப் படை தொடர்ந்து கண்காணித்தப்படி இருந்தது. எரிவாயு விநியோகம், திரவ இயற்கை வாயு, எரிசக்தி தொடர்பாகவும் மற்றும் இந்தியா - அமெரிக்கா இடையே பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் பரிமாற்றம் மற்றும் கூட்டு பாதுகாப்பு பயிற்சி போன்ற விடயங்கள் விவாதிக்கப்பட்டதாக தெரிகின்றது. ஐ.எஸ்.ஐ.எஸ். மற்றும் பாக். - ஆப்கான் பயங்கரவாத இயக்கங்களுக்கு எதிராக நடவடிக்கை ஒருங்கிணைந்த பயற்சி பற்றியும் பேசப்பட்டுள்ளது.

## காட்டுத் தீ

ஹட்டன் ருவன்புர மகாவெலிகம காட்டுப்பகுதியில் ஏற்பட்ட தீ காரணமாக இதுவரை சுமார் 10 ஏக்கருக்கும் அதிகமான காட்டுப்பகுதி தீயினால் எரிந்து நாசமடைந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாட்டி மீது பலாத்காரம்

இந்தியா, கன்னியாகுமாரியில் 64 வயதான பெண் ஒருவரை வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தில் 25 வயதான பெருமாள்புரத்தில் அமைந்துள்ள அகதி முகாமைச் சேர்ந்த சந்தேக நபரே கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர். பாதிக்கப்பட்ட பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# புலி வருகுது... புலி வருகுது...?

ரிஷி





புதிதாக ஆட்சி அமைத்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசின் ஒரு அங்கமாக உள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, விடுதலைப் புலிகள் பற்றி தெரிவித்த [illegible] கருத்து, வெவ்வேறு தரப்பி[illegible]ல், வெவ்வேறு விதமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

"இல்லாத விடுதலைப் புலிகளை இவர் ஏன் இப்போது இழுக்கிறார்?" என்கிறது ஒரு தரப்பு. "ஆஹா.. வெளிநாட்டில் இருந்து வரப்போகிறது புலி. நடுங்குகிறார் முன்னாள் இராணுவத் தளபதி" என்கிறது மற்றொரு தரப்பு. அதாவது, ஒவ்வொருவரும் தத்தமது தலையில் பொருந்தும் விதத்தில் இந்த குல்லாவை அணிந்துகொள்கிறார்கள்.

சரி. சரத் பொன்சேகா அப்படி என்னதான் சொல்லியிருக்கிறார்?

"விடுதலைப் புலிகள் விவகாரத்தை சரியான முறையில் கையாளா விட்டால், மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும்" என்று கூறியுள்ள முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகக் கட்சியின் தலைவருமான ஜெனரல் சரத் பொன்சேகா, "இலங்கையின் வடக்கு பகுதியில் யுத்தம் உச்சக்கட்டத்தில் நடந்தபோது இருந்த எண்ணிக்கை[illegible]விட இப்போது மிக குறைவாகவே அங்கு இராணுவம் உள்ளது. தேவைக்கேற்ற எண்ணிக்கையில் அங்கு இராணுவத்தை வைத்துக்கொண்டு, இராணுவ குறைப்பை மேற்கொள்ள வேண்டும்" என்று கூறியுள்ளார்.

இதன்போது அவர் இரு வாக்கியங்களை கூறியுள்ளார். இதோ, இவைதான் அந்த வாக்கியங்கள்-

"மேலை நாடுகளிலும், இந்தியாவின் தமிழ் நாட்டிலும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இப்போதும் உள்ளனர். இதுபோல இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளிலும் ஒரு சில அரசியல்வாதிகள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக இருக்கலாம். அதை பூரணமாக மறுக்கமுடியாது. இந்த நிலையை அரசியல்ரீதியாவும், இராணுவ ரீதியாவும் சரியாக கையாளா விட்டால், பயங்கரவாதம் அதன் கொடூரத்தை மீண்டும் தொடங்க முடியும்" என்பதுதான் அவர் கூறியது.

இந்தக் கூற்றை வைத்து, "இல்லாத விடுதலைப் புலிகளை இவர் ஏன் இப்போது இழுக்கிறார்?" என்கிறது ஒரு தரப்பு. புலிகளை எங்கே இழுத்தார் 'அவர்' என்பது புரியவில்லை. வெளிநாடுகளில் புலிகளின் ஆதரவாளர்கள் உள்ளார்கள் என்று சொல்லியிருக்கிறார்.

தமிழகத்தில் உள்ள வைகோவை கேட்டுப் பாருங்கள். இதையே மார்தட்டிச்சொல்வார். சீமானை கேட்டால், தலையில் தட்டச் சொல்லுவார். அல்லது மேலை நாடுகளில் என்றால், நல்ல நாள் பெருநாள் வந்தால் நாலைந்து பேர் புலிக் கொடியுடன் வீதியில் நிற்பார்கள்.

ஏன், இவர்கள் புலிகளின் ஆதரவாளர்கள் இல்லையா?

"இல்லாத விடுதலைப் புலிகளை இவர் ஏன் இப்போது இழுக்கிறார்?" என்றால், இல்லாத புலிகளுக்கா இவர்கள் கொடி பிடிக்கிறார்கள்?

பொதுவாகவே, இலங்கை அரசைப் பொறுத்தவரை அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கவசமாக இருந்துவருவது, வெளிநாடுகளில் உள்ள புலிகள் ஆதரவாளர்களும், அவர்கள் பிடிக்கும் புலிக்கொடிகளும்தான். காரணம் என்னவென்றால், இவர்கள் புலிக்கொடி பிடிக்கும் நாடுகளில், விடுதலைப் புலிகள் இயக்கம் 'பயங்கரவாத இயக்கம்' எனத் தடை செய்யப்பட்டு உள்ளது.

இதை வைத்து, இலங்கை அரசு வெளிநாடுகளில் இலங்கை அரசு இராஜதந்திர ரீதியாக பிரசாரம் செய்கிறது.

"நீங்கள் பயங்கரவாத இயக்கமாக தடை செய்த விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு, உங்கள் நாடுகளிலேயே கொடிபிடிக்க ஆள் இருக்கிறது என்றால், நாளைக்கே இலங்கையிலும் நீங்கள் 'பயங்கரவாத இயக்கமாக' த[illegible]செய்துள்ள இயக்கம் உயிரபெறலாம் அல்லவா? அதை தடுக்கவே, இராணுவத்தை நிறுத்தி வைத்திருக்கிறோம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தோன்றலாம் என்ற அச்சுறுத்தல் எப்போது அற்றுப் போகிறதோ, அப்போது நாமும் இராணுவத்தை வாபஸ் பெற்றுக் கொள்வோம்" என்று சொல்வதை மேலைநாடுகள் ஏற்றுக் கொள்ளவேண்டி உள்ளது.

காரணம், அவர்களது தலைநகர் வீதிகளிலேயே புலிக் கொடியை அவர்களால், பார்க்க முடிகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தோன்றலாம் என்ற அச்சுறுத்தல் எப்போது அற்றுப் போகும்? வெளிநாடுகளில் புலிக்கொடிகள் மறையும்போது. அதன்பின் இலங்கையின் வடக்கு, கிழக்கில் இராணுவத்தை நிறுத்தி வைத்திருக்க இலங்கை அரசுக்கு இந்த நியாயமும் கிடைக்காது.

அப்படியொரு நிலை இலங்கை அரசுக்கு ஏற்படுமா?

அப்படியொரு நிலையை ஏற்படுத்தி இலங்கை அரசை கைவிட்டுவிடமாட்டார்கள், வைகோ, சீமான், மற்றும் புலம்பெயர் புலிக் கொடி வீரர்கள். அந்த நம்பிக்கை யாருக்கு இருக்கிறதோ, இல்லையோ' இலங்கை அரசுக்கு உள்ளது.

இவர்களுக்கு இலங்கை அரசு என்றென்றைக்கும் நன்றி உடையதாக இருக்கவேண்டும்' என்று வேண்டுமானால் சொல்லலாம்.

தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## மாற்றத்தை மக்கள் அனுபவிக்க வேண்டும்

ஜனாதிபதி மைத்திரிபாலவின் தலைமையிலான புதிய அரசு இம்மாதம் இருபத்து ஒன்பதாம் திகதி குறுகிய கால வரவு - செலவுத் திட்டம் ஒன்றை சமர்ப்பிக்கின்றது. அதில் பத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உடனடியாக குறைக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் அதிகரிப்பும் பரிந்துரைக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே கடந்த வாரம் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. பஸ் கட்டணங்களும் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

தற்போது வர்த்தகர்கள் நம்பிக்கையோடு புதிய முதலீடுகளில் ஆர்வப்படுகின்றனர். ஒப்பீட்டளவில் தனிமனித சுதந்திரத்தோடு வாழ்வதுபோல் உணர்வதாக சிலர் கருத்துக்கள் முன்வைக்கின்றனர். ஏதோ இனம்புரியாத அழுத்தம் ஒன்று தம்மைவிட்டு அகன்றிருப்பதுபோல் உணர்வதாக சிலர் கூறுகின்றனர்.

யுத்தம் பற்றிய பேச்சுக்களை மூவின மக்களுமே வெறுக்கின்றார்கள். மகிந்த ராஜபக்ச என்பவர் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த மரியாதைக்குரியவர். அவரை அரசியல் பேதங்களுக்கப்பால் நாட்டு மக்கள் எல்லோரும் மறக்க மாட்டார்கள். அவருக்கான மரியாதை எப்போதும் இருக்கும்.

ஆனால் மகிந்தவின் பெயரால் அவரது குடும்ப அங்கத்தினரும், அவர்களுக்கு தனிப்பட்டரீதியில் மிக நெருக்கமாக இருந்தவர்களும் அரங்கேற்றியிருக்கும் குற்றங்கள் பாரதூரமானவை. குற்றவாளியாக சட்டத்தின் முன்னால் நிரூபிக்கப்படுகின்றவர்கள் உரிய தண்டனையை கட்டாயம் அனுபவிக்க வேண்டும்.

சில அரசியல்வாதிகள் எதிர்காலத்தில் இதுபோன்ற துரோகத்தையும், மோசடியையும் செய்யத் துணியக் கூடாது என்ற வகையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதுபோல் கடந்த காலத்தில் அரசியல் காரணங்களுக்காகவும், கருத்து முரண்பாடுகளுக்காகவும் படுகொலை செய்யப்பட்டவர்களின் கொலைகள் தொடர்பான விசாரணைகளும் பாரபட்சமற்று நடைபெற்று நியாயம் நிலைநாட்டப்படவேண்டும்.

முன்னர் நடைபெற்ற விசாரணைகள் முறையற்றவை என்பது போலல்லாமல் முறையான, நீதியான வீசாரணைகள் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தேவை. இல்லாவிட்டால் பின்பொரு காலத்தில் ஆட்சிக்குவருகின்றவர்கள் தற்போதைய விசாரணைகள் முறையற்று அரசியல் நோக்கத்தோடு நடைபெற்றிருப்பதாக நிரூபித்தால் அவை ஒட்டுமொத்தமாக எல்லோரும் மாறி மாறி நாட்டு மக்களை ஏமாற்றியதாகவே அமையும்.

அரசியல் மாற்றமொன்றின் முக்கிய பங்காளிகளான தமிழ், முஸ்லிம் மக்களுக்கு கைமாறாக முன்னர் உடைக்கப்பட்ட அல்லது அப்புறப்படுத்தப்பட்ட மத வழிபாட்டுத்தளங்களை பழைய இடங்களில் அமைத்துக் கொடுத்து நம்பிக்கையூட்ட வேண்டும்.

பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு உரியவர்களின் காணிகள் உரியவர்களிடமே ஒப்படைக்கப்படவேண்டும். சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும். இவற்றை நூறு நாள் வேலைத்திட்டத்தில் நிறைவேற்றினால் தொடர்ந்தும் தமிழ் மக்கள் நம்பிக்கையுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதே அரசுக்கு தமிழ்பேசும் மக்கள் விடுக்கும் செய்தியாகும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

தேர்தல்

> அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களை அபகரிக்கவேண்டுமாக இருந்தால் அரசியல் போட்டியாளர்கள் புறக்கணிக்கப்பட வேண்டும். மக்கள் சரி, பிழைகளுக்கு இடமில்லாமல் தமது ஒற்றைக்கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கான காய்நகர்த்தல்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# திடுக்கிடும் தேடுதல் வேட்டை

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று நாட்டில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றத்தின் பரபரப்பு இன்னும் குறையவில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றதாக கூறப்படும் பல்வேறு ஊழல்கள், மோசடிகள், கொள்ளைகள், கொலைகள், அதிகார துஷ்பிரயோகங்கள் எனப் பல விடயங்களை அம்பலத்துக்கு கொண்டுவரும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

இதுநாள்வரை நாட்டில் இருந்த பல பிரச்சினைகள் இப்போது மறைந்துபோய் விட்டதைப் போல் ஒரு மாயை ஊடகங்களால் ஏற்படுத்தப்பட்டு கடந்த ஆட்சிக்காலத்தில் அப்படிச் செய்திருக்கின்றார்கள், இப்படிச் செய்திருக்கின்றார்கள் என்று நாளாந்தம் மக்களுக்கு சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள்.

தேர்தல் காலத்தில் உணவுப் பார்சல் தயாரிக்க பதுக்கி வைத்திருந்த உலர் உணவுப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டது, மகிந்தவின் புகைப்படம் அச்சிடப்பட்ட ரீ-சேட்டுக்கள் ஆயிரக்கணக்கில் கண்டெடுக்கப்பட்டது. மகிந்தவினதும், அவரது மகன் நாமலினதும் புகைப்படங்கள் அச்சிடப்பட்ட சுவர்க்கடிகாரங்கள் ஆயிரக்கணக்கில் கண்டெடுக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகப் பாவனையில் இருந்த ஐநூறுக்கும் அதிகமான வாகனங்கள் மர்மமானது. பின்னர் அவை கண்டு பிடிக்கப்பட்டது, சார்க் மகாநாட்டுக்காக வாங்கப்பட்ட ஐம்பத்து மூன்று பென்ஸ் கார்களும் பதுக்கிவைக்கப்பட்ட இடத்திலிருந்து மீட்கப்பட்டது, அலரி மாளிகைக்குள்ளிருந்து ஐநூறு மில்லியன் ரூபாய்கள் பணம் கண்டெடுக்கப்பட்டது, அலரி மாளிகைக்குள்ளிருந்து நூற்றுக்கணக்கான கணினிகளும், அச்சு இயந்திரங்களும் கண்டெடுக்கப்பட்டது, அலரி மாளிகையில் நாய்களுக்கு குளிரூட்டப்பட்ட அறைகள் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள், அலரி மாளிகையில் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான உயர் ரக குதிரைகள் வளர்க்கப்பட்டு இருக்கின்றது, அலரி மாளிகையில் தனது மகன்களுக்காக முன்னாள் ஜனாதிபதி தனித்தனி மாளிகைகளை கட்டியிருக்கின்றார் என்றவிதமான செய்திகள் ஒருபுறம் பரபரப்பாக பிரசாரம் செய்யப்பட்டுக்கொண்டு இருக்கின்றது.

மறுபக்கத்தில் முன்னாள் முதற்பெண்மணி 100 கிலோ தங்கத்தை மத்திய வங்கியில் இருந்து அபகரித்து விற்பனை செய்வதற்கு முயற்சி செய்தார், முன்னாள் ஜனாதிபதியின் மகன் யோசித கடற்படையில் இணைக்கப்பட்டதும், வெளிநாட்டில் அதற்கான புலமைப் பரிசில் கல்வியைத் தொடர்ந்தது எவ்விதம், கோத்தபாயவின் பினாமி நிறுவனமான ரக்ண லங்கா நிறுவனத்துக்கு படைகளின் ஆயுதங்கள் எவ்வாறு வழங்கப்பட்டன என்பதற்கு உரிய கேள்வி கோரல்கள் செய்யப்படவில்லை. காலி துறைமுகத்தில் தரித்துநின்ற கப்பலில் மூவாயிரத்துக்கும் அதிகமான ஆயுதங்கள் கண்டு பிடிப்பு என்ற செய்திகளும் சூடாக பரிமாறப்படுகின்றது.

இன்னொருபுறத்தில் முன்னர் நடந்த கொலைகள், கொள்ளைகளில் முன்னாள் பாதுகாப்புச் செயலருக்கு தொடர்பு, வேலே சுதாவுடன் போதைப்பொருள் கடத்தல் மற்றும் கறுப்புப் பணப்பரிமாற்றம் என்பவற்றில் அரசியல்வாதிகள், அதிகாரிகள் என்போருக்கும் தொடர்பு, முன்னாள் அமைச்சர்களான பசில், திஸ்ஸ ஆகியோர் நாட்டைவிட்டு ஓட்டம், நாட்டில் உள்ள பல அமைச்சர்கள் நாட்டைவிட்டு வெளியேறத் தடை, சிலரின் கடவுச்சீட்டுக்கள் முடக்கம், மோசடி, ஊழல் விசாரணைகள், முன்னாள் அரசியல்வாதிகள், அதிகாரிகள் எனப் பலரின் வாசல்கள் விரைவில் தட்டப்படும் என்ற செய்திகளுமாக தென்னிலங்கை பரபரப்புக்களுக்கு குறைவில்லை.

தற்போதைய புதிய அரசு ஏற்படுத்தப்படாவிட்டால் இத்தனை செயற்பாடுகளும் நாட்டு மக்களுக்குத் தெரியாமல் திரைமறைவில் நடந்து கொண்டே இருந்திருக்கும். இந்த மோசடிக்காரர்கள் நாட்டை சுரண்டி எடுத்திருப்பார்கள். நல்லவேளையாக ஆட்சி மாற்றம் ஒன்று நடைபெற்று நாடு காப்பாற்றப்பட்டிருக்கின்றது என்ற செய்தி மக்களிடம் கொண்டு செல்லப்படுகின்றது.

அரசியல் பழிவாங்கலுக்கு இடமளிக்கப்போவதில்லை என்று புதிய ஜனாதிபதி மைத்திரிபால முன்னர் கூறியிருந்தார். ஆனால் எதிர்க்கட்சிகளோ இந்த் அரசு தம்மை அரசியல் பழிவாங்கல் செய்வதாகக் கூறிவருகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாராளுமன்றம் பெரும்பாலும் கலைக்கப்படலாம் என்ற நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் அரசின் பங்காளிகள்மீது களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தோடு இதுபோன்ற செய்திகளை புதிய அரசு நாளாந்தம் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. முன்னைய அரசின் பங்காளிகளாக இருந்து பல்வேறு கொள்ளைகளையும், அதிகாரத் துஷ்பிரயோகங்களையும் செய்தவர்கள் தற்போதைய அரசிலும் அமைச்சுப் பொறுப்புக்களிலும், அதிகாரத்திலும் தம்மைப் பாதுகாத்துக்கொண்டு இருக்கின்றனர். அவர்கள்மீது அரசு விசாரணைகளை முன்னெடுக்குமா என்று கேட்கும் எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு யாரும் விடையளிப்பதாக இல்லை.

இதுதவிர, தமது அரசியல் எதிராளிகளை பழிவாங்கும் செயற்பாட்டை தமது பிரதான கோரிக்கையாகவே முன்வைத்துச் செயற்படும் பிராந்திய கட்சிகளின் செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும். அரசியல் மாற்றமொன்றை ஏற்படுத்தியவர்கள் என்பதற்காக மாற்றுக் கருத்துக்கொண்ட மக்களினதும், அரசியல் கட்சிகளினதும் கருத்துக்களை புறக்கணிப்பது ஜனநாயகமாகாது என்ற கருத்துக்கள் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றது.

குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஒன்றுக்கு மேற்பட்ட கருத்து அபிப்பிராயங்கள் இருக்கமுடியாது என்ற சர்வாதிகார அரசியல் போக்கு தற்போது கோலோச்சியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால ஆடம்பரங்களை வெறுப்பவராகவும், சாதாரண வாழ்க்கையை விரும்புபவராகவும் இருக்கின்றார். தனது ஆட்சியல் அமைச்சர்களும், அதிகாரிகளும், பதவிவெறியில் செயற்படக்கூடாது என்றும் விரும்புகின்றார் என்று கூறப்படுகின்றது. ஆனால் ஜனாதிபதி தவிர்ந்த தற்போதைய தற்காலிக அரசின் பங்காளிகளாகவும், அமைச்சர்களாகவும் இருப்பவர்களில் பலர் சகஅரசியல் கட்சிகளை பழிவாங்கும் விதமாகவும், அதிகாரத் தோரணையோடும் செயற்படுவதையே காணமுடிகின்றது.

வெளிப்படையாகவே மகிந்தவின் ஆட்கள், மகிந்தவுக்கு வாக்களித்தவர்கள் என்று இடையூறுகளையும், நெருக்கடிகளையும் கொடுக்கின்ற மோசமான அரசியல் கலாசாரமொன்றை வித்திட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலை தொடர்ந்தால் ஜனாதிபதி மைத்திரிபாலவின் ஆட்சிக்காலத்தின் மீதும் பல அவதூறுகளை அடுத்து வருபவர்கள் கூறுவதற்கு வாய்ப்பாகிவிடும்.

அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் தற்போதைய அரசியல் காட்சிகளிலும் பலமான மாற்றங்கள் ஏற்படுமென தெரிவிக்கப்படுகின்றது. தற்போதைய அரசில் தேர்தலில் உதவி செய்ததற்காக கைமாறாக பலர் பதவிகளில் பங்காளியாக இருக்கின்றார்கள். இந்த நிலைமை தேர்தலுக்குப் பின்னர் மாற்றமடையும். அப்போது புதிய ஜனாதிபதி மைத்திரிபால அவர்கள் தனது ஆட்சிப்பயணத்துக்கு நம்பகமானவர்களையும், உறுதிமிக்கவர்களையும் உள்ளடக்கியதான ஒரு அரசை ஏற்படுத்துவார் என்றும் சமரசங்கள் கூறப்படுகின்றது.

எனவே தற்போதைய அரசானது, தேர்தல் வெற்றியின் பங்காளிகளுக்காக பகிரப்பட்டது. அதில் பொது வேலைத் திட்டத்தையோ, ஜனாதிபதி மைத்திரிபாலவின் தனித்துவமான ஆட்சியையோ எதிர்பார்க்க முடியாது.. இது விரைவில் மாற்றமொன்றை சந்திக்கப் போகும் தற்காலிகமான நிலைமையென்பது புரிந்துகொள்ளப்பட வேண்டியுள்ளது.

தற்காலிகமான அரசில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரவையில் இடம்பெறவில்லை. அது தவிரவும் வடக்கு, கிழக்கில் வாழ்வாதாரத் தொழில்கள், பொருளாதார வளங்களை ஏற்படுத்துதல், அழிவிலிருந்து மீண்டுவருவதற்கான நம்பிக்கை என்பவற்றை ஊக்குவிக்கும் அரசியல் பலத்தை இழந்திருக்கின்றார்கள்.

யுத்தமொன்றுக்கு முகம் கொடுத்து பெரும் அழிவில் இருந்து மீண்ட மக்களின் வலிகளையும், உணர்வுகளையும் உணர்வுபூர்வமாக புரிந்து கொண்டு தமது தேவைகளை தீர்க்கக்கூடிய அரசியல் பலத்தை தமிழர்கள் இழந்திருக்கின்றார்கள். எல்லாமும் சரியாக என்றில்லாவிட்டாலும், முடியுமான வரையில் முன்னெடுக்கப்பட்ட உணர்வுசார்ந்த பணிகள் தற்போது சுயலாப அரசியல் சக்திகளால் தடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களை அபகரிக்க வேண்டுமாக இருந்தால் அரசியல் போட்டியாளர்கள் புறக்கணிக்கப்பட வேண்டும். மக்கள் சரி, பிழைகளுக்கு இடமில்லாமல் தமது ஒற்றைக் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கான காய்நகர்த்தல்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இந்த சர்வாதிகார போக்கில் தமிழ் மக்கள் அடுத்த தேர்தலில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தாவிட்டால் சர்வாதிகாரத் தலைமைகளிடம் தமது சாதாரண உரிமைகளையும் தமிழர்கள் இழந்துவிடுவார்கள்.

இதேபோலவே பாராளுமன்றத் தேர்தல்வரை அரசியல் எதிராளிகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தும். ஆரம்பத்தில் குறிப்பிட்ட பரபரப்புக்களும் தொடரவே செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

மதியூகி





# புலிகளின் வதை முகாமில்

## வதை 150

## மணியம்

பின்னர் மிகுந்த மன வேதனையுடன் இவ்வளவு காலமாக தமிழ் - சிங்கள மக்கள் மத்தியில் நாம் கட்டி எழுப்பிய ஐக்கியத்தை, சிங்கள - தமிழ் இனவாதிகள் ஒருசில நாட்களில் மிகச் சுலபமாகத் தகர்த்து எறிந்து விட்டனர் என மிகவும் மனம் வருந்தினார். அத்துடன் திரும்பவும் நாம் அனாவில் இருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது எனவும் கூறினார்.

அந்த இனவன்செயலின் தாக்கமோ என்னவோ, அந்த சம்பவம் நடந்து சில வாரங்களின் பின்னர் செப்ரெம்பர் மாதத்தில் ஒருநாள், இருதயத் தாக்கத்தால் அவர் திடீரென இறந்துவிட்டார். அவர் இலங்கையில் இன ஐக்கியம் சீர்குலைந்தது பற்றிக் கவலைப்பட்டு இன்று ஏறத்தாழ 35 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்படாதது மட்டுமின்றி, அதன்பின்னர் 30 வருடங்கள் போர் நடந்து நிலைமை இன்னும் மோசமானதுடன், இன்று போர் முடிந்த பின்னரும்கூட நிலைமைகளில் மாற்றம் வராமல் இருப்பதற்கு இருபக்கத்திலும் உள்ள இனவாத சக்திகள் தமது நாசகார அரசியலைத் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

இது ஒருபுறமிருக்க,, அனுராதபுரம் பஸ் டிப்போவுக்குச் சென்ற எம்மை அங்கும் சிலர் சூழ ஆரம்பித்துவிட்டனர்.

காலையில் இருந்து நாம் யாருமே தேநீரோ அல்லது குறைந்த பட்சம் தண்ணீரோ கூட அருந்தவில்லை. எனவே பஸ் டிப்போவின் வெளிப்புறத்தில் பொருத்தப்பட்டிருந்த தண்ணீர் குழாயில் தண்ணீர் குடிப்பதற்காக எம்மில் சிலர் சென்றனர். அந்தத் தண்ணீர் குழாய் இணைப்பு டிப்போவுக்குள் இருந்தது. எம்மில் சிலர் அதில் தண்ணீர் குடிப்பதை அவதானித்த அங்கு குழுமி நின்ற போக்குவரத்து ஊழியர்கள் சிலர் உள்ளே சென்று தண்ணீர்வரும் இணைப்பைத் துண்டித்துவிட்டனர்.

எம்மவர்கள் ஏமாற்றத்துடன் ஓடோடி வந்து பஸ்களில் ஏறிக்கொண்டனர். இந்தக் காட்சியைக்கண்ட பொழுது என் மனம் மிகவும் வேதனைப் பட்டது. ஏனெனில் சாதாரண மக்கள் இனவாத அரசியல் தலைவர்களால் நஞ்சூட்டப்படுவது என்பது ஒரு விடயம். ஆனால் இந்த இ.போ.ச ஊழியர்கள் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளுக்காக கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி, அகில இலங்கை ரீதியிலும் எமது புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான "இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம்" பல்வேறு வேலை நிறுத்தப் போராட்டங்களை நடாத்தியுள்ளது. அவர்கள் இன்று சாதாரண மனிதாபிமானம்கூட இல்லாமல் நடந்துகொள்வதைப் பார்த்த போது, இனவாதம் இலங்கையில் எவ்வளவு தூரம் சுயநல அரசியல்வாதிகளால் ஆழமாக வேரூன்ற வைக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

தொழிலாளி வர்க்கத்தை வர்க்கரீதியாக அணிதிரட்டிய இடதுசாரித் தலைவர்களே தமது சந்தர்ப்பவாதத் தேவைகளுக்காக அவர்களை இனவாத அடிப்படையில் கூறுபோட்டதை நினைக்கையில், தற்போதைய நிலைமை வியப்பிற்குரிய ஒன்றல்ல. ஆரம்பகாலங்களில் இடதுசாரிப் போக்குடன் இலங்கையில் முதன்முதலாகத் தொழிற்சங்க இயக்கத்தை ஆரம்பித்தவர் ஏ.ஈ.குணசிங்க. அவரே முதன்முதலாகத் தொழிலாளர்களை இனவாத அடிப்படையில் கூறுபோடும் கைங்கரியத்தை ஆரம்பித்து வைத்தவர்.

தனக்குப் போட்டியாக கம்யூனிஸ்ட் கட்சி தொழிற்சங்கங்களை ஆரம்பித்ததும் அவர் இனவாதத்தைக் கிளற ஆரம்பித்தார். முக்கியமாக அப்பொழுது கொழும்புத் துறைமுகத்தில் இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள கொச்சி நகரத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் பெருந்தொகையில் வேலை செய்தனர். அவர்கள் அங்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளர்களாக இருந்த காரணத்தால், இங்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளர்களாகவும், அதன் தொழிற்சங்க உறுப்பினர்களாகவும் இருந்தனர். இதைப்பொறுக்காத ஏ.ஈ.குணசிங்க கம்யூனிஸ்ட் கட்சியை பகிரங்க மேடைகளில் "கொச்சி கட்சி" என விளித்து மலையாளிகளுக்கு எதிரான இனவெறியை சிங்களத் தொழிலாளர்களிடம் ஊட்ட முயன்றார்.

மலையாளிகளுக்கு எதிராக ஆரம்பித்த இந்த இனவாதம், பின்னர் இந்திய வம்சாவழி மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகத் திருப்பிவிடப்பட்டதுடன், சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைத்த ஐ.தே.கவின் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க மலையக மக்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்கள் ஆக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது.

அதேபோல 1965இல் ஆட்சிக்குவந்த தமிழரசு தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் அங்கம் வகித்த டட்லி சேனநாயக்கவின் ஐ.தே.க தலைமையிலான ஏழு கட்சி கூட்டரசாங்கம் தமிழ் மொழி விசேட மசோதா ஒன்றைக் கொண்டு வந்தபோது, 1966 ஜனவரி 8ஆம் திகதி சிறீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பனவும் அதற்கெதிராக இனவாத அடிப்படையில் பொது வேலைநிறுத்தம் செய்ததுடன், "தோசை, மசாலா வடை" என இனவாதக் கோசமிட்டுக்கொண்டு ஊர்வலமும் போனார்கள்.

இப்படியான ஒரு நிலைமையில் இனவாதம் இருதரப்பு முதலாளித்துவ சக்திகளாலும் யுத்தமாக மாற்றப்பட்ட பின்னர், சாதாரண இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தண்ணீரைக்கூட குடிக்கவிடாது குழாயை மூடியதில் வியப்பதற்கு ஒன்றுமே இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

ஒருவாறு 6 பஸ்களும் எங்கள் எல்லோரையும் ஏற்றிக்கொண்டு அனுராதபுரத்தை விட்டுக் கிளம்பின. காலையிலிருந்து தண்ணீர்கூடக் குடிக்காமல் இருந்த பயணிகள், "அதைப் பற்றிப் பரவாயில்லை, அங்கிருந்து கிளம்பினாலே போதும்" என்ற மனநிலையில் இருந்தனர்.

பஸ்கள் ஒருவாறு மதவாச்சியைக் கடந்து வவுனியாவை நோக்கிச் சென்றன. திடீரென மதவாச்சிக்கும் ஈரற்பெரியகுளத்துக்கும் இடையே பூனாவ என்ற இடத்தில் எமது பஸ்களை சில இராணுவத்தினர் வழிமறித்து நிறுத்தினர். நாம் எல்லோரும் பஸ்களுக்கு உள்ளே இருக்க பொலிசார் மட்டும் இறங்கி இராணுவத்தினருடன் ஏதோ கதைத்தனர். அந்த இடத்தில் ஒருகுளமும் இருந்தது. அதற்கு அருகில் பிரதான வீதி ஓரமாக இராணுவத்தினர் புதிதாக ஒரு முகாமை அமைத்துக் கொண்டிருந்தனர். அந்த வேலையை இராணுவத்தில் உள்ள அதற்கான பிரிவு செய்து கொண்டு இருந்தது.

பொலிசார் இறங்கி அங்கு பொறுப்பாக இருந்த இராணுவ கப்டனுடன் கதைக்கப் போனதும், வேலைசெய்து கொண்டிருந்த இராணுவ வேலையாட்களில் சிலர் தமது வேலைக்குப் பயன்படுத்திய மண்வெட்டி, வாள், பிக்கான், கத்தி என்பனவற்றுடன் பஸ்களுக்குள் ஏறி அதில் பயணம் செய்தவர்களைத் தாக்கத்தொடங்கினர். எமது பஸ்சின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த ஓர் ஐயரையும், அவரது மனைவியையும், அவர்களது பெண் குழந்தையையும் அவர்கள் தாக்க முயன்றனர். பஸ்சில் இருந்தவர்கள் அச்சத்தால் கூச்சலிடத் தொடங்கினர். அவர்கள் தாக்க முற்பட்ட வேளையில் அங்கு எஞ்சி இருந்த பொலிஸாரும் ஒன்றும் தெரியாதது போல அப்பால் சென்று நின்றுகொண்டனர்.

நிலைமை மிகவும் மோசமாக மாறும்போல இருந்தது.

(வதை தொடரும்...)

# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை



இந்த நேரத்தில் அங்கே நடமாட்டம் பெரிதாக இருப்பதில்லை. அதற்காகத்தான் தான் வசிப்பதற்கு அப்படியான இடத்தைத் தேர்ந்தெடுத்திருந்தார்.

கட்டடத்தின் படிக்கட்டுக்கள் இருந்த இடத்துக்கு அருகே சென்றார். மங்கலாக ஒரேயொரு வெளிச்சம் மாத்திரம் இருந்தது. அந்தச் சூழ்நிலை கிளீன் வில்லிக்கு 'ஏதோ தவறு இருக்கிறது' என்பதுபோல ஒரு உணர்வைத் தந்தது. வழமையாக இந்தப் படிகளில் சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

இன்று யாரையும் காணவில்லை.

படிகளில் ஏறத் தொடங்கிய கிளீன் வில்லி எதிரே யாரோ இறங்கி வருவதை முதலில் கவனித்தார். எதிரே வந்த நபரின் முகம் மங்கலான வெளிச்சத்தில் தெரியவில்லை. படிகளில் மேலேறினார். எதிரே வந்த உருவம் கீழிறங்கியது.

இருவரும் படிகளின் நடுவே ஒருவரையொருவர் கடந்த செல்ல வேண்டிய இடம் வந்தபோது. எதிரே வந்த நபர் கடந்து செல்லவில்லை. கிளீன் வில்லியை வழி மறித்தது போல நின்று கொண்டது.

"யாரது" கிளீன் வில்லி பயத்துடன் நிமிர்ந்து பார்த்தார். எதிரே நின்ற நபரின் முகத்தில் இருந்த பெரிய வெட்டுக் காயம்தான் முதலில் தெரிந்தது.

அட்கர்!

எட்வேர்ட்டுடன் இந்த நபரை கிளீன் வில்லி சில தடவைகள் பார்த்திருக்கிறார். எட்வார்ட்டுக்கு குதிரை வண்டி செலுத்தும் சாரதி!

"எட்வார்ட் அனுப்பி வைத்தாரா"

"ஆம். உங்களை அனுப்பி வைக்க"

"எங்கே" இதுதான் கிளீன் வில்லி பேசிய கடைசிச் சொல். அதற்குப் பிறகு அவரது வாயில் இருந்து குரல் வராதபடி கழுத்தில் கயிறு ஒன்று இறுகியது. சுமார் 60 விநாடிகளில் உயிர் பிரிந்தது.

நியூகேட் சிறைச்சாலையில் இருந்து எட்வார்ட்டினால் தப்புவிக்கப்பட்டு. உலகின் பிரமாண்டமான ரயில் கொள்ளைக்கான முன்னேற்பாடுகளில் வெற்றிகரமாக ஈடுபடுத்தப்பட்ட கிளீன் வில்லி. ரயில் கொள்ளையடிக்கப்பட்டதை பார்க்க உயிருடன் இருக்கவில்லை.

ரயில் கொள்ளைக்கான முதலாவது உயிர்ப்பலியாக மாறிப்போனார்.

ஆனால். கிளீன் வில்லி மூலமாக ஸ்காட்லெண்ட் யார்ட்டுக்கு ஏற்கனவே சந்தேகம் துளிர்விட்டிருந்தது. "ஏதோ திட்டமிடுகிறார்கள் - என்னவென்று தெரியவில்லை" என்ற அளவில் மட்டுமே!

சரி. வாருங்கள். இப்போது அந்த நாளைய லண்டனின் மற்றொரு பகுதிக்கு போகலாம்.

அந்த நாட்களில் லண்டன் நகரில் பட்டர்வேர்த் பகுதியில் வீதி ஓயாரமாக வரிசையாக இருந்த சிறிய கடைகள் அனைத்துமே ஒரே மாதிரியான வர்த்தகம் செய்யும் கடைகள். பொருட்களை வாங்கிக் கொண்டு அதன் பெறுமதிக்கான பணத்தை கடன் கொடுக்கும் கடைகள் (அடகு கடைகள்)

பொதுவாகவே நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஆட்கள்தான் இப்பகுதியில் நடமாடுவார்கள். 8 பவுண்ட்ஸ் விலையுள்ள கோட் ஒற்றையோ. நான்கரைப் பவுண்ட்ஸ் பெறுமதியுள்ள தங்கச் செயின் போட்ட கடிகாரம் ஒன்றையோ கொடுத்துவிட்டு. சில ஷில்லிங்ஸ் பணத்தைக் கடனாகப் பெற்று செல்வார்கள்.

அந்த வாரச் சம்பளம் வந்ததும் (சம்பளம் வாராவாரம் வெள்ளிக்கிழமை) பொருட்களை மீட்டுச் செல்ல வந்துவிடுவார்கள்.

வெள்ளிக்கிழமை சம்பளம் வந்து வீட்டுக்குப் போகும் கோட். சனிக்கிழமை பார்ட்டி ஒன்றில் அணியப்பட்டபின். மறுபடியும் திங்கட் கிழமையே அடகு வைக்க கடைக்கு வந்துவிடுவதும் உண்டு (ஞாயிறு கடை விடுமுறை).

இந்தப் பகுதியில் குதிரை வண்டி ஒன்று வந்து நின்றது. அதில் இருந்து இறங்கியவர் பார்வைக்குப் பெரிய பணக்காரர் போன்ற தோற்றத்தில் இருக்கவே. வீதியில் சென்ற பலரும் அவரைத் திரும்பி திரும்பிப் பார்த்து விட்டுச் சென்றார்கள். கடைக்காரர்களும் கண்ணாடி ஜன்னலூடாக எட்டிப் பார்த்தார்கள்.

குதிரை வண்டியில் வந்து இறங்கும் அளவுக்கு வசதி உள்ள நபர் எதற்காக அடகு கடைகள் உள்ள பட்டர்வேர்த் பகுதிக்கு வருகிறார் என்ற ஆச்சரியம் அங்கு பலருக்கு ஏற்பட்டிருந்தது.

குதிரை வண்டியில் இருந்து

(கொள்ளை தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்

139

பா.ராகவன்

பலஸ்தீன் விசயத்தில் இஸ்ரேல் நடந்துகொள்வது முழுக்க முழுக்க அயோக்கியத்தனம் என்பது உலகுக்கே தெரியும். அத்தனை தேசங்களும் தத்தம் கண்டனத்தை எப்போதும் தெரிவித்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனாலும் எந்தத் தைரியத்தில் இஸ்ரேல் தன் முடிவில் விடாப்பிடியாக இருக்கிறது? ஏன் யாராலும் அவர்களை எதுவும் செய்ய முடியவில்லை?

எகிப்து சிரியா. ஜோர்டன் என்று மூன்று தேசங்கள் இணைந்துதான் 1967 யுத்தத்தில் இஸ்ரேலை எதிர்த்தன. இத்தனைக்கும் அவர்களுக்கு சோவியத்



யூனியனின் மறைமுக ஆதரவு வேறு இருந்தது. ஆனாலும் யுத்தத்தில் இஸ்ரேல் தான் வெற்றிபெற்றது. தான் நினைத்ததைச் சாதித்தது. அதற்குமுன்னால் நடைபெற்ற சுயஸ் யுத்தத்தின்போது போர் நிறுத்தத்துக்கு முன்னதாகத் தனக்கு என்ன வேண்டுமோ அதை இஸ்ரேலால் அடைந்து விட முடிந்தது. அதற்கும் முன்னால் நடைபெற்ற 1948 யுத்தத்திலும் இஸ்ரேலுக்குத்தான் வெற்றி.

எப்படி இது சாத்தியம்? அராபியர்களின் வீரம் இஸ்ரேலிடம் எடுபடக்கூடிய தரத்தில் இல்லையா? அது இருக்கட்டும். ஆயிரம் எதிர்ப்புகள் வருகின்றன. ஐ.நா. சபையில் அடிக்கொரு தரம் தீர்மானம் போடுகிறார்கள். இஸ்ரேலுக்கு எச்சரிக்கைகள் விடப்படுகின்றன. ஆனபோதும் எல்லாம் அந்த நேரத்துக்குப் பரபரப்பாக மட்டுமே இருந்து மறைந்துவிடுவது ஏன்?

இவை எல்லாவற்றுக்கும் காரணம். இஸ்ரேலின் தனிப்பெரும் அடையாளமும் மிகப்பெரிய பலமுமான அதன் உளவு அமைப்பு. அதன் பெயர் Ha- Mossad le - Modiin ule- Tafkidim Meyuhadim. சுருக்கமாக மொஸாட். (Mossad).

உலகின் மூன்றாவது பெரிய உளவு அமைப்பு என்று சொல்லப்பட்டாலும் தரத்தில் மொஸாட். சி.ஐ.ஏ., எம்16 ஆகிய அமைப்புகளை காட்டிலும் சிறந்தது. பொதுவாக உளவு அமைப்புகளுக்குரிய அதிகார வரம்புகளைக் காட்டிலும் சற்றே கூடுதல் அதிகாரங்கள் பெற்ற அமைப்பு. ஆனால் மொஸாடில் வெளிப்படையான இராணுவப் பிரிவு கிடையாது. சி.ஐ.ஏ.வில் அது உண்டு. எம் 16 இல் உண்டு. ரஸ்யாவின் கேஜிபியில்கூட ஒரு துணை இராணுவப் பிரிவு உண்டு என்று சொல்வார்கள்.

மொஸாட்டின் பணிகள் மிகவும் எளிமையானவை.

1. ஆட்சிக்கு இடையூறு தரக்கூடியவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுதல்.

2. தேவைப்பட்டால் சத்தமில்லாமல் அரசியல் கொலைகளைச் செய்தல்.

3. யுத்தங்களுக்கான திட்டம் தீட்டி. வழிநடத்திக் கொடுத்தல்.

4. அரபுதேசங்கள். உலகெங்கும் பரவியிருக்கும் அரபு அமைப்புக்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.

இவற்றுள் முதலாவது மற்றும் மூன்றாவது. நான்காவது பணிகளை உலகின் அனைத்து தேசங்களின் உளவு அமைப்புகளும் மேற்கொள்வது வழக்கம் தான். ஆனால் அரசியல் கொலைகளை அதிகாரபூர்வமாகச் செய்வதற்கு அனுமதி பெற்ற ஒரே உளவு அமைப்பு மொஸ்ஸாட் மட்டுமே. இஸ்ரேலில் மட்டுமல்லாமல். தேவைப்பட்டால் உலகின் வேறெந்தப் பகுதியிலும்கூட ஒரு மொஸாட் ஏஜெண்ட். தமது தேசத்தின் எதிரி என்று கருதக் கூடியவர்களைக் கொல்வதற்கு இஸ்ரேல் அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. இது உலகின் வேறெந்த நாட்டு உளவு அமைப்புக்கும் இல்லாத அதிகாரம்.

சி.ஐ.ஏவுக்குக்கூடக் கிடையாது. ஒரே ஒரு நிபந்தனை என்னவென்றால் மொஸாட் உளவாளிகள் எக்காரணம் கொண்டும் யூதர்களைக் கொல்லக் கூடாது! அவ்வளவுதான்.

இஸ்ரேலின் முதல் பிரதம மந்திரியான டேவிட் பென் குரியன் 1951ஆம் ஆண்டு மொஸாட்டைத் தோற்றுவித்தார். ஆரம்பத்தில் பலஸ்தீன் போராளிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக மட்டும் என்று தோற்றுவிக்கப்பட்ட இந்த அமைப்பு தனது சிறப்பான செயற்பாடுகளின் காரணமாக விரைவில் மிகப் பெரியளவில் விஸ்தரிக்கப்பட்டுவிட்டது. இன்றைய திகதியில் டெல் அவிவ் நகரில் இயங்கும் மொஸாடின் தலைமை அலுவலகத்தில் வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டு மாதச் சம்பளம் வாங்கும் ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 2000. ஆனால் கண்ணுக்குப் புலப்படாத மொஸாட் ஏஜெண்டுகள் பல்லாயிரக்கணக்கில் உலகெங்கிலும் உண்டு.

மொஸாட்டின் இணையத்தளத்துக்கு முடிந்தால் போய்ப்பாருங்கள். அழகாக. சுத்தமாக. மிகவும் வெளிப்படையாக அப்பிளிக்கேசன் பாரம் கொடுத்திருப்பார்கள். யார் வேண்டுமானாலும் மொஸாட்டின் ஏஜென்ட்டுகளாக விண்ணப்பிக்கலாம். உங்கள் பெயர். முகவரி. தொலைபேசி எண் உள்ளிட்ட அடிப்படை விவரங்கள் கேட்கப்பட்ட பிறகு வேறு சில வினாக்களும் அங்கே கேட்கப்படும். உதாரணம். நீங்கள் ஒரு யூதர் அல்லாதவர் என்றால் எதற்காக மொஸாட்டுக்காகப் பணியாற்ற விரும்புகிறீர்கள் என்று கேட்பார்கள். இதுதவிரவும் ஏராளமான கேள்விகள் உண்டு. அத்தனை கேள்விகளுக்கும் விடை எழுதியனுப்பினால். அந்த விடைகள் அவர்களுக்குத் திருப்திதரக் கூடுமென்றால் ஒரு வேளை உங்களை யாராவது ஒரு மொஸாட் ஏஜெண்ட் கண்காணிக்க ஆரம்பிக்கலாம்.

(தொடரும்...)

# காதல் ஊழல்



பொன்னம்மா பெண்ணாக இருந்தாலும் இன்னொரு பெண்ணின் நிலை உணரத் தவறி விட்டாள்!

அவள் கூறியது இதுதான்!

"என்னால் ஒன்றும் செய்யமுடியாது. அவன் வெறுத்தால் நான் என்ன செய்வது?"

பொன்னம்மா கூறியதும் உண்மைதான்! அவரவர் வாழ்க்கையை அவரவர் தீர்மானிக்கும்போது எவரும் என்னதான் செய்வது? ஆனால் ஒரு பிள்ளையின் தாய் என்றவகையில் அவனிடம் கதைத்திருக்கலாம்!

மகனின் வாழ்க்கைக்காக சில உபாயங்களை கையாண்டு அவர்கள் காதலை கரைசேர்த்திருக்கலாம். பொன்னம்மா மகனை முழுமையாக நம்பினாள்! ஆனால் தாய்க்கும் துரோகம் செய்தான் விடுதலை!

எல்லாவற்றையும் இழந்த விடுதலை விடிகாலைப் பொழுதில் அழைப்பெடுத்தான். புஸ்பா அழுததைவிட பன்மடங்கு அழுதான்! அமைதியாக இருந்து கேட்டுக்கொண்டிருந்த புஸ்பா "ஏன் அண்ணா அழுறா?" என்று கேட்டாள்!

அவள் தொனியில் அண்ணாவாகவே ஆமோதித்தாள். காதலனை மறந்தாள். காதலன் கொடுத்த காயத்தைச் சுமந்தாள்!

"நீ எல்லாத்தையுமே இல்லமே பண்ணிட்டே. அம்மாவையும் என்னையும் பட்டினி போட்டுட்டே" என்று விடுதலை உச்சரிக்க தன்னிச்சையாக இதயத்தில் இருந்து கண்ணீர் வடிந்தது!

"அண்ணா எதுமே நான் செய்யல்லே. என் விதி இது. உங்கட விதி அது" தன் பிழை தனக்கு தெரிந்தும் தான் நிரபராதியாகவே விடுதலை முயற்சித்தான்!

ஒரு ஆண் சிங்கம் அழுததை புஸ்பாவால் ஜீரணிக்க முடியாமல் அங்கும் இங்கும் புரண்டு அவளும் அழுதாள். இரவோடு இணைய முடியாமல் துடித்தாள்! அவளின் அத்தனை அனுபவங்களையும் மொழிபெயர்த்தாள்! அழுதழுது மொழிபெயர்த்தாள்!

இறுதியாக இரு முடிவுடன் தன் குழப்பத்திற்கு முற்றுப்புள்ளியிட்டாள்!



முதலாவது தன் தாய்! இரண்டாவது விடுதலையின் குடும்பம்!

தன் தாயைப்பற்றி அவள் ஞானம் இப்படிக் கூறியது!

இன்றுவரைக்கும் தொப்புள் கொடி உறவு துண்டிப்பதற்கு காரணம்! அல்லது தொலைவில் வாழ்ந்த காரணம்! தாய் இரண்டாம் திருமணம் ஓடிப்போய்த்தான் செய்தாள்!

நூலைப்போல் சேலை என்று ஊர் உலகம் கதைக்கக்கூடாது! இன்றுவரை தாய் வழி தவறினவளாகவே நினைத்தாள். அந்த தப்புக்கணக்கில் மாற்றம் செய்தாள்! தனக்குப் போல் தன் தாய்க்கும் துர்ப்பாக்கியம் நிகழ்ந்திருக்கலாம் என்பதை திடமாக நம்பினாள்! திட்டவட்டமாக அந்த நிலையில் உறுதியானாள்!

இரண்டாவது முடிவு!

உலகில் வாழும்வரை விடுதலையின் குடும்பத்திற்கு உதவுவது! இரண்டு முடிவுகளும் உறுதியான பின் கைபேசியை எடுத்து விடுதலையின் அழைபேசி இலக்கத்தை அழுத்தினாள்!

(ஊழல் தொடரும்...)

மிஹிந்தலை A.பாரிஸ்



# யாழில் இருந்து 27 முள்ளிவாய்க்கால் வரை

> பிரபாகரன் ஒரு முடிவிற்கு வந்தார். அதாவது இறுதி வரைக்கும்போரை முன்னெடுப்பது என்றும் மக்களையும் தமது போர் வலயத்திற்குள் வைத்து இருந்து போர்புரிவது என்றும் அவ்வாறு போர் புரிந்தால் மக்களின் இழப்புக்களை பார்த்தாவது சர்வதேசம் எமக்கு சாதகமான நிலைப் பாட்டை எடுக்கும் என்றும் முடிவெடுத்த பிரபாகரன் போரை சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் விதத்திலேயே முன்னெடுத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளிற்கு எதிரான போரில் மேற்கத்தேய நாடுகள் தங்களது முழுஆதரவையும் வெளியிட்டதுடன் மட்டும் நிற்காமல் இலங்கை அரசாங்கத்திற்கு சகல வழிகளிலும் சகலவிதமான ஒத்துழைப்புக்களையும் ஒத்தாசை களையும் வழங்கியதுடன் மட்டும் நிற்காமல் இராணுவரீதியில் தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு ஒவ்வொரு நாடுகளும் இராணுவ ரீதியில் எத்தகைய ஒத்துழைப்புக் களை வழங்க முடியுமோ அத்தகைய ஒத்துழைப்புக்களை மேற்கத்தேய நாடுகள் அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு பின்னிற்கவில்லை.

அத்தோடு சீனா, இந்தியா, பாகிஸ் தான் போன்ற நாடுகளும் இராணுவ ரீதியில் விடுதலைப்புலிகளை இலங்கை அரசிற்கு சகல வழி களையும் தமது முழுமையான ஒத்துழைப்புக்களை இறுதியுத்தம் முடியும் வரைக்கும் வழங்கிக் கொண்டிருந்தது.

அதாவது விடுதலைப்புலிகளின் இராணுவத் தளபதிகளும் இலங்கை அரசாங்கத்தின் இராணுவத் தளபதி களும் போரியல்ரீதியில் மிகவும் வலுவானவர்களாகவே காணப்பட்டனர். அதாவ்து விடுதலைப் புலிகளினுடைய பலத்தினை அரசபடையினர் சரியாக ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யத் தவறி இருந்த போதிலும் பின்னைய நாட்களில் சரியான மதிப்பீட்டினை அரசபடைகள் மேற்கொண்டு விடுதலைப் புலிகளிற்கு எதிரான் யுத்தத்தை முன்னெடுத்தனர்.

இருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தாம் சளைத்தவர்கள் அல்ல என்பதைக் காட்டும்வகையில் 2005 - 2009 வ்ரை கணிசமான இழப்புக்களை இராணுவத்திற்கு வழங்கிக்கொண்டே சென்றனர். விடுதலைப் புலிகளின் தளபதிகளான பிரிகேடியர். தீபன், சொர்ணம் கேணல். ரமேஸ், சசிமாஸ்ரர், துர்க்கா, கடாபி, போன்ற முக்கிய தளபதிகள் இலங்கை யரசுடன் போராடி தமது உயிரை தியாகம் செய்தனர். விடுதலைப்புலிகள் அதிநவீன ஆயுதங்களை தம்வசம் வைத்திருந்தும்கூட தலைவர்


வே. அர்ச்சுனன்

பிரபாகரனின் கட்டளைக்கமைய அவ்வாயுதங்களை பயன்படுத்தவில்லை.

தமிழர் தாயகப் பிரதேசங்கள் ஒன்றன்பின் ஒன்றாக விடுபட்ட போதெல்லாம் தனது மனஉறுதி தளராது போராட்டத்தை பிரபாகரனும் அவருடன் இருந்தவர்களும் முன்னெ டுத்தனர். இக்காலகட்டத்தில் இடம் பெற்ற யுத்தத்தின் பின்னணிகள் பல்வேறு காரணங்களாக கூறப்பட்டன. அதிநவீன ஆயுதங்களை பிரபாகரன் பயன்படுத்தியிருந்தால் வெற்றி பெற்றிருக்கமுடியும்.

அதனடிப்படையின்கீழ் விடயங்களை உற்றுநோக்குவோமாக இருந்தால் இலங்கையரசு விடுதலைப்புலிகளுக்கு எதிராக பாரிய படைநகர்வொன்றை கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னும், 2009 காலப்பகுதியில் மும்முனைத் திறப்புடன் வலிந்த தாக்குதலாக நடத்தியிருந்தது. மாவிலாறில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் முள்ளிவாய்க்காலில் நிறைவுபெற்றது.

ஆனால் ஏற்கனவே தமிழீழ விடுதலைப்புலிகளுடனும் அரசாங்கத் துடனும் சமரசப் பேச்சுக்களில் ஈடு பட்டுக்கொண்டிருந்த ஐ.நா சபை செயலாளர் நாயகம் கோபி அனான், யசூசி அகாசி எரிக் சொல்ஹெய்ம் உட்பட பல்வேறு நாடுகளின் இராஜதந்திரிகள் இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருந்த யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர முயன்றனர். காரணம் தற்கொலைத் தாக்குதல்களை விடுதலைப்புலிகள் மட்டுமல்ல உலக அரங்கிலும் எவருமே இத்தகைய செயற்பாடுகளை செய்யக்கூடாது என்ற முக்கிய நோக்கமேயாகும். அமெரிக்காவிற்கு சிம்மசொப்பனமாக விளங்கிய ஒசாமா பின்லேடன் இரட்டை கோபுரம்மீது தாக்குதல் நடத்திய போதே அதாவது தற்கொலைத் தாக்கு தல்களில் ஈடுபவர்கள், அமைப்புக்கள் அனைத்தையுமே ஓரங்கட்ட, தடைசெய்ய அமெரிக்கா முழுமுயற்சி எடுத்தது.

அதனொருகட்டமாகவே கடல், வான், தரை, தற்கொலைப் ப்டையென வளர்ந்து வந்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டமைப்பு மற்றும் வே.பிரபாகரனின் தலைமைத்துவம் இலங்கை நாட்டிற்குள் இருக்கக்கூடாதென்று ஐ.நா சபை மற்றும் உலக நாடுகள் ஒட்டு மொத்தமாக தீர்மானம் எடுத்துக் கொண்டதன் விளைவே போராட்டம் ஓரங்கட்டப்பட்டதற்கு பிரதான காரணமாகும்.

இதன்காரணத்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் பன்னாட்டுப் படை களுடன் சண்டையிட நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். பல நாடுகளையும் எதிர்த்துப் போரிட்டார். இப்போரின் போது 60,000ற்கும் மேற்பட்ட இராணுவப் படையினர் கொல்லப்பட்டதுடன் 20,000ற்கும் மேற்பட்டோர் அங்கவீனர் களாக வாழ்ந்துவருகின்றனர். 2013ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெளிவாக ஒன்றை சொல்லி இருந்தார். அதாவது நடந்து முடிந்த பிரச்சினைகள் நடந்து முடிந்ததாகவே இருக்கட்டும். உயிரிழப்புக்களைத் தவிர ஏனைய அனைத்தும் கட்டி யெழுப்பப்படும். இன்னுமொரு அபாயகரமான யுத்தம் வேண்டாம். நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் என்ற அடிப்படையில் சுதந்திரமான இலங்கைக்குள் வாழ வேண்டுமென்று இருந்தார்.

மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் வெளிப்படையாக இலங்கை மக்களிற்கு சாதகமான அணுகுமுறை களை ஏற்படுத்திக்கொடுத்தாலும்கூட பௌத்த பிக்குகள் ஒருபோதும் தமிழர்களிற்கான தீர்வை உரிய முறையில் பெற்றுக்கொடுப்பதற்கு உடன்படமாட்டார்கள். அவ்வாறு விட்டுக்கொடுத்த வரலாறுகளும் இல்லை இராஜதந்திர ரீதியிலான விடுதலைப் புலிகளிற்கெதிரான பன்னாட்டு படைகளின் யுத்த அணுகு முறைகள் விடுதலைப்புலிகளுக்கு ஒரு பாடமாக அமைந்தது.

பிரபாகரன் ஒரு முடிவிற்கு வந்தார். அதாவது இறுதிவரைக்கும் போரை முன்னெடுப்பது என்றும் மக்களையும் தமது போர் வலயத்திற்குள் வைத்திருந்து போர்புரிவது என்றும் அவ்வாறு போர்புரிந்தால் மக்களின் இழப்புக்களை பார்த்தாவது சர்வதேசம் எமக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுக்கும் என்றும் முடிவெடுத்த பிரபாகரன் போரை சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் விதத்திலேயே முன்னெடுத்தார்.

அதாவது இதில் போரின் இறுதிக் கட்டத்தில் முள்ளிவாய்க்கால் பகுதி வரை கொண்டுசென்றிருந்தது.இப்பகுதி 20km சுற்றுவட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டது. விடுதலைப் புலிகளும் பொதுமக்களும் சேர்ந்து இருந்த காரணத்தால் யார் புலிகள்? யார் பொதுமக்கள்? என்று இனங்காண முடியாத அளவிற்கு நிலமை மோசமான தாக இருந்தது. எஞ்சியிருக்கும் புலிகளையும் முற்றாக அழித்து விடுமாறு கொழும்பிலிருந்து கட்டளை இடப்பட்டிருந்தது. இதன்போது யார் யார் சாகின்றார்களோ அதைப்பற்றிய கவலை யாருக்கும் இருந்ததாகத் தெரியவில்லை.

முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்ட புலிகள் இரசாயன ஆயுதத்தை வைத்திருந்தார்கள் என்று இராணுவம் கூறியிருந்தாலும் இவற்றை ஏன் பாவிக்கவில்லை என்று சந்தேகம் தோன்றுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் 1990ம் ஆண்டே யாழ்ப்பாணக் கோட்டையைத் தாக்கியபொழுது அவர்கள் உருவாக்கிய 'பசிலன் ஷெல்200' என்ற குண்டை பயன் படுத்தி இருந்தனர். அக்குண்டின் அதிர்வால் கோட்டையில் இருந்த இராணுவம் தாமாகவே புறப்பட்டு மண்டைதீவிற்கு சென்றது.

இதனால் கோட்டை புலிகளின் வசமானது. அக்காலத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் போர் ஆயுதங்களை தயாரிப்பதில் தலை சிறந்து விளங்கினர். இத்தகைய சக்திவாய்ந்த குண்டுகளை புலிகள் ஏன் பாவிக்கவில்லை?, புலிகளின் முடிவு எம்மவர்களை முள்ளிவாய்க் கால்வரை எவ்வாறு இழுத்துச் சென்றது என்பதைத் தொடர்ந்து பார்ப்போம். **(தொடரும்)**



# சர்வதேச மூலதனமும் வறுமையும்

தொகுப்பு - வேணு கிருஸ்ணா

பிரான்ஸ் நாட்டு பொருளியல் அறிஞர் தோமஸ் பிக்கெட்டி (Thomas Piketty) எழுதிய, "21 ம் நூற்றாண்டு மூலதனம்" (Capital in the Twenty-First Century) நூல் பரபரப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. அது இலகுவாக வாசித்தறியக் கூடிய நூல் இல்லையென்றாலும், அதை வாசிப்பதற்கு பொருளாதாரம் பற்றிய முன் அறிவு தேவையில்லை.

நெதர்லாந்தில், வருமானம் குறைந்தோருக்கும், ஏழைகளுக்கும் இலவசமாக விநியோகிக்கப்படும் MUG சஞ்சிகையில் (ஜனவரி 2015), அந்த நூல் பற்றிய விமர்சனம் ஒன்று வெளியாகி இருந்தது. அதில் ஒரு காலத்தில் சமத்துவ சமுதாயம் இருந்ததாக கருதப்பட்ட நெதர்லாந்து பொருளாதாரம் குறித்தும் தனியாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

பணக்கார மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் பற்றிய மாயைகளை கொண்டிருக்கும் தமிழர்களும் தெரிந்துகொள்ள வேண்டிய தகவல்கள் அவை. தோமஸ் பிக்கெட்டி பற்றி சிலர் ஏற்கனவே கேள்விப்பட்டிருப்பார்கள். பிரெஞ்சு பொருளியல் அறிஞர், உலகம் முழுவதும் ஒரு சினிமா நட்சத்திரம் போன்று வரவேற்கப்பட்டார். 21ஆம் நூற்றாண்டு மூலதனம் எனும் ஒரு கடுமையான நூல் ஒன்றை எழுதிய சமூக விஞ்ஞானியை பொறுத்தவரையில் அது குறிப்பிடத்தக்க விடயம்.

அவர் ஒரு புதிய கார்ல் மார்க்ஸ் என்று அழைக்கப்பட்டார். ஆனால், பிக்கெட்டி அதை விரும்பவில்லை. அவர் கம்யூனிசத்தை வெறுக்கிறார். ஆயினும், இந்த நூல் சொல்ல வரும் செய்தி இடதுசாரியக் கருத்தியல் என்பதை மறுக்கமுடியாது. உலகத்தில் ஏற்றத்தாழ்வு மிகவேகமாக அதிகரிக்கின்றது. நாங்கள் எதுவுமே செய்யாவிட்டால், 19 நூற்றாண்டுக்கு திரும்பிச் செல்ல வேண்டியிருக்கும். அப்போது கையளவு முதலாளிகள் மட்டுமே பணம் வைத்திருந்தார்கள். பாட்டாளிகள் வருந்தி செத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த முன்னறிவிப்பு தேவையற்ற விடயமல்ல. பிக்கெட்டி சில தோழர்களுடன் சேர்ந்து, மிகவும் விரிவான ஆய்வொன்றை செய்துள்ளார். கடந்த இரு நூற்றாண்டுகளாக, ஐரோப்பா, அமெரிக்காவில் மாற்றமடைந்துவரும் வருமானம், சொத்து அதிகரிப்பை ஆராய்ந்துள்ளனர். அந்த ஆராய்ச்சிக்காக, அவருக்கு ஆதரவாக இடதுசாரி முகாமில் இருந்தும், வலதுசாரி முகாமில் இருந்தும் பலத்த கரகோஷம் எழுந்தது.

அவர் ஒரு இடதுசாரி ஆதரவாளர் என்று யாரும் புறக்கணிக்க முடியவில்லை. தற்காலத்தில் நாங்கள் உழைத்து சம்பாதிப்பதைவிட, பணத்தால் அதிகம் சம்பாதிக்கலாம் என்பதுதான் பிக்கெட்டியின் கூற்றின் சாராம்சம் ஆகும். யாராவது பரம்பரைச் சொத்து வைத்திருந்தால், அவர் பங்குகள், வட்டிகள்மூலம் அதிகம் சம்பாதிக்கமுடியும். அவ்வாறுதான், பணக்காரன் மேலும் பணக்காரன் ஆகிறான். ஏழை மேலும் ஏழை ஆகிறான்.

1980-க்குப் பிறகுதான், மிகப்பெரிய ஏற்றத்தாழ்வு உருவானது. நம்பமுடியாத அளவு சம்பளம் வாங்கிய உயர்மட்ட நிர்வாகிகள் வந்தார்கள். கடந்த சில தசாப்த காலமாக, குறிப்பாக நிதித்துறையில், அதிகூடிய சம்பள விகிதம் 700 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேநேரத்தில், மத்தியதர வர்க்கத்தின் வருமானம் வருடத்திற்கு ஓரிரு சதவீதமே கூடியது. அமெரிக்காவில், 10 சதவீதமாக உள்ள பணக்காரர்கள் அந்த நாட்டின் மொத்த வருமானத்தில் அரைவாசியை சொந்தமாக்கிக் கொள்கின்றனர்.

அளவுக்கு அதிகமாக சம்பாதிப்பவர்கள் குறித்து, பிக்கெட்டி நல்லெண்ணம் கொண்டிருக்கவில்லை. அவர்களது திறமைக்கு மதிப்புக்கொடுத்து அந்த ஊதியம் வழங்கப்படவில்லை. அதிகம் சம்பாதிப்போரின் வர்க்கம் ஒன்று உருவானது. அவர்கள் தமது சம்பளத்தை தாமாகவே தீர்மானித்துக் கொண்டார்கள். அவர்கள் மிகக் குறுகிய காலத்திற்குள் மிகப்பெரிய சொத்துக்களை சேர்த்ததுடன், அவற்றை வரியில்லாத சொர்க்கபுரிகளுக்குள் பதுக்கிவைத்தார்கள். அத்தகைய பணக்காரர்களின் பிள்ளைகள், அந்த செல்வத்தை நிர்வகித்து வந்தாலே போதுமானது. அவர்கள் மென்மேலும் பணக்காரர்கள் ஆகிவிடுவார்கள். ஏனென்றால், சொத்து எந்தளவுக்கு அதிகமோ, அந்தளவுக்கு அது கூடிக்கொண்டே செல்லும்.

இதெல்லாம் அமெரிக்காவில் தான் என்று பலர் நினைக்கிறார்கள். நெதர்லாந்து ஒரு சமத்துவ சமுதாயத்தைக்கொண்ட நாடு. இங்கே அது பொருந்தாது என்று நினைக்கலாம். பிக்கெட்டி தனது நூலில் நெதர்லாந்தைப் பற்றி மிகச்சொற்பமாகவே எழுதியிருக்கிறார். ஆனால், டச்சு சமூக விஞ்ஞானிகள் அதை விரிவாக ஆராய்ந்துள்ளனர். வருமானத்தை பங்கிடுவதை பற்றி மட்டுமே ஆராய்ந்தால், சமத்துவ சமுதாயம் என்பது ஓரளவு சரியாக கருதப்படலாம். ஆனால், சொத்துக்களை பார்த்தோமானால், நெதர்லாந்து நாட்டிலும் மிகப்பெரிய ஏற்றத்தாழ்வு நிலவுவதை அவதானிக்கலாம். 10 சதவீத பணக்காரர்கள், இந்த நாட்டில் உள்ள மொத்த சொத்துக்களில் 60 சதவீதத்தை சொந்தமாக வைத்து இருக்கின்றனர். Van Landschot வங்கியின் தகவலின்படி அது முக்கால்வாசிப் பங்கு.

சொத்து அளவீட்டின்படி, நெதர்லாந்தும் ஏற்றத்தாழ்வு அதிகமான ஐரோப்பிய நாடுகளில் ஒன்றுதான். குறைந்தளவு செல்வம் வைத்திருக்கும், அல்லது கடன்களை நம்பி வாழும், சனத்தொகையின் அரைவாசி மக்களுக்கும், பணக்காரர்களுக்கும் இடையிலான இடைவெளி இங்கேயும் அதிகமாகும். இந்த நாட்டிலும் வறுமை அதிகரிக்கின்றது. ஒவ்வோர் ஆண்டும் அது குறித்து ஆய்வு செய்யும் Sociaal Cultureel Planbureau, Central Bureau voor de Statistiek ஆகிய நிறுவனங்கள் 2014 ம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையிலேயே அது குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும்பாலான டச்சுக்காரர்களுக்கு, அந்த் தகவல் அதிர்ச்சியாக இருக்கும். இன்றைய வயோதிபர்கள், அவர்களது காலத்தில், ஓரளவு ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் ஒன்றில் வளர்ந்துவந்தனர். முப்பதுகளில் ஏற்பட்ட மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி, இரண்டு உலகப் போர்கள், மற்றும் பணக்கார காலனியான இந்தோனேசியாவின் இழப்பு என்பன, எதிர்பாராத அளவிற்கு மூலதனத்தை நொறுக்கி இருந்தன. பலரது தனிப்பட்ட சொத்துக்கள் காற்றில் கரைந்தன.

1950-க்குப் பின்னர், பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையிலான வித்தியாசம் முன்னெப்போதும் இல்லாதவாறு குறைந்திருந்தது. மீள் கட்டுமானத்தில் அனைவரும் கடுமையாக உழைத்தார்கள். நாட்டின் பொருளாதாரம் வருடத்திற்கு 4-5 சதவீதம் என உயர்ந்தது. அதனால் சம்பளங்களும் கூடிக் கொண்டிருந்தன. 1980 வரையில் அப்படியே நடந்துகொண்டிருந்தது. அப்போது வந்த பொருளாதார நெருக்கடி, எல்லாவற்றிற்கும் முடிவு கட்டியது.

1950-க்கும், 1980-க்கும் இடைப்பட்ட காலம் தனித்துவமானது. பொதுவாக பொருளாதாரம், வருடத்திற்கு அதிகபட்சம் 1 அல்லது 2 சதவீதம் தான் உயரும் என்று பிக்கெட்டி கூறுகின்றார். சொத்துக்கள் வருடத்திற்கு 5 சதவீதம் உயரும். சொத்துடமையாளர்களுக்கும், உடைமைகள் அற்ற பிரிவினருக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வு தவிர்க்க முடியாமல் உயர்ந்துகொண்டு செல்லும். நலன்புரி அரசு சிதைக்கப்பட்டதும், பணக்காரர்கள் குறைந்தளவு வரிகட்டுவதும், ஏற்றத்தாழ்வை அதிகரிக்கும் காரணிகள் ஆகும். ஏழைகள் மேலும் ஏழைகள் ஆகின்றனர். அரசுகூட ஏழையாகின்றது.

19ஆம் நூற்றாண்டை திரும்பிப் பார்ப்போம். சமுதாய ஏற்றத்தாழ்வு அபாயகரமானது என்று பிக்கெட்டி எச்சரிக்கை விடுக்கிறார். ஜனநாயகம் அப்போது அகற்றப்பட்டது. அதீத பணக்காரர்கள் அரசியலில் செல்வாக்குச் செலுத்தினார்கள். சொத்துக்கள் ஏதும் வைத்திராதவர்கள், சமுதாயத்திற்கு வெளியே நிற்பதாக உணர்ந்தனர். தோமஸ் பிக்கெட்டி கூறுகிறார். "மேட்டுக்குடியினருக்கு எதிரானவன் என்று என்மேல் குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனால், உச்சியைவிட அடித்தளம் மிகவும் முக்கியமானது "என்று நான் கருதுகிறேன்."

இதற்கொரு தீர்வு இருக்கிறதா? உலகளாவிய முற்போக்கான சொத்து வரி ஒன்றை பிக்கெட்டி முன்மொழிகின்றார். அப்படியான வரி அறவிடுவதற்கு உலகம் முழுவதும் ஒத்துழைக்கும் என்று எதிர்பார்ப்பது ஒரு மாயைதான். அது பிக்கெட்டிக்கும் தெரியும். இருப்பினும், அவர் தனது ஆலோசனையை, வரி சீர்திருத்தம் தொடர்பான விவாதங்களுக்கெல்லாம் ஒரு அளவீடாக குறித்து வைத்திருக்கிறார். அது யதார்த்தமானது.

### பணக்காரன் மேலும் பணக்காரன் ஆகிறான் ஏழை மேலும் ஏழை ஆகிறான்

சோவியத்தின் வீழ்ச்சி எவ்வளவு பெரிய மகிழ்ச்சியாக முதலாளித்துவ ஆதரவாளர்களால் கொண்டாடப்பட்டது. தடைகள் எல்லாம் தகர்ந்துவிட்டன, இனி சுதந்திரக்காற்றுதான் என ஆர்ப்பரிக்கப்பட்டது. பூமியெங்கும் மனித உரிமைகள் நிலை நாட்டப்பட்டுவிட்டது என்று வாய்ச்சவடால்கள் அடிக்கப்பட்டன. 'சித்தாந்தத்தின் முடிவு' என்றும், 'வரலாற்றின் முடிவு' என்றும் அடித்துச் சொல்லப்பட்டது.

நடந்ததென்ன? கோடிக்கணக்கான மக்களின் வாழ்வையும், கனவையும் சூறையாடியிருக்கிறது. நிலங்களிலிருந்தும், ஆலைகளிலிருந்தும் மக்களை தூக்கி வீசியிருக்கிறது. தேசங்களின் சுதந்திரத்தையும், தன்னாட்சி உரிமைகளையும் கிழித்து எறிந்திருக்கிறது. வியர்வையையும், இரத்தத்தையும் உறிஞ்சும் மிருக வன்முறையை நிலைநாட்டியிருக்கிறது. உலகமயத்தின் பலிபீடங்களாக ஏழை நாடுகளும், மூன்றாம் உலக நாடுகளும் வெறிச்சிட்டு காட்சியளிக்கின்றன.

இரக்கமற்ற ஒரு உலகத்திற்கு நாகரிகத்தின் சொர்க்கம் எனச்சொல்லி அழைத்துச்செல்கிறார்கள். பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் நாடுகளுக்கு முதுகெலும்பு இருக்கக்கூடாதென முன்நிபந்தனை விதிக்கிறார்கள். ஏகாதிபத்தியத்தின் இத்தகைய அராஜக செயல்களால் பாதிப்புக்குள்ளாகி சீர்குலைக்கப்பட்ட அனுபவம் இந்தியாவிற்கு அதிகம்.

பதினாறாம் நூற்றாண்டில் மூலதனத்தின் அகோரப்பசிக்கு பரிமாறப்பட்ட செழிப்புமிக்க உணவு 'இந்தியா'. அதன் உற்பத்தி சக்திகளின் நாடி நரம்புகளையெல்லாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கொடூரப் பற்கள் கடித்துக் குதறின. வெறிபிடித்த ஓநாய்களுக்கு நடுவே மாட்டிக்கொண்ட பச்சைக் குழந்தை போல இந்தியச் சமூகம் (கூடவே இலங்கைச் சமூகங்களும்தான்) மாட்டிக்கொண்டது. வர்ணிக்கமுடியாத, வேதனைமிக்க, அந்த நானூறு ஆண்டுகால தாக்குதல்களின் வலியும் வடுவும் இன்னும் நீங்கவில்லை. கிழக்கிந்தியக் கம்பெனியின் கப்பல்கள் வந்த தடம் இன்னும் அழியவில்லை. ஜாலியன் வாலாபாக்கிலும், சிட்டகாங்கிலும் கேட்ட மரண ஓலம் நெஞ்சைவிட்டு அகலவில்லை. கள்ளிக்கோட்டையில் வந்திறங்கியவர்களின் பாதச்சுவடு கொஞ்சம், கொஞ்சமாக பெரிதாகி இன்று தேச எல்லைகளின் பரப்பளவுகளைத் தாண்டி அதன் பெருவிரல் நீண்டு வளர்ந்திருக்கிறது.

1990களில் புதிய பொருளாதாரக் கொள்கைகள் என்றபெயரில் பன்னாட்டுக் கம்பெனியின் வேட்டைக்காக இந்தியாவின் எல்லைகள் திறக்கப்பட்டன. 12 ஆண்டுகளுக்குள் இந்தியா 55 ஆண்டுகள் உழைத்து சேகரித்து உருவாக்கிய பொருளாதாரத் துறை கட்டுமானங்கள் எல்லாம் அரிக்கப்பட்டுவிட்டன. தேசத்தின் மதிப்புமிக்க சொத்துக்களான பொதுத் துறை எல்லாம் அடிமாட்டு விலைக்கு தாரைவார்க்கப்படுகின்றன.

ஆட்குறைப்பு எல்லா மட்டத்திலும் அமல்படுத்தப்படுகிறது. வேலையின்மையின் கொடூர தாக்குதல்களால் வாழ்க்கை நிலைகுலைந்து போயிருக்கிறது. ஒளியிழந்த கண்களோடு கோடிக்கணக்கில் இளைஞர்கள் தவிக்கிறார்கள். ஒருபுறம் வேலைவாய்ப்பு குறைந்துகொண்டே போகிறது. இன்னொருபுறம் வேலையின்மை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஏற்கனவே இருந்த தொழில்கள் அழிந்துவருகின்றன.

(21ஆம் பக்கம் பார்க்க...)



## ஏமாற்றிப் பிழைக்கும்

# அரசியல் நாகரிகம்

**அளவெட்டி ப.உதயகுமார்**

**ஆட்சி** மாறி புதிய அரசு ஒன்று அமைந்துவிட்ட பின்னர் பல இலட்சம் மக்களின் எதிர்பார்ப்புக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசைகளிலும், ஒவ்வொரு கோணங்களிலும், வடிவங்கள், எண்ணங்கள் என்று எதிர்பார்த்த வண்ணமே உள்ளனர்.

மீளக்குடியமராத மக்கள் தம்மை தங்களின் சொந்த இடத்துக்கு மீளவும் அனுப்புவார்களா? என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர். விவசாயிகள் மண்ணெண்ணெய் விலைகுறையுமா? தமது உற்பத்திப் பொருட்களுக்கு சந்தைவாய்ப்புடன்கூடிய நல்ல விலை கிடைக்குமா? என்று எதிர்பார்க்கின்றனர்.

ஒவ்வொரு ஏழைக் குடிமகனும் உணவுப் பொருட்களின் விலை குறையுமா?, பட்டினி வாழ்வுக்கு விடை கிடைக்குமா? என்று ஏங்கி நிற்கின்றனர்? சிறையிலுள்ளோர், விசாரணைகளின்றி சிறைகளில் அடைக்கப்பட்டுக் கிடப்பவர்கள் வெளி உலகை காண்போமா?? என்ற எதிர்பார்ப்பிலே உள்ளனர்.

இப்படியாக இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் ஏதோ, ஏதோ வகைகளிலே விடிவு கிடைக்குமா?, வாழ்வு விடியுமா?, வாழ்வு மலருமா?? என்றெல்லாம் எதிர்பார்த்துக் கிடக்க தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கவலையும், எதிர்பார்ப்பும் வேறுவிதமாக உள்ளன. இதுவரை காலமும் அரசியலில் இருந்து எதையுமே சாதிக்காதவர்கள், சாதிக்கத் தெரியாதவர்கள், இப்போதைய புதிய அரசிடம் விடுத்துள்ள வேண்டுகோள் விசித்திரமாயுள்ளது! ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது.

நான் முன்னர் குறிப்பிட்ட ஒவ்வொரு குடிமகன்களின் எதிர்பார்ப்புக்களில் நியாயம் இருக்கின்றது. அவர்களுடைய எண்ணம், சிந்தனை எல்லாமே சரியானதே. ஆனால் கூட்டமைப்பின் எதிர்பார்ப்புக்களில் முக்கிய ஒன்றாக இருக்கும் விடயமும் அதனால் அவர்கள் கவலையடைவதும் ஒவ்வொரு தமிழனும் வெட்கித் தலை குனிய வேண்டிய நிலையிலே உள்ளோம்.

தமிழர்களுக்கு என்றும், தமிழ் பிரதேசமெங்கும் விடிவு, விடுதலை தேவையாக உள்ளது. மக்களின் ஒரு பகுதி இன்னும் விடுபடாத பகுதியாக உள்ளது. அறுபது வருடப் போராட்டம் மக்களை அகதிகளாக்கி அழித்துள்ளது! காணாமல் போனவர்கள், சிறைகளிலே அடைபட்டுக் கிடப்பவர்கள் என்றெல்லாம், துன்பமும் துயரமும் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் தாண்டி கூட்டமைப்பினர் தங்கள் அரசியலுக்கான எதிர்காலத்தையே பார்க்கின்றனர். அதற்காக தங்களுடைய எதிர்பார்ப்புக்களுக்கு இடையூறாக இருப்பவர்களை ஓரங்கட்டவேண்டும். புதிய அரசிலே சேர்க்கக்கூடாது என்று புதிய அரசிடம் போய்ச்சொல்லி தமிழ் அரசியல்வாதிகள் என்றபெயரிலே தமிழர்களின் தன்மானத்தை அடமானம் வைத்துவிட்டு வந்துள்ளனர்.

மலர்ந்துள்ள புதிய அரசிடம் முதன் முதலாக பேசப்போனவர்கள் ஒட்டுமொத்த தமிழர்களின் கோரிக்கை, நியாயங்களை முன்வைத்திருந்தால் புதிய அரசும் தமிழர்களின் கோரிக்கை நியாயம் பற்றி சிந்தித்திருக்கும். ஆனால் இவர்கள் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) கேட்டது கேவலமானது என்று ஒவ்வொரு தமிழனும் எண்ணி வேதனைப்படும் நிலையை உருவாக்கியுள்ளனர்.

அதாவது அமைந்துள்ள புதிய அரசிலே ஈழமக்கள் ஜனநாயக கட்சி தலைவரும், முன்னாள் அமைச்சருமான, டக்ளஸ் தேவானந்தா, மற்றும் கிழக்கு மாகாண அமைச்சர் கருணா, முன்னாள் முதல்வர் பிள்ளையான், மற்றும் மன்னார் மாவட்டத்தின் பிரதிநிதியாக உள்ள றிசாட் பதியுதீன் ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகளோ, அன்றி சேர்க்கவோ கூடாது என்று புதிய அரசுக்கு இடித்துரைத்ததன் மூலம் தவறிழைத்துள்ளனர்.

மேற்கூறப்பட்ட கட்சியினரும், அதாவது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வடக்கிலும், கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் பிள்ளையான் மற்றும் கிழக்கு மாகாண பிரதி அமைச்சர் கருணா ஆகியோருடன் மன்னார் மாவட்டத்திலே முஸ்லிம் சகோதரரான கைத்தொழில் வணிகத்துறை மந்திரியுமான றிசாட் பதியுதீன் ஆகியோர், தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு அச்சுறுத்தலாக உள்ளனர். அதாவது இக்கட்சியினர் தாம் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதேசங்களில் கணிசமான வாக்கு வங்கியை வைத்துள்ளனர். அது மட்டுமின்றி வடக்கு, கிழக்கு, மன்னார், ஆகிய மூன்று பகுதிகளில் உள்ள அரசியல்வாதிகள் அமைச்சர்களாகவும் உள்ளனர்.

இந்த அமைச்சுப் பதவிமூலம் அரசிடம் இருந்து பெருந்தொகையிலான நிதிகள் பெறப்பட்டு பாரிய அபிவிருத்திப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இதுமட்டுமின்றி அரசதுறை வேலைவாய்ப்புக்கள், மற்றும் வசதிகளற்றவர்களுக்கான வாழ்வாதார உதவிகள், வீதிகள், மின்சாரம், பாலங்கள், பெருந்தெருக்கள், ரயில் பாதைகள், விவசாய, மீன்பிடி கைத்தொழில்கள், என்றெல்லாம் பரந்துவிரிந்து உதவிகள் செய்தும் வருகின்றனர்.

இதனால் மக்கள் இந்த அமைச்சர்களை மனதார நேசிக்கின்றனர். விரும்புகின்றனர். வாக்களிக்கின்றனர்.

இதன்மூலம் மக்கள் சக்திகளாக இக்கட்சிகள் வளர்ந்துவிட்டால் தங்களை யெல்லாம் மக்கள் ஓரம் கட்டிவிடுவார்கள், தங்களுடைய அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு அந்தரிக்கின்றது.

அச்சத்தின் வெளிப்பாட்டை உணர்த்தும் வகையிலே புதிய ஜனாதிபதி தமிழ், முஸ்லிம் தலைவர்களை அரசில் சேர்க்கக் கூடாது என்று கேட்டுள்ளனர். உண்மையில் இது பெரிய முட்டாள்தனமான விடயம். ஏனென்றால் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் ஏராளம் பிரச்சினைகள் பரந்துபட்ட வகையிலே உள்ளன. இன்னமும் மீளக் குடியேறாத நிலையிலே வலி.வடக்கின் ஒரு பகுதி, மற்றும் கிழக்கு பகுதியின் சம்பூர்ப் பகுதியிலும் குறிப்பிட்டளவு மக்கள் இன்னமும் மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை.

அத்துடன், ஆறாத புண்ணாக இனப் பிரச்சினை தீர்வின்றி தொடர்கதையாக உள்ளது! காணாமல் போனவர்களின் கதி என்னவென்று இன்னும் தெரியாது. இவர்கள் இலங்கையிலுள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா?, இல்லை மரணம்வரை சென்றுவிட்டதா? என்று அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. யுத்தம் செய்தவர்களும், யுத்தச் சுவடுகள்கூட இல்லாமல்போன பின்பு, யுத்தம் நடைபெற்றவேளை அவர்களுக்கு உதவியவர்கள், சாப்பாடு கொடுத்தவர்கள், அடைக்கலம் கொடுத்தவர்கள் என்று கைதானவர்கள் இன்னமும் சிறையிலே இருந்து கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்களின் விடுதலை முக்கியமான விடயமாகவுள்ளது.

> ஒவ்வொரு ஏழைக் குடிமகனும் உணவுப் பொருட்களின் விலை குறையுமா?, பட்டினி வாழ்வுக்கு விடை கிடைக்குமா? என்று ஏங்கி நிற்கின்றனர்? சிறையிலுள்ளோர், விசாரணைகளின்றி சிறைகளில் அடைக்கப்பட்டுக் கிடப்பவர்கள் வெளி உலகை காண்போமா?? என்ற எதிர்பார்ப்பிலே உள்ளனர்.
> இப்படியாக இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் ஏதோ, ஏதோ வகைகளிலே விடிவு கிடைக்குமா?, வாழ்வு விடியுமா?, வாழ்வு மலருமா?? என்றெல்லாம் எதிர்பார்த்துக் கிடக்க தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கவலையும், எதிர்பார்ப்பும் வேறுவிதமாக உள்ளன.



இன்னமும் எவ்வளவோ உள்ள போதிலும் முக்கியமான விடயங்களான முன்சொல்லப்பட்டவைகளுக்கு கூடிய அழுத்தம் கொடுத்திருக்கவேண்டும். இதை விட்டுவிட்டு, தமிழ் மக்களுக்குத் தேவையான விடயங்களுக்கு முன்னுரிமையின்றி, ஆளுநர் மாற்றம், பிரதம செயலாளர் மாற்றம், அரச அதிபர்கள் மாற்றம் அரசியல்வாதிகளைச் சேர்க்கக் கூடாது என்றுதான் புதிய அரசிடம் அழுத்திக் கேட்டதன்மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தமிழ் மக்களின் உரிமைமீது எவ்வளவு தூரம் கரிசனை வைத்துள்ளது என்பதனை புரிந்துகொள்ள முடிகின்றது.

மைத்திரி அரசின் நூறு நாள் வேலைத் திட்டத்தில் பலவற்றை கட்டாயப்படுத்திக் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம் என்று இவர்கள் நம்பவேண்டும்.

இவற்றையெல்லாம் விடுத்து டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சராக்கக் கூடாது என்று கேட்டுள்ளனர். முன்னாள் அமைச்சருக்கு தமிழ் மக்களின் வாக்கு வங்கி கணிசமான அளவுக்கு இம்முறை நடைபெற்ற தேர்தலில் கூடியுள்ளது! இது கூட்டமைப்புக்கு அதிர்ச்சியாக உள்ளது.

இதைவிட கிளிநொச்சி, முல்லைத்தீவிலும் பெருமளவு வாக்காளர்கள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிப் பக்கம் சேர்ந்துள்ளனர். இதுவும் இவர்களுக்கு பெரும் அச்சநிலையை உண்டு பண்ணியுள்ளது.

முன்னாள் அமைச்சர் தேவானந்தாவுக்கு மீண்டும் அமைச்சுப் பதவி கிடைத்தால் அவருடைய செல்வாக்கு இன்னும் அதிகரிக்கும், மக்களின் தேவைகளை அவர் நிறைவேற்றி வரும்போது கூட்டமைப்பு சும்மா இருந்தால் மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிடுவார்கள். இதன்மூலம் அரசியல் வாழ்வு சூனியமாகிவிடலாம் என்னும் அச்சம்தான் கூட்டமைப்பினரின் கவலைக்கு காரணம் என்றே அரசியல் அவதானிகள் முதல் பொதுமக்களும் நம்புகின்றனர்.

தானும் தின்னமாட்டன் தள்ளியும் நிற்கமாட்டன் என்ற வார்த்தைகள் கூட்டமைப்புக்கு மிகவும் பொருந்தக் கூடியதாக உள்ளது! இவ்வளவு காலமும் மகிந்த அரசிடம் பின்கதவினால் உதவி பெற்றவர்கள், இப்போது புதிய ஜனாதிபதியின் பக்கம் சாய்ந்துள்ளனர். தனிநாடு கேட்கவில்லை. பிரிவினைவாதம் கேட்கவில்லை. ஈழமும் வேண்டாம். ஒற்றை ஆட்சிமூலம் தீர்வுவேண்டும் என்று கேட்டுள்ளனர்.

உண்மையில் கூட்டமைப்பின் இந்த முரண்பட்ட வீரவசனங்களால் அவர்களுக்கு வாக்களிக்கும், ஆதரவுவழங்கும் ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனியவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஈழம் வேண்டாம், பிரிவினை வேண்டாம் என்று பல வருடங்களுக்கு முன்னமே சொல்லியிருந்தால் முள்ளிவாய்க்கால் யுத்தம் வந்திருக்காது! இலங்கையிலே சிங்களவர்களும், தமிழர்களும் முட்டி மோதி பகை தேடவேண்டியே வந்திராது! காலத்துக்குக் காலம் நேரத்துக்கு நேரம் என்று சிந்திக்கும் கூட்டமைப்பு தமிழர்களை படுகுழியிலேதான் தள்ளிவிழுத்துமே தவிர ஒருபோதும் நியாயமாக நடந்து கொள்ளப்போவதில்லை.

குறிப்பாக, புதிய அரசுப் பக்கம் தாவியவர்கள் புதிய அரசும் எங்களை ஏமாற்றிவிட்டது. துரோகம் செய்துவிட்டது என்று சொல்லும் காலம் வெகுதூரத்திலே இல்லை. புதிய அரசின் வெற்றி பெற்ற மூன்றாம் நாளே தமிழர்களின் வாக்குகளை கேட்டு பெற்றுக்கொள்வதும் பின்பு ஏமாற்றுவதும் உங்கள் பரவணிக் குணம் என்று மனோகணேசன் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார்.

சுன்னாகம் பகுதி கிணறுகளில் கழிவு ஒயில் நீருடன் கலந்துள்ளதை காரணம் காட்டி கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மக்களைகூட்டி அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்துள்ளார்.

சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றொரு எதிர்ப்பையும், அதேவேளை உண்மையினையும் கக்கியுள்ளார்.

பேச்சுக்கு நாம் தயார் தீர்வுத் திட்டத்தை உருவாக்க அரசு தயாரா? என்றும் அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எந்த ஏற்பாடும் இல்லை. குறைந்தது தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கன எந்த முயற்சியும் இல்லை. அது குறித்து சொற்றொடர் எதுவும் 100 நாள் வேலைத் திட்டத்தில் இல்லை என்றும் உண்மையைச் சொல்லியுள்ளார் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

இவை புதிய அரசை எதிர்க்கத் தொடங்குவதன் ஆரம்பப் புள்ளியாகவே கருதலாமா? நல்லது நடக்கும் என்று நம்பிக் கொண்டிருப்போருக்கு ஏமாற்றமே மிச்சமானது என்பதனை புரிந்துகொள்ள நீண்டகாலம் தேவைப்படாது என்று நம்பலாம்.



# பாப்பா முரசு



வாரம் ஒரு திருக்குறள்

**கேள்வி**

**416**

**எனைத்தானும் நல்லவை**
**கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**

எவ்வளவு சிறிதே ஆயினும் நல்லவற்றைக் கேட்டறியவேண்டும். கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும்.

# ஒரு வரம் மூன்று பலன்கள்

பாப்பா முரசு சிறுகதை



ஒரு ஊரில் ஏழை மீனவன் ஒருவன் இருந்தான். அவனுடைய அம்மாவிற்குக் கண்பார்வை இல்லை. அவனுக்கு வெகு நாட்களாகக் குழந்தையும் இல்லை. ஒரு நாள் அவன் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றான். அப்போது, கரையில் ஒதுங்கிக் கிடந்த பெரிய மீனொன்று அவனைப் பார்த்துக் கெஞ்சியது.

"மீனவனே, நான் சாதாரண மீன் இல்லை. கடலில் உள்ள மீன்களுக்கெல்லாம் தலைவன். ஆழ்கடலில் வசிக்கும் நான், ஒரு பெரிய அலையில் சிக்கி இந்தக் கரைப்பகுதிக்கு வந்து விட்டேன். இப்போது நீந்த முடியாத அளவிற்கு மிகவும் சோர்வாக உள்ளேன். எனக்கு ஒரு உதவிசெய் மீனவனே. என்னை பத்திரமாக ஆழ்கடலுக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டால் உனக்கு ஒரு வரம் தருவேன்."

மீனவன் அந்த மீனைத் தூக்கி படகில் போட்டான். மிகவும் கஷ்டப்பட்டு படகைச் செலுத்திக் கொண்டுபோய் மீனை நடுக்கடலில் விட்டான். பிறகு, என்ன வரம் கேட்பது என்று யோசித்தான். அவனால் ஒரு முடிவு எடுக்க முடியவில்லை. எனவே அவன் சொன்னான்.

மீன்களின் ராஜாவே, நீ சொன்னபடி நான் செய்துவிட்டேன். ஆனால், என்ன வரம் கேட்பது என்று எனக்கு இப்போது தெரியவில்லை. வீட்டுக்குச் சென்று மற்றவர்களிடம் கலந்து ஆலோசித்துவிட்டு நாளை வந்து கேட்கிறேன்.

மீனும், "நீ ஒரே ஒரு வரம்தான் கேட்க வேண்டும்" என்று நினைவுபடுத்தி நன்றிகூறிச் சென்றது. மீனவன் வீட்டுக்குச் சென்றான். வீட்டில் பெற்றோரிடமும், மனைவியிடமும் நடந்ததைக் கூறினான். ராஜா மீனிடம் என்ன வரம் கேட்பது என்று ஆலோசித்தான்.

அவனது தந்தை கூறினார்,

மகனே, நாம் நெடுங்காலமாக இந்த ஓட்டைக் குடிசையில்தான் வாழ்ந்து வருகிறோம். நமக்கு ஒரு நல்ல வீடுவேண்டும் என்று ராஜா மீனிடம் கேளேன்.

அடுத்ததாக அவனது அம்மா சொன்னார்கள்,

மகனே, எனக்குக் கண்தெரியாமல் மிகவும் சிரமமாக இருக்கிறது. என் கண்கள் பார்வை பெற வேண்டும் என்று அந்த மீனிடம் கேள்...

கடைசியாக மனைவி கேட்டாள்,

நமக்குத் திருமணமாகி பல வருடங்கள் ஆகி விட்டன. இன்னும் நமக்கு ஒரு குழந்தை இல்லை. எனவே, அந்த மீனிடம் நமக்கு ஒரு குழந்தை வேண்டும் என்று கேளுங்கள்.

மறுநாள், அந்த மீனவன் கடலுக்குச் சென்று ராஜா மீனிடம் ஒரே ஒரு வரம்தான் கேட்டான். அந்த ஒரு வரத்தில் அவன் பெற்றோரின் ஆசையும், அவன் மனைவியின் விருப்பமும் நிறைவேறின. அப்படி அவன் என்ன வரம் கேட்டான்?

**விடை: என் மகன் கீழே விளையாடிக் கொண்டிருப்பதை, எங்கள் வீட்டு மாடியிலிருந்து என் பெற்றோர் பார்த்து மகிழவேண்டும் என்பதுதான் அவன் கேட்ட வரம்.**

| பிறமொழிச் சொல் | | தமிழ்ச் சொல் |
|---|---|---|
| அங்கத்தினர் | - | உறுப்பினர் |
| அதிகாரி | - | அலுவலர் |
| அதிபர் | - | தலைவர் |
| அலங்காரம் | - | ஒப்பனை |
| ஆசீர்வாதம் | - | வாழ்த்து |
| இலஞ்சம் | - | கையூட்டு |
| இலாபம் | - | வருவாய் |
| உத்தரவு | - | கட்டளை |
| உபயோகம் | - | பயன் |
| உத்தியோகம் | - | பணி |
| கிராமம் | - | சிற்றூர் |
| குமாரன் | - | மகன் |
| குமாரத்தி | - | மகள் |
| விஞ்ஞானம் | - | அறிவியல் |
| சாவி | - | திறவுகோல் |
| ஜனங்கள் | - | மக்கள் |
| நஷ்டம் | - | இழப்பு |
| சரித்திரம் | - | வரலாறு |
| நிபுணர் | - | வல்லுநர் |
| அபாயம் | - | பேரிடர் |
| ஆயுள் | - | வாழ்நாள் |
| கஜானா | - | கருவூலம் |
| அனுபவம் | - | பட்டறிவு |
| சபை | - | அவை |
| சாதம் | - | சோறு |
| சிபாரிசு | - | பரிந்துரை |
| சேவை | - | தொண்டு |
| ஜாக்கிரதை | - | விழிப்பு |
| தினம் | - | நாள் |
| பத்திரிகை | - | செய்தித்தாள் |
| வைத்தியர் | - | மருத்துவர் |
| சந்தா | - | கட்டணம் |

# மின்சார மரம்



பிஞ்சுகளே, உங்கள் பெற்றோர்களிடம் நீங்கள் தினமும் ஏதாவதொரு கட்டணம் கட்டவேண்டும் என்று பணம் கேட்டால், பாட்டி, தாத்தா என்ன சொல்லுவார்கள்? பணம் என்ன மரத்திலா காய்க்கிறது?

தினமும் அந்த பீஸ் இந்த பீஸ் என கேட்டுக்கிட்டு இருக்கிறாயே என்பார்கள்தானே. இனி யாராவது உங்களிடம் அப்படிச் சொன்னால், ஆமாம், பணம் மரத்திலும் காய்க்கும் என்று சொல்லுங்கள்.

மரத்திலிருந்து மின்சாரம் பெறும் முறையினைக் கண்டறிந்துள்ளனர் பிரான்ஸ் நாட்டினர்.

பெரிய பெரிய காற்றாடிகளை அமைத்து காற்றாலை மின்சாரம் பெறுவதைப் பார்த்திருப்பீர்கள் - படித்திருப்பீர்கள். இதன் குறுகிய வடிவமே மரத்திலிருந்து மின்சாரம் பெறும் முறையாகும்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நியூ விண்ட் நிறுவனத்தில் பணிபுரியும் பொறியாளர்களால் உருவாக்கப்பட்டு, காற்று மரம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. 25 அடி உயரம் கொண்ட காற்று மரத்தில் 100 இலைகள் இருக்கும். சின்னச் சின்னக் காற்றாலைகள் தான் இங்கே இலைகள் எனக் குறிப்பிடப்படுகின்றன. காற்றில் இந்தக் காற்றாலைகள் சுழலும்போது மரமானது மின்சாரத்தை உற்பத்தி செய்துவிடுகிறது.

இந்தக் காற்று மரம் குறித்து இதன் நிறுவனர் ஜெரோம் லாரிவியர், பெரிய காற்றாலைகளுக்குக் குறிப்பிட்ட வரையறைகள் உண்டு. அதிகமாகக் காற்றுவீசும் இடங்களில் மட்டுமே அவை பயன்தரும். ஓர் ஆண்டில் ஐந்து அல்லது ஆறு மாதங்கள் மட்டுமே பயன் கிடைக்கும். காற்று மரத்தில் அப்படி அல்ல. நெரிசலான நகரத்தின் வணிக வளாகங்களின் வாசலில்கூட இந்த மரத்தினை அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்யமுடியும்.

சுமார் ஒன்றரை அடி உயரத்திலிருக்கும் இலைகள் என்னும் பிளாஸ்டிக் சுழல் பிளேட்டுகளில் காற்று உள்ளே சென்றதும் இவை சுற்றி, விசையானது மின்சாரமாக மாற்றப்படும். இயற்கையான இலைகளிலிருந்தே நார் எடுத்து இந்த மரத்துக்கு இலைகளை உருவாக்கும் திட்டம் உள்ளது. காற்று மரத்தை மொட்டை மாடிகள், சாய்வான வீட்டுக்கூரைகளிலும் அமைப்பதுடன், இதிலேயே சூரிய மின்சாரத்தை உருவாக்கும் தகடுகளைப் பதித்து இரண்டு வகைகளில் பயன்பெறலாம் என்று கூறியுள்ளார்.

மேலும், 2015ஆம் ஆண்டு விற்பனைக்கு வர உள்ள இந்த மரத்தின் தற்போதைய விலை 22 இலட்சம் ரூபாயாம். அடுத்தடுத்த ஆண்டுகளில் விலை குறையும் வாய்ப்பு உள்ளதாகவும், நல்ல காற்று வரும் இடத்தில் அமைத்த ஓர் ஆண்டிலேயே முதலீடு செய்த பணத்தை எடுத்துவிடலாம் என்றும் ஜெரோம் கூறியுள்ளார்.



**இந்த வித்தியாசமான பறவையில் ஐந்து பறவைகளின் பாகங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?**

விடை:
1.கழுகு 2.அன்னம் 3.வாத்து 4.நெருப்புக்கோழி 5.மயில்





# செம்மொழி

**தடுக்கி விழுந்தால் அ... ஆ...**
**சிரிக்கும்போது இ.... ஈ....**
**சூடுபட்டால் உ... ஊ...**
**அதட்டும்போது எ... ஏ...**
**வியப்பின்போது அய்**
**வக்கணையின்போது ஒ.. ஓ..ஔ..**
**விக்கலின்போது ஃ**
**என்று தமிழ் பேசி**
**மற்ற நேரம் வேற்றுமொழி பேசும்**
**தமிழரிடம் தவறாமல் சொல்**
**உன்மொழி செம்மொழியென்று.**

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 08.02.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1081**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1079**

மு.தாரணி,
பிரதான வீதி, வவுனியா.

பரிசுக்குரியவர்: 1079

**பாராட்டுக்குரியவர்கள்**

01. து.சானுஜா, மாசார், பளை.
02. என்.ஆயிஷா, நிந்தவூர், மட்டக்களப்பு.
03. ஜெ.மருதன், முள்ளியவளை, முல்லைத்தீவு.
04. ச.யதுர்சன், கண்டி வீதி, நுணாவில்.
05. ப.அபி, பேராதனை, கண்டி.
07. வி.யாழினி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை.
08. தா.ரொனிசா, கடற்கரை வீதி, மன்னார்.

# சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



# உண்மைத் தொடர்

அதிர் இடி 75

அமீன் மெடினா
வீட்டில் இருக்கிறானா?
சியம்பாவுக்கு புதிதாக
மேலும் ஒரு பயம்
சேர்ந்துகொண்டது.
"அமீன் கண்டு
பிடித்துவிடுவானோ?,
அவளே உளறிக்
காட்டிக்கொடுத்து
விடுவாளோ? என்று"
பயந்தார். அன்று
இரவு முழுக்க
சியம்பா தூங்கவே
இல்லை.

இனி...



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

புத்தியை சலபம் வென்று விட்டது என்று விரக்தியாகச் சிரித்தாள் மெடினா. சியம்பாவுக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இங்கு வதைப் பட்டால் நாட்டைவிட்டுப் போய்விடுங்களேன்... என்றார். அதனைத்தவிர அவருக்கு வேறு யோசனை தோன்றவில்லை.

மெடினா அதற்கும் விரக்தி யாகச் சிரித்தாள். அது முடியாது. முடிந்திருந்தால் எப்போதே போயிருப்பேன் என்றாள்.

சியம்பா சங்கடத்தோடு விடைபெற்றார். மெடினாவை நினைக்கமுடியாதளவுக்கு பயம் அவரைப் பிடித்தாட்டியது.

இன்றே நாட்டைவிட்டு ஓடி விடலாமா? என்று நினைத்தார். குடும்பத்தோடு தப்பிச்செல்வது தற்போது உகந்தது அல்ல என்பதால் அந்த நினைப்பைத் துறந்தார்.

வீடு திரும்பிய பின்னர் தொலைபேசி மணி ஒலித்தது.

அதனை எடுக்கவே பயமாக இருந்தது. தொடர்ந்து அடித்த படியே இருந்ததால் சென்று எடுத்தார்.

அமீன்தான் பேசினான்.

குரலைக் கேட்டதுமே சியம்பாவுக்கு உதறல் எடுத்தது.

"என்ன மெடினா கேட்டதை யெல்லாம் செய்துகொடுத்தீரா? என்று அமீன் எடுத்த எடுப்பிலேயே கேட்டபோது சியம்பாவுக்கு குரல் அடைத்துப்போனது.

"என்ன சத்தத்தையே காணோம்.. தூக்கத்தை குழப்பிவிட்டேனா? என்று அமீன் கேட்க. ஒருவித மாக சுதாகரித்தபடி ஆம். இல்லை என்று உளறினார்.

தூக்கக் கலக்கம் போகவில்லை உமக்கு. மெடினா உம்மைப் புகழ்ந்து கூறினாள். அதுதான் எடுத்தேன். இப்போது நான் மெடினாவோடுதான் இருக்கிறேன். என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பது மட்டும் இரகசியம். என்று தன் வழக்கமான சிரிப்பை உதிர்த்துவிட்டு தொடர்பைத் துண்டித்தான்.

அமீன் மெடினா வீட்டில் இருக்கிறானா? சியம்பாவுக்கு புதிதாக மேலும் ஒரு பயம் சேர்ந்துகொண்டது.

"அமீன் கண்டுபிடித்து விடுவானோ?. அவளே உளறிக் காட்டிக் கொடுத்துவிடுவாளோ?" என்று பயந்தார். அன்று இரவு முழுக்க சியம்பா தூங்கவே இல்லை.

சியம்பா பயந்த மாதிரி அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. மெடினாவும் பின்னர் தொடர்பு கொள்ளவில்லை. தன்மீது இரங்கி விட்டுவிட்டாள் என்று சியம்பா நினைத்தார்.

மறுநாள் அமீனின் முன்பாக அமர்ந்திருந்தார் சியம்பா. புதிய வெளியுறவுத் துணை அமைச்சரோடு தொலைபேசியில் அமீன் பேசிக் கொண்டிருந்தான்.

"இங்கு எனக்கு முன்பாக அரசியல் நிபுணர்கள் பலர் அமர்ந்திருக்கின்றனர். கூட்டுச்சேரா நாடுகளோடு எமது உறவுகளைத் திடப்படுத்தவேண்டும். அதற்கேற்ற செயற்பாடு களை செய்யுங்கள்!" என்று பேசிக் கொண்டிருந்தான்.

தன் முன்பாக அரசியல் நிபுணர்கள் அமர்ந்திருப்பதாக அமீன் கூறிய போது. சியம்பா மட்டும்தான் அங்கிருந்தார்.

அமீனிடம் ஒரு வழக்கம் இருந்தது. அதிகாரிகளிடமோ. அமைச்சர்களிடமோ தொலைபேசி யில் பேசும்போது சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் தன் முன்பாக இருப்பதுபோலக் காட்டிக் கொள்ளுவான்.

அதிகாரிகளோ. அமைச்சர்களோ குறிப்பிட்ட துறைகளைப் பற்றித் தவறான தகவல்களைத் தனக்குத் தந்து ஏமாற்றிவிடக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு காட்டிக்கொள்வான்.

அமீனுக்கு தன் அமைச்சர்கள் உட்பட எவர்மீதும் நம்பிக்கை கிடையாது. நம்புவது மாதிரி நடிப்பான்.

உங்களை மட்டுமே நான் நம்பியிருக்கிறேன். அதனால் எனக்கு விசுவாசமாக இருங்கள். என் நம்பிக்கையைப் பாழடித்து விடாதீர்கள் என்று கூறுவான்.

தனது பாதுகாப்புக்காக தினம் ஒரு இடத்தில் தங்குவான் அமீன். அன்றும் தனது காதலி ஒருத்தி யின் வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது அந்த தகவல் வந்தது.

என்டபே விமான நிலையத்தில் கார்லோஸ் தனது குழுவினருடன் வந்திறங்கினான்.

அதுதான் தகவல்.



"என்னது கார்லோஸா?" என்று பெயரைக் கேட்டதுமே பிரமித்தான் அமீன். மேலும் பிரமிப்பான பல சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்தன.

ஜூன் 29 ஆம் திகதி உகண்டா வானொலி கடத்தல்காரர்களின் கோரிக்கைகளை வெளியிட்டது.

இஸ்ரேலிலும் ஏனைய நாடு களிலும் தடுத்து வைக்கப்பட்டு இருக்கும் 53 கெரில்லாக்களையும் விடுதலை செய்யவேண்டும் என்பதே பிரதான நிபந்தனை. இஸ்ரேலியப் பயணிகள் நூறு பேர் தவிர. ஏனைய நாட்டவர்களை அவரவர் நாடுகளுக்கு அனுப்பிவிட்டதால். பயணிகளை மீட்கும் முழுப் பொறுப்பும் இஸ்ரேலின் தலையில் விழுந்தது.

இஸ்ரேலிய பாதுகாப்பு சபை கூடியது. ஒப்பரேசன் எண்டபே திட்டம் பற்றி விவாதித்தனர்.

"திட்டத்தில் சிறு பிசகு ஏற்பட்டாலும் நூறு சவப்பெட்டி களைத்தான் நாம் வரவேற்க வேண்டியிருக்கும்" என்று எச்சரித்தார் பாதுகாப்பு அமைச்சர் ஷிமோன்.

எண்டபே விமான நிலை யத்தில் விமானம் மூலம் கொமாண்டோக்களும் துருப்புக் களும் தரையிறக்கப்பட்டு தாக்குதல் நடத்தலாம்.

அத்திட்டம் பலிக்கத் தவறினால். விக்டோரியா ஏரி யாவை கடந்துசென்று தரை வழியாக எண்டபே விமான நிலையத்தை கைப்பற்ற வேண்டும்.

இரண்டு திட்டங்கள் கைவசம் உள்ளன. களநிலையைப் பொறுத்து பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறினார் ஜெனரல் குர்.

பிரதமர் இற்சாக் ராபின் திட்டத்தை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளித்தார். ஆனாலும் அவரது முகத்தில் இத்திட்டம் பலிக்குமா? என்ற கவலை இருந்தது. சந்தேகம் இருந்தது.

திட்டத்துக்கு ஒப்புதல் பெற்றுவிட்டு தாக்குதலுக்கு கொமாண்டோ அணிகள் புறப்பட இருந்த கடைசிநொடியில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

உகண்டா அதிபர் இடி அமீன் ஆபிரிக்க நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ள சென்றுள்ளார் என்று செய்தி அன்றைய பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது.

(தொடரும்)

---

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 610

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | | 16 | | 18 |
| 19 | 20 | 21 | | 23 | 24 |
| 25 | | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 608 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ப | 2 ழ | 3 நி | 4 பா | 5 ர | 6 தி |
| 7 த் | | 9 ச | 10 ர | 11 ம் | 12 கர |
| 13 பு | 14 ன | 15 ம் | 16 தி | | 18 க் |
| 19 ரி | 20 எ | | 22 தா | 23 க | 24 த |
| 25 ப் | | 27 வி | 28 ச | 29 ஞ் | 30 சீ |
| 31 தி | 32 த | 33 ர | 34 ன் | 35 சி | |

### இடமிருந்து வலம்

01. நடப்பது என்னவென்று உணரும் முன்னே நடந்து முடிந்த சோகத்தின் நிஜங்களே இது.
05. வறுமை.
07. கேலி ; பரிகாசம்.
11. ஊறு ; இடைவிடாது சொரி.
13. ஒரு மதம் ; ஒரு வகை உப்பு. கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. ( திரும்பியுள்ளது)
16. வள்ளுவர் திருக்குறளில் பயன்படுத்தாத எழுத்து.
19. தலைமைக் குடியானவன் ; பெரிய விவசாயி. (குழம்பியுள்ளது)
27. மகன் ; புத்திரன். (குழம்பியுள்ளது)
31. தேசவொழுங்கு. (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. இஷ்டமான ஆளுகை.
02. நன்கொடையாக. (குழம்பியுள்ளது)
03. குடுமி. உச்சி. (திரும்பியுள்ளது)
05. இந்த இனம் மட்டும் அடிவாயில் இருந்து அம்மா என்று அன்பை வெளிப்படுத்துகின்றது.
06. இளைப்பு ; துன்பம்.
21. தருமவான். (குழம்பியுள்ளது)
23. சீதநோய் ; கவர்ச்சி சினிமா நடிகை ஒருவர். (திரும்பியுள்ளது)
28. பத்து ; பத்தான. (திரும்பியுள்ளது)
30. இளங்கன்றுடன் கூடிய பசு. ( திரும்பியுள்ளது)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **08.02.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 610
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167. யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 608 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

சி.யசோதரை, புளியங்குளம், வவுனியா.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ஆர்.ஜெயபாலன், மாசார், பளை.
02. தா.சிவப்பிரியா, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
03. மு.கவிந்தா, ரெட்பானா, விசுவமடு.
04. தா.பாவனா, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.
05. இ.சாந்தமலர், பரந்தன், முள்ளியவளை.
06. ஜோ.லக்கியா, பேராதனை, கண்டி.
07. சு.சுகைப், பிரதான வீதி, மட்டக்களப்பு.
08. வ.சௌமியா, தும்பளை, பருத்தித்துறை.
09. என்.ரொனால்ட், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

# கவனத்தில் எடுக்கப்படாத நடி

அண்மையில் மும்பையில் நடந்த விழாவில் கலந்துகொண்ட ஸ்டைல் நடிகரும் அவரின் சுள்ள மருமகனும் முத்த நாயகனின் மூத்தமகளை கண்டுகொள்ளவே இல்லையாம்.

முத்த நாயகனின் மூத்த மகள் ஸ்டைல் நடிகரின் மூத்தமகளின் இயக்கத்தில் ஒரு படத்தில் அந்த படத்தில் நடிக்கையில் ஸ்டைல் நடிகரின் சுள்ளான் மருமகனுக்கும், முத்த நாயகனின் மகஞ இடையே காதல் தீ பற்றிக்கொண்டது என்றும், இது குறித்து அறிந்த இரண்டு ஜாம்பவான்களும் கா ஜோடியை பிரித்துவைத்ததாகவும் பேச்சாகக் கிடந்தது.

இந்த சம்பவத்தை அடுத்து தான் முத்த நாயகன் தனது நடிகை மகளை மும்பையில் வீடு பா குடியமர்த்தினார் என்று கூறப்பட்டது. இந்நிலையில் மும்பையில் நடந்த விழா ஒன்றில் ஸ்டைல் நடிக மூத்தமகள், சுள்ளான், முத்த நாயகன், அவரது 2 மகள்கள் மற்றும் முன்னாள் மனைவி ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாவில் ஸ்டைல் நடிகரும் சரி, சுள்ளானும் சரி முத்த நாயகனின் இளைய மகளுடன் சிரித்து சிரித்து பேசினார்களே தவிர அவர் பக்கத்திலேயே நின்ற அவரது அக்காவை கண்டுகொள்ளக்கூட இல்லையாம். இத்தனைக்கும் அக்கா நடிகை பக்கத்தில் இருந்து அவர்கள் பேசுவதை சிரித்தபடியே பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார். அப்படி இருந்தும் கண்டுகொள்ளவில்லையாம்.

அப்படி ஒரு ஜீவன் விழாவுக்கு வந்ததாகவே மாமனாரும், மருமகனும் நினைக்கவில்லையாம். சுள்ளானின் மனைவியும் முத்த நாயகனின் மூத்த மகளை கண்டுகொள்ளவில்லையாம். இதற்கு எல்லாம் அந்த காதல் விவகாரம்தான் காரணம் என்று கூறப்படுகிறது.



## மறுத்தது ஏன்?

அனுஷ்கா நடிப்பில் மிகவும் பிரமாண்டமாக உருவாகி வரும் திரைப்படம் பாஹுபாலி. இந்த படத்தை நான் ஈடுபட இயக்குனர் எஸ்.எஸ். ராஜமவுலி மிகுந்த பொருட்செலவில் இயக்கிவருகிறார்.

இந்த படத்தில் பிரபாஸ், ராணா டக்குபாய், அனுஷ்கா, தமன்னா, சத்யராஜ், ரம்யா கிருஷ்ணன் மற்றும் பலர் நடித்து வருகின்றனர். எம்.எம்.கீரவாணி இசையமைக்கும் இந்த படம் சுமார் ரூ.175 கோடியில் தயாராகிவருகிறது.

இந்த படத்தில் முக்கிய வேடம் ரம்யா கிருஷ்ணன் நடிக்கும் வேடத்தில் நடிக்க முதலில் ராஜமவுலி ஸ்ரீதேவியை அணுகினாராம். ஸ்ரீதேவி இந்த படத்தின் கதையையும் தன்னுடைய கேரக்டர் குறித்தும் கேட்டபின்னர் கடும் ஆத்திரமடைந்து இயக்குனரை திட்டி அனுப்பி விட்டார். இந்த கேரக்டர் பாலியல் தொழிலாளி வேடம் என்பதால்தான் ஸ்ரீதேவி ஆத்திரமடைந்ததற்கு காரணம் என்று கூறப்படுகிறது. ஸ்ரீதேவி குழந்தை நட்சத்திரம் முதல் ஏராளமான படங்களில் நடித்திருந்தும் இதுவரை அவர் எந்த படத்திலும் பாலியல் தொழிலாளி கேரக்டரில் நடித்ததில்லை என்பது குறிப்பிடத் தக்கது.



## உறவுகள் இணைந்தது

இசைஞானி இளையராஜா 1000க்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைததுள்ளதை பாராட்டி மும்பையில் நேற்று பாராட்டு விழா நடந்தது. பொலிவூட் இயக்குனர் ஆர்.பால்கி ஏற்பாடுசெய்த இந்த விழாவை நடிகர் அமிதாப் பச்சன் முன்நின்று நடத்திவைத்தார்.

விழாவில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், உலக நாயகன் கமல்ஹாசன், அவரது மகள்கள் ஸ்ருதி, அக்ஷரா, தனுஷ், ஐஸ்வர்யா தனுஷ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழாவில் சரிகா தனது மகள் ஸ்ருதிஹாஸன் அருகே அமர்ந்திருந்தார். அவரை பார்த்ததும் கமல்ஹாசன் புன்னகை புரிந்தபடி அவர் அமர்ந்திருந்த இடம்நோக்கி சென்றார். காதலித்து திருமணம்செய்து விவாகரத்தான தனது முன்னாள் மனைவியான சரிகாவின் அருகில் சென்ற கமல் அவரின் கையைப் பிடித்து பாசமுடன் நலம் விசாரித்தார்.

பிரிந்து சென்றபோதிலும் கமல் வந்துபேசியதும் சரிகாவின் முகத்திலோ மலர்ச்சியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டது. தனது அம்மாவும், அப்பாவும் பாசமாகப் பேசுவதை சரிகாவின் அருகில் அமர்ந்திருந்த ஸ்ருதி கண்கள் விரிய பார்த்துக்கொண்டிருந்தார். என்ன ஒரு அதிசயம் விழாவுக்கு கமலும் சரி, சரிகாவும் சரி கறுப்பு நிற உடையில் வந்திருந்தனர்.

## வருந்துகிறார் விஜய்

விஜய் மிகவும் அமைதியானவர், இவருடன் நடிக்கும் அனைவரும் சொல்லும் ஒரே வார்த்தை இதுதான். ஆனால், இவர் சமீபத்தில் தன் தந்தையால் மிகவும் மனவேதனை அடைந்துள்ளாராம்.

ஏனெனில், நீண்ட இடைவேளைக்கு பிறகு எஸ்.ஏ.சி இயக்கி நடிக்கும் படம் டூரிங் டாக்கீஸ். இப்படம் இம்மாதம் 30 திகதி வெளிவரவுள்ளது. இந்நிலையில் இப்படத்தின் போஸ்டர்களில் விஜய்யின் தந்தை இளைஞர்கள்போல் இளம் பெண்களுடன் நிற்பது, அவருக்கு மிகவும் மனசங்கடத்தை ஏற்படுத்தியதாக கூறப்படுகிறது.



என்னை அறிந்தால்

## நடிகை

அவரின் சுள்ளான்

ரு படத்தில் நடித்தார்.
யகனின் மகளுக்கும்
வான்களும் காதல்

யில் வீடு பார்த்து
ஸ்டைல் நடிகர், அவரது








## எப்போது உத்தம வில்லன்?

உத்தம வில்லன் படம் வரும் ஏப்ரல் மாதத்துக்கு தள்ளிப் போடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. கடந்த ஆண்டு கமல்ஹாஸன் நடிக்க ஆரம்பித்த படம் உத்தம வில்லன். படத்தை கடந்த செப்டம்பரிலேயே வெளியிடுவதாக அறிவித்திருந்தனர்.

ஆனால் சொன்ன தேதியில் வெளியிடவில்லை. அக்டோபர், டிசம்பர் என வேறு மாதங்களில் வெளியிடப் போவதாகச் சொன்னவர்கள், கடைசியாக பெப்ரவரி மாதம் வெளியிடப்போவதாக அறிவித்தனர்.

இந்த நிலையில் பெப்ரவரி மாதம் முழுக்க வேறு பெரிய படங்கள் வெளியாகக் காத்திருப்பதால், ஏப்ரல் 13ஆம் திகதி படத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. படத்தை வாங்கியுள்ள ஈராஸ் நிறுவனத்தின் கைவசம் வேறு பெரிய படங்கள் உள்ளதாலும் இந்த முடிவாம். ஏப்ரல் 14ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டு என்பதால் அதையொட்டி படத்தை வெளியிடும் எண்ணமாகவும் இருக்கலாம் என்கிறார்கள் கொலிவூட்டில்

## அந்த இடத்தில் முத்தம்?

தனுஷ் அமிதாப் பச்சன் கூட்டணியில் அடுத்த மாதம் வெளிவரவிருக்கும் படம் ஷமிதாப். இப்படத்தின் ட்ரைலர் மற்றும் பாடல்கள் சில தினங்களுக்கு முன் வெளிவந்தது. இதில் தனுஷ், அக்ஷராவிற்கு உதட்டில் முத்தம் கொடுக்கவர, அவர் தன் பின் பகுதியில் முத்தம் கொடுக்க சொல்வார், உடனே தனுஷும் அந்த இடத்தில் முத்தம் கொடுப்பார். தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரை இப்படி நடிக்க வைக்கலாமா? என்று இயக்குனரிடம் கேட்டால் "படத்துடன் அந்த காட்சியை பார்க்கும்போது உங்களுக்கே தெரியும்" எனக் கூறியுள்ளார்.

## மறுக்கிறார் இயக்குநர்

என்னை அறிந்தால் படத்தின் கதை சமூக வலைத் தளங்களில் லீக் ஆகிவிட்டதாக கூறப்பட்டது. ஆனால், சமீபத்தில் ஒரு பேட்டியில் கௌதம் மேனன் இதை மறுத்துள்ளார். இதில் "ஆம், நானும் படித்தேன், அதில் கொஞ்சம் உண்மை இருக்கிறது, அது மட்டுமே முழு கதை இல்லை, மேலும் இப்படத்தில் 25 வயது முதல் 40 வயதுவரை ஒரு மனிதனின் வாழ்க்கைப் பயணம் தான் கதை.

அஜித் இப்படத்தில் பொலிஸா? இல்லை ரவுடியா? என்பதை 40 நிமிடங்களுக்கு உங்களால் கண்டுபிடிக்க முடியாது" என்று கூறியுள்ளார்.

## கிசுகிசுக்கப்படும் லட்சுமிமேனன்

நடிகை லட்சுமிமேனன் எந்த படத்தில் நடித்தாலும், அந்த படத்தின் ஹீரோவோடு கிசுகிசு இணைத்து பேசப்பட்டுவருகிறது. நடிகை லட்சுமிமேனன், எந்த ஹீரோவுடன் நடித்தாலும், தொடர்ந்து இரு படங்கள் அதே ஹீரோவுடன் நடித்துவருவதை இந்த கிசுகிசுக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

படத்தில் நடித்தாலும், அந்த படத்தின் ஹீரோவோடு கிசுகிசு இணைத்து பேசப்பட்டுவருகிறது. நடிகை லட்சுமிமேனன், எந்த ஹீரோவுடன் நடித்தாலும், தொடர்ந்து இரு படங்கள் அதே ஹீரோவுடன் நடித்துவருவதை இந்த கிசுகிசுக்கு காரணம் எனக் கூறப்படுகிறது. சசிக்குமாருடன் சுந்தரபாண்டியன் மற்றும் குட்டிப்புலி, விஷாலுடன் பாண்டியநாடு மற்றும் நான் சிகப்பு மனிதன், என்று நடித்துவந்த லட்சுமி மேனன் தற்போது கார்த்தியுடன் கொம்பன் படத்தில் நடித்துவருகிறார். இந்நிலையில் கார்த்தியின் அடுத்த படத்திலும் நடிக்க அவர் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளதாக கூறப்படுகிறது. எனவே சசிகுமார், விஷாலை அடுத்து தற்போது கார்த்தியுடன் லட்சுமிமேனன் கிசுகிசுக்கப்பட்டு வருகிறார்.

## முந்தினார் சிவா!

சிவகாரத்திகேயன் இந்த நிலைமையில் இருக்கிறார் என்றால் கண்டிப்பாக அதற்கு தனுஷும் ஒரு காரணம். ஆனால், தற்போது தனுஷையே இவர் முந்தும் அளவிற்கு வளர்ந்து விட்டார். இவர் நடிப்பில் விரைவில் வெளிவரவிருக்கும் படம் காக்கி சட்டை, இப்படத்தையும் தனுஷ் தான் தயாரித்துள்ளார். இந்த படத்தின் ட்ரைலர் தற்போதுவரை 18 இலட்சத்தை எட்டியுள்ளது. ஆனால், தனுஷின் அனேகன் படத்தின் ட்ரைலர் 17 இலட்சத்தை தான் தொட்டுள்ளது, மேலும், வியாபாரத்திலும் சிவகார்த்திகேயன் கை கொஞ்சம் ஓங்கியுள்ளதாக கூறப்படுகிறது.



# தேன் கிண்ணம்

## நிரந்தரம்



நிரந்தரம் இல்லாத இவ்வுலகில்
நீயும் நிரந்தரமில்லாமல் போனவள்
நித்தம் நித்தம் உன் பிரிவிற்கான
காரணத்தை தேடி என் இதயம்
தோல்விதான் கண்டதடி.
நீ தந்த காயம்
ஆறாத வடுவாகிய நிலையில்
கண்ணீர் சிந்தும் என் இதயத்துக்கு
சுகமான உன் நினைவுதான் நிரந்தரம்.

யோ.சறோ,
கரணவாய் மேற்கு.

## ஈன்று என் தெய்வம்

கண்ணுறக்க மின்றி
கருவறையில் சுமந்து
மண்ணுலகம் காண
மாதங்கள் பல
தவமிருந்து
நல்லுணவு ஊட்டி
நாள் முழுவதும்
காத்து
சொல்லடக்கம் கற்று
அன்புதனைக் காட்டி
அரவணைக்கும் தெய்வம்
விலை அடக்கம் இல்லை
உலகில் என்றும்
அன்னை அவளுக்கு.

N. ஜானுஜா,
மன்னார்.



## ஆத்மார்த்தத்திற்காக!

அப்ரார் ஏ.அஸீஸ்

சோதரா நீ....
சேதாரமற்ற வாழ்க்கையை
ஆதாரமாக வாழ்ந்திட
தவறியும் தவறிடாது
நேர்வழி காட்டினாய்
தீயததை தவிர்த்து
நன்மையதை சேகரமாக்கினாய்
பிரிவுகள் எமை அணுகிடாது
ஒருசேர இணைக்க மாக்கினாய்
முன்னேற்றத்துக்கு முகெலும்பாக
அனைத்தையும் நிறைவேற்றினாய்
தொடர்ந்து வந்தே எம்மை
துன்பமற பாதுகாத்தாய்
உயர்வாழ்வுதனை பெற
சீர்தூக்கி உயர்த்தினாய்
ஒளிமயமான பிரகாசத்துக்காய்
எதிர்காலத்தை வளமாக்கினாய்
அந்தோ.....
உந்தன் விடியலை தொடாமலே
எந்தன் உளம்பிரிந்து சென்றாயே
சோதரா...!
ஆறிலும் வரும் நூறிலும் வரும்
இடைநடுவில் வந்து ஏமாற்றிவிட்டது
அனுதினமும் ஏங்கும் துயரில்
பிரார்த்திப்பு கண்ணீரில்
கரைகின்றோம்
நின் ஆத்மார்த்தத்திற்காக!

## காதலின் தூண்டல்...

உன்னோடு நானிருந்தபோது
எனக்கும் உனக்குமிடையே
தூறிய மௌனங்கள்.

வாய்க்குள் வார்த்தைகள்
அடக்கி வைத்ததில்
கண்ணீர் வார்த்தைகள்
பேச்சு வார்த்தை நடத்தியது.

சில்லிட்ட உயிர்களில்
தீக்குச்சி உரசலில்
மௌனத்தின் உதடடைப்பில்
பேச்சுச் சுதந்திரத்தை
பிரசவிக்க முடியாமல்
வல்லரசிர வோடு
நான் புரிந்த மூன்றாம் யுத்தம்...!

பருவம் தண்டத் தென்றல்
நாம் விட்ட கண்ணீரில்
வழுக்கி விழுந்து
என்னை தழுவிச் சிரித்தது...

மௌனம் சிதறிய ஒரு
மங்கல் ஒளியில் இருட்டின் கற்பு
திருட்டுப் போனது.

உனது திமிரும் எனது கர்வமும்
இருட்டுடன் உடைந்து
மௌனித்து அழுதது.

யாரோ ஒருவரின்
காதலின் தூண்டலில்...
இதயத்தை இரையாக்கி
தேகத்தை அணைத்தது.

இருட்டை துரத்தி...
சூரியன் குதித்ததில்....
அவள் இரக்கத்தில் நனைந்து...
உறக்கத்தில் அழுதேன்...!



S.மோகன்ராஜ், நெடுந்தீவு - 12

## அதிர்ஷ்டம் அரிசி தின்கிறது...

வீட்டிலே
அரிசி இல்லை.
பேணியில் இருந்த
நூறு ரூபாயை
கணவனிடம் நீட்டினாள்
கர்ப்பிணியான மனைவி.
அரிசி ஒரு கிலோ..
அரைக்கிலோ கிழங்கு..
அவசரமா வாங்கி வாங்க..
ஆக்கி சாப்பிடலாம்.

கடைத்தெரு போன
கணவன் வருகிறான்.
அரிசிக்குப் பதிலாய்
ஐந்து
அதிர்ஷ்ட இலாப
சீட்டுக்களோடு..

அரிசியை
அதிர்ஷ்ட இலாபம் தின்றதால்
'இன்றும்' பட்டினிதான்....



யோ.புரட்சி,
வல்லுவர்புரம்.

## நினைவின் வலி

யாருமற்ற
தனிமைப்
பொழுதுகளில்
"இரவின்
அமைதியை
கலைக்கும்
ஆந்தையின்
அலறல்போல்"
கொடுமையாக
தழுவிச்
செல்கின்றன
உன் நினைவுகள்....
நீ பிரிந்து
பல வருடங்கள்
ஆகியும்...



ரேணுசாந்,
கிளிநொச்சி.

# மீண்டெழும் நினைவு






**1996** இல் இலங்கை உலகக் கிண்ணக் கிரிக்கெட் கோப்பையை வென்றது. சுற்றுப் போட்டியின் ஆரம்பத்தில் இலங்கை அணி பெரிதாகக் கண்டுகொள்ளப்படவில்லை. இலங்கை அணியும் அதிக உச்சம் தொடுவதில் நம்பிக்கை கொண்டிருந்ததோ, என்னவோ தெரியவில்லை. ஆனால் குழுநிலையில் சிம்பாப்வே, இந்தியா, கென்யா அணிகளை வென்றனர். இருந்தும் அப்போதைய சூழ்நிலையை காரணங்காட்டி அவுஸ்திரேலியாவும், மே.இந்தியத் அணியும் இலங்கைக்கு வரமறுத்துவிட்டார்கள். இந்த நிலையில் அந்தப் புள்ளிகளும் சேரவே இலங்கை கால் இறுதிக்குத் தகுதிபெற்றது. இங்கிலாந்துக்கு எதிரான கவனத்துக்குரிய ஒரு வெற்றியும், அரையிறுதியில் இந்தியாவைத் தோற்கடித்ததும் இறுதி ஆட்டத்துக்கு இலங்கையைக் கொண்டு போய் நிறுத்தியது.

இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியா 241 ஓட்டங்களை ஏழு விக்கெட் இழப்பிற்குப் பெற்றுக் கொண்டது. அவுஸ்திரேலியா அணியை எதிர்கொள்வதைப் பொறுத்து இலங்கை அணிக்கு இது ஒரு சவாலான ஓட்ட எண்ணிக்கையே. அதிலும் ஆட்ட ஆரம்பத்திலேயே சணத்தும், றொமேஷ் களுவித்தாரணவும் பவிலியன் திரும்பிவிட்டார்கள். பின்னர் அசங்க குருசிங்க, அரவிந்த ஜோடி தைரியமாகப் போராடி 125 இணைப்பாட்டம் பெற்றபோது அஸங்க அவுட் ஆகிறார். ஆனால் இன்னும் 94 ஓட்டங்கள் தேவை. இதனை சேகரிப்பது இலகுவல்ல. இந்த நிலையில் தான் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க களம் இறங்குகிறார். அரவிந்த நன்றாகவே ஆடிக்கொண்டிருக்க அவருக்கு இவர் உதவியாக இருப்பதே கடமையாயிற்று. இந்த நிலையில் அணித் தலைவரும், உபதலைவரும் அற்புதமான புரிந்துணர்வில் விளையாடினார்கள்.

அரவிந்த 107* ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருக்க, அர்ஜுனவும் பொருத்தமான முறையில் ஆடி 37 பந்துகளில் 47 ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவினார். இலங்கை தனது முதலாவது ஒருநாள் உலகக் கிண்ணத்தை வென்றது. அரவிந்த ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆனால் அர்ஜுன சகல நிறைவுகளும் நிறைந்த அணித்தலைவராக மிளிர்ந்தார். அப்போது நேர்முக வர்ணணை செய்துகொண்டிருந்த டோனி கிரேக், "....... இதோ ஒரு நான்கு. இலங்கைக்கு அற்புதமான வெற்றி. வீரர்கள் மைதானத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் உலகக் கிண்ணத்தை வென்றுவிட்டார்கள். இவர்களில் எனக்குப் பிடித்த விடயம் என்னவென்றால், இவர்கள் வெல்வது மட்டுமல்ல அதனை ஒரு ஸ்ரைலாக வெல்வார்கள். ரசிகர்கள் விரும்பிப் பார்க்கும்வண்ணம் விளையாடுவார்கள்..." என்றார்.

தொடர்ந்து கவாஸ்கர், "........ எத்தகைய கணம் இது. இலங்கை உலக சம்பியன்கள். இவர்கள் பல வருடங்களாக எதிர்பார்த்திருந்த கணம் இது......" என்று முடித்தார்.

# என்றும் ஓயாது

2015 ஐ.பி.எல் போட்டிகளில், முத்தையா முரளிதரன் புதிய, இன்னும் கௌரவமான பங்களிப்பில் ஹைதராபாத் சண் ரைசர்ஸ் அணியில் கடமைபுரிவார். முன்னதாக சென்னை சுப்பர் கிங்ஸ், கொச்சி டஸ்கர்ஸ் கேரளா, றோயல் செலஞ்ஜர்ஸ், பெங்களூர் அணிகளுக்காக ஆடியவர் இவர். கடந்த ஏழு சீசன்களிலும் 66 ஐ.பி.எல் ஆட்டங்களில் விளையாடி 63 விக்கெட்டுக்கள் பெற்றவர். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடன் மட்டும் விளையாடி 46 ஆட்டங்களில் 52 விக்கெட்டுக்கள் பெற்றவர். 2011 இல் முரளி சர்வதேசக் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்றார்.

மூவகைக் கிரிக்கெட் போட்டிகளிலும் 1347 விக்கெட்டுக்கள் பெற்றிருக்கிறார். டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கெட்டுக்கள் சரித்து முதலிட சாதனையை தன்னகத்தே கொண்டவர். 2014இன் பின் ஒரு வீரராகத் தன்னை வெளிப்படுத்துவதில் தயக்கம் காட்டிய இவர் அவுஸ்திரேலியாவில் சுழல் பந்துவீச்சாளராக நியமிக்கப்பட்டார். இப்பொழுது, அடுத்த ஐ.பி.எல் போட்டிகளுக்காக சண்டைசர்ஸ் அணியின் பந்துவீச்சுப் பயிற்றுனராகவும் அணியின் ஆலோசகர்களில் ஒருவருமாக நியமனம் பெற்றுள்ளார். சண்டைசர்ஸ் கடந்த முறை ஆறாவது இடத்தில் சுற்றுப்போட்டிகளை முடித்திருந்தது.

விளையாடிய 14 போட்டிகளில் எட்டுப் போட்டிகளில் தோல்வி கண்டிருந்தது. இம்முறை முரளிதரனின் பங்களிப்புடன் அணி மீளெழுச்சி பெறும் என்று எதிர்பார்க்கலாம்.




# நெருங்க முடியுமா?

**ந**டைபெற்று முடிந்த தென் ஆபிரிக்க - மே.இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி விறுவிறுப்பு என்பதற்கு அப்பாலும் போய் அதிரடியாக முடிவடைந்தது. அதற்குக் காரணம் தென் ஆபிரிக்க ஒரு நாள் அணித்தலைவர் ஏ.பி.டி வில்லியர்ஸ். இவரைப் பற்றிப் பார்ப்பதற்கு முன்னாக இரண்டு விடயங்கள் எங்கள் ஞாபகத்திற்கு. ஒன்று 1996 இலங்கை வீரர் சனத் ஜயசூரியா, பாகிஸ்தானுக்கு எதிராக 17 பந்துகளில் அரைச்சதம் அடித்திருந்தார். இது ஒரு சாதனை. அடுத்து கடந்த ஆண்டு நியூசிலாந்தின் கோரி அண்டர்சன் 36 பந்துகளில் மே.இந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் சதம் அடித்திருந்தார். இதுவும் ஒரு சாதனை. ஒருநாள் போட்டிகளில் இத்தகைய சாதனைகள் கடினமானவை. ஆனால் இந்த இரண்டு கடினமான சாதனைகளையும் மே.இந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் வில்லியர்ஸ் தகர்த்தது சாதனையிலும் சாதனை.






தெ.ஆபிரிக்க 247 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் இழந்த நிலையில் 39 ஓவரில் வில்லியர்ஸ் களம் நுழைகிறார். அதன்பின் இவர் மைதானத்தில் நின்றது 59 நிமிடங்கள் மட்டும். 30 வயதான வலது கைத் துடுப்பாட்ட வீரரான இவர் முதல் 50 ரண்கள் எடுக்க எதிர்கொண்ட பந்துகள் 16 மட்டுமே. இங்கு சணத் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்படுகிறார். தொடர்ந்தும் அதிரடியாக ஆடி சதம் பெற்றபோது எதிர்கொண்ட பந்துகள் 31 மட்டும். இங்கு கோரி அண்டர்ஸன் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்படுகிறார்.

இந்த் ஆட்டத்தில் இவர் எடுத்த ஓட்ட எண்ணிக்கை 149. இதற்காக எடுத்துக்கொண்ட பந்துகள் 44 மட்டும். இவருடைய மொத்த எண்ணிக்கையில் 16 ஆறுகளும், 9 நான்குகளும் அடக்கம். அந்தவகையில் 16 ஆறுகள் எடுத்த ரோகித் சர்மாவுடன் சமன் செய்துகொள்கிறார்.

இறுதி ஓவரில் இவர் ஆட்டம் இழப்பதற்குமுன் இன்னும் இரண்டு ஓட்டங்கள் எடுத்திருந்தால் 83 பந்துகளில் 150 ஓட்டங்கள் எடுத்த ஷேன் வொட்சனின் சாதனையை முறியடித்திருப்பார். இன்னொருபுறம் ஒரு நாள் போட்டிகளில் இருவர் சதம் அடித்த சந்தர்ப்பங்கள் 116 என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆனால் ஒரே அணியில் இருந்து மூவர் சதம் பெற்றது இதுவே முதல் தடவை. (ஹசீம் அம்லா - ரீலிரூசோ - வில்லியர்ஸ்)

கோரி அண்டர்சன், வில்லியர்ஸின் வேகமான சதம் பற்றிக் கூறுகையில், பசாசுத்தனமான ஆட்டம் என்று வியந்ததுடன், உலகக் கிண்ணம் நடைபெறவுள்ள நிலையில் சிலவேளைகளில் சில அதிசயங்களை எதிர்பார்க்கவும் முடியும் என்று கூறியுள்ளார்.

# என்னால் முடியும்

ஏ.பி.டி. வில்லியர்ஸின் இரட்டைச் சாதனை பாகிஸ்தானின் ஷாஹிட் அப்ரிடியை அதே திசையில் சிந்திக்கவைத்துள்ளது. 2015 ஒரு நாள் உலகக் கிண்ணப் போட்டிகளுடன் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற இவர் உத்தேசித்துள்ளார். தனது இறுதி சுற்றுப்போட்டியின் போது ஒரு பதிவை ஏற்படுத்த விரும்புகிறேன். அது வில்லியர்சின் சதமடித்த சாதனையை மேவி அப்பால் செல்வது என்று கூறியுள்ளார். இப்படியான சாதனைகள் திட்டமிட்டு ஏற்படுத்துவன அல்ல. ஒரு நல்ல நாள் அமையும்போது, நம்பிக்கையின் அளவும் உயர்வாக இருக்கும்போது இயல்பாகவே சாதனை அமைந்துவிடும் என்கிறார்.

ஏறத்தாள 17 வருடங்கள் வேகமான சதம் பெற்ற சாதனை அப்ரிடியிடம்தான் இருந்தது. 1996 நைரோபியில் இலங்கை அணிக்கு எதிராக 37 பந்துகளில் சதம் அடித்திருந்தார். நீண்ட வருடங்களின்பின் நியூசிலாந்தின் கோரி அண்டர்சன் அதனை ஒரு பந்து குறைவாக எதிர்கொண்டு முறியடித்திருந்தார். அப்ரிடியின் அதிரடி மிகவும் அபரிதமானது.

2005 ஆம் ஆண்டில் கான்பூரில் இந்தியாவுக்கு எதிராக 45 பந்துகளில் சதம் கடந்துபோதுதான் "Boom, Boom" என்ற அடைமொழியை ரசிகர்களால் பெற்றார். இன்றுவரையில் இவர் அற்புதமான துடுப்பாட்ட வீரர்தான். இவரின் எண்ணம் உலகக் கிண்ணப் போட்டிகளில் நடக்காதென்று சொல்வதற்கில்லை. நினைத்தால் செய்யக்கூடிய ஆற்றல் மிகுந்தவர்.

ஆனால் இவர் தற்போது துடுப்பாட்ட வரிசையில் சற்றுக் கீழ் நிலையில் களம் இறங்குவதால் இவரின் எண்ணம் பலிக்குமா என்றொரு சந்தேகம் இருக்கிறது. ஆனால் எந்த வரிசையில் ஆடினாலும் இவருக்குத் தேவை சரியாக ஐந்து ஓவர்கள் மட்டுமே. அப்ரிடி என்றால் ஆச்சரியம் என்றும் அர்த்தம் கொள்ளலாம்.

வாழ்த்துக்கள் அப்ரிடி

விளையாட்டு

ஜோசப் கிருஷ்ணா

## வேகமான அரைச்சதம்

| பெயர் | பந்துகள் |
|---|---|
| 1. ஏ.பி.டி வில்லியர்ஸ் (தெ.ஆ) | 16 |
| 2. சனத் ஜயசூரிய (இலங்கை) | 17 |
| 3. சைமன் ஓடொனல் (அவுஸ்) | 18 |
| 4. சயீட் அப்ரிடி (பாகிஸ்தான்) | 18 |
| 5. சயீட் அப்ரிடி (பாகிஸ்தான்) | 18 |

## வேகமான சதங்கள்

| பெயர் | பந்துகள் |
|---|---|
| 1. ஏ.பி.டி வில்லியர்ஸ் (தெ.ஆ) | 31 |
| 2. கோரி அன்டர்சன் (நியூசிலாந்து) | 36 |
| 3. சயீட் அப்ரிடி (பாகிஸ்தான்) | 37 |
| 4. மார்க் பௌச்சர் (தெ.ஆ) | 44 |
| 5. பிளைன் லாறா (மே.இ.தீவுகள்) | 45 |






# பருக்கள் வராமல் தடுக்க எளிய இயற்கை சிகிச்சை

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது பழமொழி. ஆனால் அந்த முகத்தில் ஏற்படும் பருக்கள் அனைத்து அழகையும் கெடுத்துவிடுகிறது. ஆண்கள் மற்றும் பெண்கள் பெரிதும் அவஸ்தைப் படும் சருமப் பிரச்சினைகளில் ஒன்றுதான் இந்த முகப்பரு. உடல் சூட்டினால் பருக்கள் ஏற்படுவதாகவும், எண்ணை பயன்பாடு அதிகம் இருப்பதால் பருக்கள் உருவாவதாகவும் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகிறது. சிலருக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் இந்த பருக்கள் மறைந்துவிடுகிறது. சிலருக்கோ முகத்தின் அழகை சீர்குலைப்பதுபோல் குழிகள் உண்டாகி அவலட்சணத்தை ஏற்படுத்திவிடுகிறது. இருப்பினும், ஒருசில இயற்கைப்பொருட்கள் மற்றும் செயல்கள் மூலம் தாடைகளில்வரும் பருக்களை போக்க முடியும். அதிலும் நம்பிக்கையுடன் மேற்கொண்டால், முடியாதது எதுவும் இல்லை. சரி, இப்போது தாடைகளில் ஏற்படும் பருக்களை போக்கும் சில இயற்கை சிகிச்சைகளைப் பார்ப்போம்.

**ஆவிப்பிடித்தல்:** சருமத்தில் உள்ள இறந்த செல்கள் மற்றும் அழுக்குகளைப் போக்க ஆவி பிடிக்கவேண்டும். ஏனெனில் ஆவி பிடித்தால், சருமத்துளைகள் திறந்து, சருமத்துளைகளில் தங்கியுள்ள அழுக்குகள் மற்றும் இறந்த செல்களை தளர்ந்துவிடும். இதனால் ஆவி பிடித்தபின் கொட்டன் கொண்டு, முகத்தை துடைத்தால், பருக்களை உண்டாக்கும் மாசுக்கள் மற்றும் இறந்தசெல்கள் முற்றிலும் வெளிவந்துவிடும்

**கிராம்பு:** கிராம்பும் பருக்களை போக்கக்கூடிய பொருட்களில் ஒன்றாகும். அதற்கு கிராம்பை நீரில்போட்டு கொதிக்கவிட்டு, குளிரவைத்து, பின் அதனை அரைத்து, பருக்கள் உள்ள இடங்களில் தடவி, 15அல்லது 20 நிமிடம் ஊறவைத்து, குளிர்ச்சியான நீரில் கழுவ வேண்டும்.

**முகத்தை கழுவவும்:** அடிக்கடி முகத்தை கழுவவேண்டும். இதனால் சருமத்தில் படியும் அழுக்குகள் மற்றும் இறந்த செல்கள், எண்ணெய் சுரப்பிகளில் இருந்து வெளியேறும் எண்ணெய்களில் கலந்து, முகப்பரு மற்றும் பிம்பிளை உருவாக்குவதில் இருந்து தடுக்கலாம்.

**சந்தனப்பொடி:** சந்தனப்பொடியுடன், தயிர், கடலைமாவை மற்றும் சிறிது எலுமிச்சைசாறு சேர்த்து கலந்து, முகத்திற்கு தடவி, ஊற வைத்து கழுவினால், பருக்கள் நீங்குவதோடு, முகமும் பொலிவோடு காணப்படும்.

**தேன்:** தேனைக்கொண்டு பருக்கள் உள்ள இடங்களில் மசாஜ் செய்து, 1520 நிமிடம் ஊறவைத்து, பால்கொண்டு முதலில் கழுவி, பின்நீரில் அலசினால், சரும வறட்சியை தவிர்ப்பதோடு, பருக்களையும் போக்கலாம். யாரையும் எளிதில் எதிர்கொண்டு பேசுவதற்குக்கூட கூச்சத்தை ஏற்படுத்தும். இந்த பருக்களை மேற்கூறப்பட்டுள்ள செலவு குறைந்த மருத்துவ குறிப்புக்களை கையாண்டு பருக்கள் இல்லாத முகத்தை நாமும் கொண்டுவருவோம்.



## பாலியல் தொந்தரவை சமாளிக்க வேண்டுமா?

பெண்களை தங்களின் காம இச்சைக்கு பயன்படுத்தவே பல ஆண்களும் முயல்கின்றனர். இன்றைய காலகட்டத்தில், பாலியல் சம்பந்தமான கிண்டலும், பாலியல் தொந்தரவுகளும் பரவலாக நடைபெற்றுகொண்டு தான் இருக்கிறது.

இது நாளுக்கு நாள் அதிகரிக் கிறதே தவிர முடிவுக்கு வருகிற மாதிரி தெரியவில்லை. மிக கொச்சையான நகைச்சுவைகள், கிண்டல் கேலிகள் அல்லது அருவருக்கத்தக்க பேச்சு போன்றவைகளும் பணியிடங்களில் நடக்கும் பாலியல் தொந்தரவுகளே. இதனை கையாள சிறந்த வழி, இவ்வகையான ஆண்களை புறக்கணித்துவிடுங்கள்.

அதற்குக் காரணம், இவர்கள் எல்லாம் தம்மீது கவனம் விழ வேண்டும் என எண்ணி இதை செய்பவர்கள். பணியிடத்தில் பாலியல் தொந்தரவுகளை கையாள வேண்டுமானால் உங்களை சீண்டுபவர்களின் போக்கையே நீங்களும் கடைப்பிடிக்கவேண்டும். அவ்வளவுதான், தன்னாலே அவர் வாய்மூடிக் கொள்ளும்.

சிலநேரங்களில் பணியிடத்தில் பாலியல்ரீதியாக ஜோக் அல்லது கிண்டல் செய்பவர்கள், அதனை உணரமாட்டார்கள். அது அவர்களுக்கு இயல்பான ஒன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட சூழல்களில், அவர்களிடம் தனியாகப் பேசி, அவர்களின் இந்த பேச்சினால் நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பதை அவர்களுக்கு புரியவையுங்கள்.

பாலியல் தொந்தரவு செய்பவர்கள் பற்றி உயர்மட்ட நிர்வாகத்திடம் சென்று உங்கள் குறைகளைத் தெரிவியுங்கள். அதற்கு பிறகு நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை.

## சரும சொர சொரப்பை நீக்க...



சீனி அழகுப் பராமரிப்பில் சிறந்த பொருளாக உள்ளது. எப்படியெனில், சர்க்கரையைக் கொண்டு சருமத்தைப் பராமரித்தால், அது சருமத்தில் உள்ள இறந்த செல்கள், சருமத்தின் மென்மைக்கு இடையூறாக இருக்கும் கரும்புள்ளிகள், வெள்ளைப் புள்ளிகள் போன்றவற்றை எளிதில் வெளியேற்றிவிடும்.

சீனி மற்றும் ஒலிவ் எண்ணெயை ஒன்றாக சேர்த்து கலந்து, சருமத்தை ஸ்கரப் செய்தால், சருமம் மிகவும் மென்மையாகிவிடும். சீனி முதுமைத் தோற்றத்தைத் தள்ளிப் போடும் குணம் கொண்டவை.

எப்படியெனில் சீனியைக் கொண்டு சருமத்தை ஸ்கரப் செய்யும்போது, சருமத் துளைகள் திறந்து, அதிலுள்ள அழுக்குகளை முற்றிலும் நீக்குவதோடு, சரும செல்கள் எளிதில் பாதிக்காதவாறு பாதுகாக்கும்.

★ அவசரமாகப் பார்ட்டிக்கு கிளம்பும்போது, சீனியைத் தண்ணீரில் கலந்து, அதனைக்கொண்டு சருமத்தை 4 முதல் 5 நிமிடங்கள் ஸ்கரப் செய்து, குளிர்ந்த தண்ணீரில் கழுவினால், சருமம் சுத்தமாகவும் பொலிவோடும் காணப்படும்.

★ கிளின்சரில் சிறிது சீனியை சேர்த்து கலந்து, ஈரமான சருமத்தில் தடவி சிறிதுநேரம் மென்மையாக ஸ்கரப் செய்து, ஈரமான துணியால் துடைத்து, பின் நீரில் கழுவலாம். இதனாலும் சருமம் அழகாக ஜொலிக்கும். இதனை வாரம் இருமுறை செய்யலாம்.

★ எலுமிச்சை சாற்றில் சிறிது சீனியை சேர்த்து கலந்து, சருமத்தை 5 முதல் 7 நிமிடங்கள் ஸ்கரப் செய்தால், சருமத்தில் தங்கியுள்ள அழுக்குகள், இறந்த செல்கள் முற்றிலும் நீங்கி, சருமம் பொலிவுறும்.

★ பால் மற்றும் சீனியை ஒன்றாக கலந்து, அதில் சிறிது சந்தனப் பொடியை சேர்த்து, சருமத்தில் தடவி மென்மையாக சருமத்தை மசாஜ் செய்தால், சருமத்தில் உள்ள நச்சுக்கள் அனைத்தும் நீங்கிவிடுவதோடு, சருமமும் வெள்ளையாக மாறும். இதனை வாரம் ஒருமுறை செய்துவந்தால் போதுமானது.

## கீரை துவட்டல்

**தேவையான பொருட்கள்:**

தூதுவளை கீரை - 200 கிராம்
சிறிய வெங்காயம் - 50 கிராம்
பூண்டு - 5 பல்
சீரகம் - 1 தேக்கரண்டி
மிளகு தூள் - 1 தேக்கரண்டி
வேகவைத்த துவரம் பருப்பு - 50 கிராம்
உப்பு - தேவைக்கு
நெய் - 3 தேக்கரண்டி

**செய்முறை:**

வெங்காயத்தை பொடியாக நறுக்கி கொள்ளவும். தூதுவளை கீரையை பொடியாக நறுக்கிக்கொள்ளவும். வாணலியில் நெய் ஊற்றி காய்ந்ததும் சீரகம் தாளித்து, வெங்காயம் மற்றும் பூண்டுவை வதக்கிக் கொள்ளுங்கள். பின்பு அதில் தூதுவளை கீரையை இட்டு நன்றாக கிளறுங்கள்.

அத்துடன் வேகவைத்த துவரம்பருப்பு, உப்பு, மிளகுதூள் கலந்து, சிறிதளவு நீரும் விட்டு வேகவையுங்கள். இந்த கீரை துவட்டலை சூடான சாதத்தில் கலந்து சாப்பிடலாம். இது நுரையீரலின் நுண்ணிய காற்றறைகளை பலப்படுத்தும். உடல் உள்ளுறுப்பு களை பலப்படுத்தி வலிமையையும், பலத்தையும் தரும்.



**250/= பரிசு** வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-456

**கேள்வி:** சருமத்தில் உள்ள இறந்த செல்கள் மற்றும் அழுக்குகளைப் போக்க என்ன செய்யவேண்டும்?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 08 .02. 2015

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 456
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 454 இற்கான விடை :-
சுவாசப் பாதை அழற்சி, ஆஸ்துமா குறையும், அதிக தூக்கத்திற்கு, சூடு தணிய, கர்ப்ப கால ஹோர்மோன் குறைபாடு நீங்க.

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-
எம்.பாவனா,
உடப்பு, புத்தளம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

456

பெயர் : ........................
முகவரி : ........................
........................
தே.அ. அட்டை இல : ........................
விடை : ........................
........................
கையொப்பம் : ........................

ஏ.எச்.ஏ.ஹூசைன்

# சுதந்திர இலங்கை

## ஒரு பார்வை





இலங்கையனாய் இருப்பதில் பெருமைப் படுகின்றேன் (Proud to be a Sri Lankan) என்று கூறுமளவுக்கு நமக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்று இலங்கையின் பௌத்தர்களல்லாத மற்ற அனைவரும் வேதனைப்படுகின்ற ஒரு துன்பியல் நிலைமை இன்னமும் நீடிக்கின்றது.

அதேவேளை பிரிட்டிஷார் இலங்கையைக் கைவிட்டுச் சென்ற 68ஆவது வருட நிகழ்வை நாம் இப்பொழுது சுதந்திர தினம் என்று அனுஷ்டித்துக் கொண்டிருக்கின்றோம் என்று கூறுவதுதான் மிகப் பொருத்தம்.

பிரிட்டிஷாரின் உள்நோக்கமும் உள் நாட்டில் உள்ள இனக்குழுக்கள் முழுமையான சுதந்திரத்தை அனுபவித்துவிடக் கூடாது என்பதாகவே இருந்தது.

அது அவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி.

அந்த தொடக்கப் புள்ளியிலிருந்தே இன்றுவரை நமது சுதந்திர தினங்களும் சுதந்திரமில்லாத உணர்வுகளும் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மலேயர்கள் போராடிப்பெற்ற சுதந்திர இலங்கையின் முதல் பிரதமராக டி.எஸ். [illegible]னநாயக்கா பதவியேற்றார்.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி இலங்கையை பிரிட்டிஷார் இலங்கையரிடம் ஒப்படைத்தனர்.

பிரித்தானியர் இலங்கையை விட்டு வெளியேறியபோது, சிங்களத் தேசிய வாதிகள், மலையகத் தமிழர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்த மலையகத் தமிழர்கள் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளிகளாக பிரிட்டிஷாரினால் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவர்கள்.

சிங்களத் தேசியவாதிகளின் நெருக்குதல்களினால் 1948ஆம் ஆண்டு, நவம்பர் 15ஆம் திகதி 18ஆம் இலக்க இலங்கைக் குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டத்தின்படி 1948 ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதிக்கு முன் இலங்கையில் பிறந்திருப்பதுடன் அவருடைய இரண்டு தலைமுறையினரும் இலங்கையில் பிறந்திருந்தால் மட்டுமே இலங்கைக் குடியுரிமைக்கு ஒருவர் உரித்துடையவர் என்று வரையறுக்கப்பட்டது. இது மலையகத் தமிழ் மக்களுக்குப் பாதகமாக அமைந்தது.

இவர்களில் பலர் தமக்குமுன் இரண்டு தலைமுறையினர் இலங்கையில் பிறந்திருந்தாலும்கூட அதை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் அவர்களிடம் இருக்கவில்லை.

இதன்காரணமாக சுமார் 7 இலட்சம் மலையகத் தமிழர் நாடற்றவர் என்னும் நிலைக்குத் தள்ளப்பட்டதுடன், 1949ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இலங்கை நாடாளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டம் இல.48இன் மூலம் அவர்களது வாக்குரிமையும் பறிக்கப்பட்டது.

நாடற்றவர்கள் பிரச்சினை தொடர்பாக 1949ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இந்திய, பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டமும் நாடற்றோர் பிரச்சினையைத் தீர்ப்பதில் பயன்படவில்லை.

1954ஆம் ஆண்டில் கையெழுத்தான நேரு - கொத்தலாவலை ஒப்பந்தமும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அதிகம் பயன்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கா தான் ஆட்சிக்குவந்தால் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவருவேன் என்று பிரசாரம் செய்து பெரு வெற்றி பெற்று 1956இல் இலங்கையின் ஆட்சியைப் பிடித்தார்.

சிங்களப் பண்பாட்டின் பாதுகாவலன் எனத் தன்னை அறிவித்துக்கொண்ட இவர் மூன்று வருடங்கள் பதவிவகித்தார்.

பண்டாரநாயக்காவின் அமைச்சரவை பதவியேற்று 53 நாட்களுக்குள் 1956 ஜூன் 5ம் நாள் சிங்களம் மட்டும் சட்டம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டமூலத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளித்தது.

தமிழ்க் கட்சிகள், மற்றும் சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்டுகள் எதிர்த்து வாக்களித்தனர்.

இம்மசோதா 1956 ஜூலை 6 இல் செனட் சபையில் நிறைவேற்றப்பட்டபோது 19 பேர் ஆதரவாகவும், 6 உறுப்பினர்கள் எதிர்த்தும் வாக்களித்தனர்.

சிங்களம் மட்டும் சட்டம் (Sinhala Only Act) அல்லது அதிகாரபூர்வமாக 19560ஆம் ஆண்டின் 33ம் இலக்க அரச கருமமொழிகள் சட்டம் - சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழி (Official Language Act) என்பதைக் குறிக்கும்.

இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன்மூலம் இலங்கையில் ஆட்சிமொழியான ஆங்கில மொழி அகற்றப்பட்டு பெரும்பான்மை சிங்களவர்கள் பேசும் சிங்கள மொழி ஆட்சி மொழியாக்கப்பட்டது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா சிங்கள மக்களுக்கு உறுதியளித்த படி சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்ததனால் .தமிழ்பேசும் சமூகம் கொந்தளித்தது.

சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராக தமிழரசுக்கட்சி அஹிம்சை முறையில் போராட்டங்களை அறிவித்தது. இத்தகைய போராட்டங்கள் அனைத்தும் அரசினால் அடக்கப்பட்டன.

1958இல் தமிழருக்கு எதிராக நடந்த இனக்கலவரமும், பின்னர், தமிழ் மக்களின் குறைகளை ஓரளவு தீர்க்கும் நோக்கில் செல்வநாயகம், பண்டாரநாயக்கா ஆகியோரிடையே ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

எவ்வாறாயினும், இவ்வொப்பந்தத்துக்கு எதிராக பௌத்த பிக்குகளாலும், எதிர்க்கட்சியாலும் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் காரணமாக ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதோடு 1959இல் கடும்போக்கு பௌத்த பிக்கு ஒருவனால் பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்டார்.

1960ல் பண்டாரநாயக்கவின் மனைவியான சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராகப் பதவியேற்றார். இவரே உலகின் முதல் பெண் பிரதம மந்திரியாகவும் சிறப்பப் பெறுகின்றார். 1962இல் ஏற்பட்ட கலகத்தையும் அவர் வெற்றிகரமாக எதிர்கொண்டார்.

1965ல் நடைபெற்ற தேர்தலின்பின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைத்துக்கொண்டது. அந்த அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியும் இணைந்துகொண்டு ஒரு அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்டது.

எனினும், அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக ஐ.தே.க அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாமையினால் தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகவேண்டியேற்பட்டது.

1970இல் நடந்த தேர்தல் சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மற்றும் இடதுசாரிக் கட்சிகள் இணைந்த ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தது.

சிறுபான்மையினருக்கெதிரான அடக்கு முறைகளும் சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைவர்களால் தூண்டப்பட்ட இன உணர்ச்சியும் 1970களில் வடபகுதியில் தமிழ்ப் போராட்ட இயக்கங்களின் வளர்ச்சிக்கு வழிகோலின.

1971இல், இலங்கையில் மாக்ஸியப் புரட்சி ஏற்பட்டது. எனினும், இது உடனடியாக அடக்கப்பட்டது. 1972இல் மேலாட்சி நிலை ஒழிக்கப்பட்டு நாடு குடியரசானது. நாட்டின் பெயரும் ஸ்ரீலங்கா என மாற்றப்பட்டது.

இந்தப் பதவிக் காலத்தில் புதிய குடியரசு அரசியல் சட்டத்தை உருவாக்கிய ஐக்கிய முன்னணி அரசு, முன்னைய அரசியல் சட்டத்தில் சிறுபான்மையினருக்கு வழங்கப் பட்டிருந்த பாதுகாப்புகளை நீக்கியதுடன், சிங்கள பௌத்தர்களின் அதிகாரத்தை வலுப்படுத்தியது.

இது சிறுபான்மையினருக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்தது.

இந்த நிலையில் தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து போராட முன்வந்தன.

விளைவாக எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.தொண்டமான் ஆகியோரைக் கூட்டுத் தலைவர்களாகக் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி தாபிக்கப்பட்டது.

இதன்பின்னர் சகல அரசியல் நடவடிக்கைகளும் மேற்படி கூட்டணியின் சார்பிலேயே நடைபெற்றன. இதனால் தமிழரசுக்கட்சி பெயரளவிலேயே இருந்துவந்தது.

கிடப்பில் கிடந்த மலையகத் தமிழரை நாடு கடத்தும் பிரச்சினை மீண்டும் உருவெடுத்தது. இலங்கைக் குடியுரிமைக்குத் தகுதியற்றவர்கள் எல்லோரையும் இந்தியா ஏற்றுக்கொள்ளவேண்டும் என்னும் இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியா ஏற்றுக் கொள்ளவில்லை.

இலங்கையில் இருந்து யாரையும் கட்டாயப் படுத்தி இந்தியாவுக்கு திருப்பியனுப்பக் கூடாது என்கிற நிலைப்பாடு கொண்டிருந்த நேரு 1964ல் காலமானதையடுத்து இந்தியப் பிரதமராக லால் பகதூர் சாஸ்திரி பொறுப்பேற்றார்.

இந்தப் பின்னணியிலேயே 1964இல் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டது ஆனாலும், தமிழர் தரப்பினர் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இது குறித்துப் பேசிய இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், இதை அதிகார அரசியலுக்காக அரை மில்லியன் மக்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்திக்கொண்டது பன்னாட்டு அரசியலில் முன்னெப்பொழுதும் இல்லாத மோசமான நடவடிக்கையென விவரித்தார்.

இவ்வாறே அடுத்தடுத்து வந்த ஒவ்வொரு சுதந்திர தினங்களும் சிறுபான்மையினரின் துயரங்களை மேலும் மேலும் அதிகரித்ததாகவே இருந்துவந்துள்ளன.

கறுப்பு ஜூலை என்றழைக்கப்படுகின்ற 1983 ஜூலைக் கலகம் தென்பகுதியில் தமிழ் மக்கள்மீது சிங்களப் பேரினவாதம் அடர்ந்தேறியதற்கு தகுந்த சான்றாக இன்றளவும் பேசப்படுகின்றது.

இதற்கு மத்தியிலேதான் தமிழர் உரிமைப் போராட்டம் தொடங்கி கடைசியில் அது பயங்கரவாதமாக உருவெடுத்து சுமார் கால் நூற்றாண்டு காலம் இலங்கை நாட்டைச் சீரழித்தது. பெரும்பாலும் எல்லா சமூகத்தினரும் பயங்கரவாதத்திற்குப் பலியானார்கள்.

அதனையும் தாண்டி வடபகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் எல்.ரீ.ரீ.ஈ.-யினரால் இனச் சுத்திகரிப்புச் செய்து வெளியேற்றப் பட்டார்கள். இன்றுவரை வடமாகாணத்தில் வாழ்ந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்கள் முழுமையாக மீள்குடியேற்றம் செய்யப்படாது சிலபோது கவனிப்பாரின்றி நாதியற்று அலையும் நிலையும் இன்றளவும் நீடிக்கிறது.

தனிச் சிங்களச் சட்டம், பௌத்தம் அரச சமயமாக்கப்படல், இலங்கைக் குடியுரிமைச் சட்டம், கல்வி தரப்படுத்தல் சட்டங்கள், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், நாடு பூரணமாக சிங்கள மயமாக்கம், வேலை வாய்ப்பில் இனப்பாகுபாடு உள்ளிட்ட இன்னும் பல பெரும்பான்மையின அரசாட்சியின் பாகுபாடுகள் காரணமாகவே தமிழர் உரிமைப் போராட்டம் அஹிம்சைவழியில் ஆரம்பித்து பின்னர் ஆயுதப் போராட்டமாக வியாபித்து ஈற்றில் அது பயங்கரவாத உருவெடுத்து 2009 மே 19 அன்று எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டதோடு தோல்வியைக் கண்டது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம், அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் இடையே ஜூலை 29. 1987ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும்.

இந்த ஒப்பந்தம் -

1. இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணிக்காக்க விரும்பி,

2. இலங்கை சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் ஆகியோரைக் கொண்ட பல்லின, பன்மொழி சமூகங்கள் வாழும் நாடு என்பதை உணர்ந்து,

3. மிகக் கவனமாகப் பேணிக் காப்பாற்ற வேண்டிய தனித்தனிக் கலாசாரம், மொழி அடையாளங்களை ஒவ்வொரு இனமும் கொண்டுள்ளது என்பதையும்,

4. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அங்கு ஏனைய இனக்குழுக்களுடன் எல்லா காலத்திலும் ஒன்றாக வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் பூர்வீகமான வசிப்பிடங்கள் என்பதையும் அங்கீகரித்து,

5. இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகிய அம்சங்களைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த சகல பிரஜைகளும் சமத்துவமாகவும், பாதுகாப்பாகவும், ஒற்றுமையாகவும் சுபீட்சத்துடன் தங்கள் அபிலாசைகளை நிறைவேற்றி வாழும் பல இன, பல மொழி பேசும் பல மதங்களைக் கடைப்பிடிக்கும் தன்மையைப் பேணி.

இலங்கை ஒரு பல்லின, பல்மத, பல்மொழி நாடாக ஏற்று வடகிழக்கை தமிழ், முஸ்லீம் மக்களின் இணைந்த தாயகப்பிரதேசமாக ஏற்று தமிழ்மொழியை அரச மொழியாக ஏற்று மாகாண சபைகளுடான அதிகாரப் பரவலாக்கத்தை முன்வைக்கின்றது.

இவ்வொப்பந்தம்மூலம் ஏற்படுத்தப்பட்ட வடகிழக்கு மாகாண சபை பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் செயல்படாமல் போனது.

இலங்கையில் தமிழ் மக்கள் பல ஆண்டுகளாக எதிர்கொண்ட பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம் இன்றுடன் (04.02.2015) கையெழுத்தாகி 28 சுதந்திர தினங்கள் கழிந்துவிட்டன.

எனினும், அதை நடைமுறைபடுத்த எத்தரப்பும் முழுமையாக செயற்படவில்லை என்பதால் அந்த ஒப்பந்தம் இன்றளவும் இந்தியாவின் மிகப்பெரிய இராஜந்திர தோல்வி என்றே விமர்சிக்கப்படுகிறது.

மைத்திரிபால சிறிசேனா இலங்கையின் 7ஆவது ஜனாதிபதியான அதேவேளை 6ஆவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாகவும் தெரிவுசெய்யப்பட்டு உள்ளார். நாட்டில் நல்லாட்சி நிலவ வேண்டும் என்பதும் சகல இனமக்களும் சம கண்ணோட்டத்தில் பராமரிக்கப்பட வேண்டும் என்பதும் முக்கியமான ஆதங்கமாக உள்ளது.

இந்தப் பின்னணியிலேயே இப்பொழுது நாம் இலங்கையின் 68ஆவது சுதந்திர தினத்தை அடைந்திருக்கின்றோம். சிறுபான்மையினரின் ஏக்கப்பெருமூச்சுக்கள் நிறைவேற தமிழரும் முஸ்லிம்களும், மலையகத்தவரும் நடுநிலை சிங்களவரும் ஒருமித்துப் பணியாற்றுதல் அவசியம். அதற்கு மைத்திரியின் ஆட்சி துவக்கப்புள்ளியாய் அமைந்தால் இந்த ஆண்டினதும் இனிவரும் ஆண்டுகளினதும் சுதந்திர தினங்களை எல்லா இனத்தவரும் அனுபவித்து ஆனந்தம் கொள்ளலாம்.

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**



# பொதுபலசேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

**முஸ்லிம்களின் அடிப்படை அம்சமான பள்ளிவாசல்களில் கைவைத்ததுதான் மஹிந்தவின் சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்து சிதறுண்டதற்கான காரணமாகும்.**
**- கே. துரைராஜசிங்கம்**

தொடர் -40

முஸ்லிம்களின் அடிப்படை அம்சமான பள்ளிவாசல்களில் கை வைத்ததுதான் மஹிந்த ராஜபக்ஷவின் சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்து சிதறுண்டதற்கான காரணமாகும் எனத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கே.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் அமீரலி வித்தியாலத்தில் 19.01.2015 அன்று அப்பாடசாலை அதிபர் எஸ்.அப்துல் கபூர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு துரைராஜசிங்கம் உரையாற்றினார்.

1956ஆம் ஆண்டு தமிழ் மக்களின் மொழியுரிமையான அடிப்படையில் கை வைத்ததன் காரணமாகத்தான் தமிழ் மக்கள் தங்களது தனித்துவத்தைக் காத்துக்கொள்ள வேறு வழிகளை நாடவேண்டியேற்பட்டது.

எனவே, இதெல்லாம் நமக்கு உணர்த்தும் பாடம் என்னவெனில் எந்தவொரு சமூகத்தினதும் அடிப்படை அம்சங்களில் வன்முரண்டாக எவரும் கை வைத்துவிடக் கூடாது என்பதேயாகும்.

மனிதத்துவத்தின் அடிப்படையில் மானுடம் வாழவேண்டும் என்ற சிந்தனையில் நாம் இணைந்து செயற்பட முன்வந்து இழந்து போன எமது உறவை மீளக் கட்டியெழுப்ப பாடுபடுவோம் என்றார்.

## புத்தர் சிலை அமைக்க முஸ்லிம் வர்த்தகப் புள்ளிகள் தாராள உதவி

பதுளை - மஹியங்கணையில் புத்தர் சிலை அமைப்பதற்காக அங்குள்ள முஸ்லிம் வர்த்தகப் பெரும் புள்ளிகள் பண உதவி செய்ததை இங்கே பட்டியலில் பார்க்கலாம்.

- Maliban Textile Garment, Padhiyatalawa Rd. Mahiyangana 500,000.00
- Mr. Sulaiman, Maliban Textile 271,750.00
- AMS Motors, Kandy Road, Mahiyangana 79,000.00
- Fahir Tyre Works, Padhiyatalawa Rd. Mahiyangana 52,750.00
- Bibila Trading and Forwarding, Mahiyangana 50,000.00
- Central Traders, Padhiyatalawa Rd. Mahiyangana 30,250.00
- New Lanka Hardware, Mahiyangana 30,250.00
- Ganga Motors, Mahiyangana 30,250.00
- Colombo Traders, Tile Factory Rd. Mahiyangana 21,500.00
- Ganga Traders, Tile Factory Rd. Mahiyangana 20,250.00
- Nipon Traders, Padhiyatalawa Rd. Mahiyangana 17,850.00
- Multi Jewelry, New Town, Mahiyangana 10,050.00 1,083,650.00
- Hon. Minister Nimal Sripala de Silva 38,250.00
- CommercialBank,Mahiyangana 30,000.00

(Source: http://www.mahiyanganasamadhi.lk )

பெரும்பான்மையினர் மீதுள்ள பயத்தின் காரணமாக தங்களது வியாபார நோக்கத்தை மாத்திரமே குறியாகக் கொண்டு முஸ்லிம் வர்த்தகர்கள் சிலர் இந்தளவு பெருந்தொகைப் பணத்தை புத்தர் சிலை அமைப்பதற்காகக் கொடுத்திருக்கின்றார்கள்.

ஆனால், இஸ்லாத்தின் பார்வையில் சிலைகளை அமைப்பதற்கு ஒரு முஸ்லிம் உதவமுடியாது என்பதும் அது இறை நிராகரிப்பிற்கு இட்டுச் செல்லும் என்பதும் எச்சரிக்கப்பட்ட விடயமாகும்.

புத்தர் சிலை அமைப்பதற்கு வழங்கிய இந்தப் பணத்தொகைகளை எந்த மதத்தைச் சார்ந்த ஏழைகளாக இருந்தாலும் அவர்களுக்கு வாரி வழங்கி இருக்கலாம் என்பதும் அதனை இஸ்லாம் ஊக்குவிக்கின்றது என்பதும் இங்கு கவனிக்க வேண்டிய கருத்தாக உள்ளது.

ஒரு காலத்தில் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கும் பயந்து முஸ்லிம் வர்த்தகப் புள்ளிகள் அந் நாட்களில் பணத்தை வாரியிறைத்து இருந்தனர் என்பதும் இங்கே நினைவூட்டத்தக்கது.

**பொதுபலசேனா அமைப்பை தடை செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இந்தக் கோரிக்கை அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை ஒன்றியத்தினால் விடுக்கப்பட்டுள்ளது.

பொதுபலசேனா அமைப்பு இனங்களுக்கிடையில் ஒற்றுமையின்மையை தோற்றுவிப்பதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்தார்.

கொழும்பு மருதானையில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“சிங்கள மக்கள் பற்றி உரையாற்றி சிங்கள மக்களின் இரத்தத்தை சூடேற்றி அதன் ஊடாக மஹிந்த ராஜபக்ஷவை வெற்றியீட்டச் செய்ய பொதுபலசேனா முயற்சித்தது. இந்த முயற்சியினால் சிங்கள மக்கள் சர்வதேசத்தின் முன்னிலையில் தோல்வியைத் தழுவியுள்ளனர். கடந்த ஜனாதிபதி தேர்தலில் உண்மையான சிங்கள பௌத்தர்கள் தோல்வியடையவில்லை.

சரியான சிங்கள பௌத்தர்கள் மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்களித்து அவரை வெற்றிபெறச் செய்துள்ளனர். எனினும் பொதுபல சேனா அமைப்பு தோல்வியைத் தழுவியுள்ளது.

பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசங்களில் இடம்பெற்ற கலவரத்திற்கு பொதுபலசேனா அமைப்பு பொறுப்புக் கூறவேண்டும்.

பொதுபலசேனாவின் மாநாடுகளுக்கு பெருந்தொகை பணம் செலவிடப்பட்டது. இந்தப் பணம் எங்கிருந்து கிடைக்கப்பெற்றது? இதுபற்றியெல்லாம் விசாரிக்கவேண்டும். பொதுபலசேனா அமைப்பிலுள்ள சில பௌத்த தேரர்களின் வாகன சாரதிகளாக இராணுவப் படையினர் கடமையாற்றுகின்றனர்” என்று அவர் மேலும் சொன்னார்.

## மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசு...

2015 ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்து புதிய ஜனாதிபதியாக பொலனறுவை மாவட்டத்தைச் சேர்ந்த மைத்திரிபால சிறிசேன 62,17,162 வாக்குகளை (51.28 வீதம்) பெற்று இலங்கையின் 7ஆவது ஜனாதிபதியான அதேவேளை 6வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, பொதுபலசேனா என்கின்ற கடும்போக்கு பௌத்த தீவிரவாத இனவெறி அமைப்பு பகிரங்கமாகவே ஆதரவுவழங்கிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 57,68,090 வாக்குகளை (47.58 வீதம்) பெற்று தோல்வி அடைந்துள்ளார்.

இதன்பின்னர் அதிகார அனுசரணை இல்லாது பொதுபல்சேனா தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

சிறுபான்மையினர் கொஞ்சம் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் சிறுபான்மையினரின் இந்த நிம்மதிப் பெருமூச்சு எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாது.

காரணம், மைத்திரிபால சிறிசேனவின் அரசிலும் பொதுபல சேனா என்கின்ற தெருச்சண்டியர்களை விட சூட்சுமமாகவே காய் நகர்த்தி சிறுபான்மையினரைக் கருவறுக்க சதாவும் சிந்தித்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஜாதிக ஹெல உறுமயவின் பாட்டலி சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் ஒட்டிக்கொண்டு இருக்கின்றார்கள் என்பதையும் இங்கே சிறுபான்மையினர் நினைவிற் கொண்டாகவேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவின் சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்ததோடு பௌத்த தீவிரவாதமும் தோல்வி அடைந்துவிட்டது. சிறுபான்மையினரின் ஆதரவோடு மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி நிரந்தரமாகவே பெரும்பான்மை பௌத்த இனவாதத்தைத் தோல்வியடையச் செய்துவிட்டது இனிலெல்லாம் சுபம் என்ற முடிவுக்கு எவரும் வந்தால் அது சிறுபிள்ளைத்தனமான சிந்தனையாகும்.

## இனி - இடைவேளைக்குப் பிறகு?

◐ 2015 முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தின் நூற்றாண்டு?

◐ முஸ்லிம் இன ஒழிப்பு? கருத்தடை, கருவளம் அழிப்பு.

◐ முஸ்லிம்களின் அனைத்து நடவடிக்கைகளும் முடக்கப்படுமா?

◐ இலங்கை முஸ்லிம்கள் உலக தீவிரவாதிகளாக மாற்றப்படுவார்களா?

◐இஸ்லாமிய சமய, கலாசார தொடர்பற்ற சிங்கள முஸ்லிம்கள்?

◐முஸ்லிம்கள் அற்ற நகரங்கள்?

◐8 வீதத்தைத் தாண்டாத, அடிமைத்துவச் சமூகம்?

◐மிருக வதைத் தடைச் சட்டம் (சமய நடவடிக்கைகளுக்கு ஆப்பு- மைத்திரியின் 100 நாள் வேலைத் திட்டத்தில் 87 மற்றும் 99 ஆம் நாள் பணிகள்)

◐தொகுதிவாரி பிரதிநிதித்துவம் மூலம் சிறுபான்மை நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் குறைக்கப்படுதல்.

## எதிர்பார்ப்பும் ஆதங்கமும்

பெரும்பான்மையினருடன் இணைந்துதான் முஸ்லிம்களும் தமிழர்களும் சிங்கள பௌத்த கடும்போக்குவாதத்தை முறியடிக்க வேண்டும் என்ற சிந்தனை முகஞ்சுழிப்பின்றி எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று. அப்போதுதான் இலங்கைத் தீவில் இனங்களுக்கிடையில் நீடித்து நிலைக்கும் அமைதியும் ஆனந்தமும் அபிவிருத்தியும் கௌரவமும் தங்கியிருக்கும்.

அதிகாரத் தரப்பின் எதிர்ப்புகளை எதிர்கொள்ளும் சவாலை ஏற்றுத் துணிந்து நின்று இக்கட்டுரையை வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய அனைத்துத் தரப்பினருக்கும் என்றென்றும் நன்றி சொல்லவேண்டும்.

மேலும், லங்கா முஸ்லிம், பி.பி.சி, தமிழ் மிரர், விடியல் ஆகிய இணையத்தளங்கள் இக்கட்டுரையை எழுதுவதற்கு உசாத்துணைத் தகவல்களைப் பெற உதவியிருந்தன.

பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா? என்ற இந்தக் கட்டுரைத் தொடர் அதன் 40 ஆம் அங்கத்துடன் நிறைவு பெறுகின்றது.

(முற்றும்)

# விஷத்திற்கு பொதுவான மருந்து



சஹாரா பாலை வனப்பகுதிக்கு கீழேயுள்ள நாடுகளில் காணப்படும் அனைத்து விதமான விஷப் பாம்புகளின் கடிகளுக்கும் எதிராக செயற்படக்கூடிய விஷ முறிவு மருந்தொன்றை உருவாக்கும் முயற்சியில் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

பிரிட்டனின் லிவர்பூலில் உள்ள, வெப்பமண்டலப் பகுதிகளுக்கான மருத்துவப் பள்ளியின் ஆய்வாளர்கள் சுமார் 400 விஷப் பாம்புகளின் விஷத்திலிருந்து புரதங்களை சேகரித்து வருகின்றனர். அதிக வெப்பத்தால் மருந்து கெடாமல் இருக்கவேண்டும் என்பதற்காக இந்தப் புரதங்களுடன் வேறு சில வேதிப்பொருட்களும் சேர்க்கப்பட்டு புதிய மருந்து உருவாக்கப்படும்.

இந்த மருந்தை உருவாக்குவதற்காக வாரம்தோறும் 80 பாம்புகளிலிருந்து விஷம் எடுக்கப்படுகிறது. சஹாராவுக்கு கீழேயுள்ள பகுதிகளில் ஆண்டுதோறும் 30 ஆயிரம் பேர் பாம்புக்கடிகளினால் உயிரிழக்கின்றனர். இந்த முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் நமக்கும் நன்மையளிக்கும் என நம்பலாம்.

# அடங்காத மலேரியா ஒட்டுண்ணிகள்!

மலேரியா ஒட்டுண்ணிகளை மிகவும் சக்திவாய்ந்த சிகிச்சையினால்கூட எப்படி கட்டுப்படவைக்க முடியவில்லை என்று ஆராய்ந்த விஞ்ஞானிகள் இதற்குக் காரணமான உருமாற்றத்தைத் தாங்கள் கண்டறிந்துள்ளதாகக் கூறுகின்றனர்.

இதுதொடர்பில் அவர்கள் கூறுகையில், விரைந்து பரிணாம வளர்ச்சி கண்டுவரும் இந்த ஒட்டுண்ணிகளைக் கட்டுப்படுத்த 1950களிலிருந்தே தொடர்ந்து ஒன்று மாற்றி ஒன்று பயன்படுத்தப்பட்டுவரும் மருந்துகள் யாவும் பயனற்றதாகிவிட்டன என்று கூறுகிறார்கள்.

ஒவ்வொரு முறையும், இந்த மலேரியா ஒட்டுண்ணிகளிடமிருந்து இந்த மருந்து எதிர்ப்பு சக்தி, தாய்லாந்து எல்லையிலேயே உருவாகியதாக அவர்கள் கூறுகிறார்கள். இதன் பின்னர்தான் இந்த மலேரியா ஒட்டுண்ணிகள் ஆபிரிக்காவுக்கும் பிற இடங்களுக்கும் பரவியதாக அவர்கள் கூறுகிறார்கள்.



இப்போது விஞ்ஞானிகள் இந்த மரபணு மாற்றங்கள்தான் இந்த ஒட்டுண்ணிகள் ஒழிக்கப்படுவதிலிருந்து தப்ப உதவுவதாகக் கண்டறிந்து இருக்கிறார்கள். மேலும் இது குறித்த ஆராய்ச்சிகள் இது எப்படி நடக்கிறது என்பதை அறிய உதவும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

# பல்லுப் போனால் சொல்லுப் போச்சு!

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். முகத்தின் அழகு ஒவ்வொருவரின் புன்னகையில் தெரியும்! அழகான புன்னகைக்கு அடிப்படை ஆரோக்கியமான பற்கள். அவற்றைப் பராமரிப்பது குறித்துப் பார்ப்போம்.

பொதுவாகக் குழந்தைகள் அதிக சொக்லேட், ஐஸ்கிரீம் போன்றவற்றை விரும்பி உண்பார்கள். முடிந்தவரை இவற்றைத் தவிர்ப்பது நல்லது. இல்லையென்றால் இவற்றை உண்டபின் நன்றாக வாய் கொப்பளிப்பது பல்லுக்கு நல்லது. உணவு வகைகளைப் பொறுத்தவரை, நார்ச்சத்து மிக்க உணவு வகைகள் உடல்நலனுக்கு மட்டுமல்லாமல் பல்லுக்கும் மிகவும் நல்லது. அடுத்து கல்சியம் நிறைந்த பால், தயிர், முட்டை போன்றவற்றையும் உணவில் போதுமான அளவு சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு முறை உணவு உண்டபின், வாய் கொப்பளித்து பற்களைச் சுத்தம் செய்வது நன்று. கண்டிப்பாகக் காலையும் இரவும் பற்களைச் சுத்தம் செய்யவேண்டும். இரவில் சுரப்பிகள் மிகமிகக் குறைந்த அளவிலேயே உமிழ்நீரைச் சுரக்கின்றன. எனவே, வாய் சுத்தமாக இல்லாவிட்டால் பல் சொத்தையை உண்டாக்கும் பக்ரீரியாக்கள், உணவுத் துணுக்குகளோடு பல்கிப்பெருகி பற்சிதைவை உண்டாக்கும். அதனால் காலையும் இரவும் கண்டிப்பாகப் பல் துலக்கவேண்டும்.



குழந்தைகளும் இப்பழக்கத்தைக் கடைப்பிடிக்க அவர்களை ஊக்கப்படுத்தவேண்டும். ஒவ்வொரு முறை பல்துலக்கும்போதும் தரமான புளோரைட் நிறைந்த பற்பசையையும் மிருதுவான பல்துலக்கியையும் பயன்படுத்தவேண்டும். பற்களை அதிக அழுத்தம் கொடுத்துத் தேய்க்கக்கூடாது. மிருதுவான, குறைந்த அழுத்தமே போதும். 2-3 நிமிடங்களில் எல்லாப் பற்களையும் சுத்தம்செய்வது, நாக்கு, அன்னம், வாய் ஈறுகள், உட்புறத் தசைகள் போன்றவற்றையும் சுத்தம்செய்வதுடன், விரல்களால் ஈறுகளுக்கு 'மசாஜும் செய்யவேண்டும்.

பல்துலக்கியைக் குறைந்தது 3-4 மாதங்களுக்கு ஒருமுறை மாற்றிக்கொள்ள வேண்டும். வருடத்துக்கு ஒருமுறை தேர்ந்த பல் மருத்துவரிடம் சென்று பல் சுத்தம் செய்துகொள்வது மற்றும் பற்களைப் பரிசோதனை செய்துகொள்வது நன்மை தரும். பற்சிதைவை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் பற்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

சிறு கதை

# உண்மைக் காதல்

புதுக்குடியிருப்பு, ந.பிரசன்னா.

அன்று அதிகாலை ஐந்து மணி வழமை போல தன் கடமைக்குச் செல்வதற்காக தலையணையில் இருந்து தலையை உயர்த்தினாள் சர்மி. என்ன ஆச்சரியம் நேற்று மாலை வேளையில் நனையாத தெருக்கள் இருந்து இருக்கும். ஆனால் சர்மியின் விழிகளில் அடைமழை பெய்ததால் அவளின் தலையணையில் இருந்து விழிநீர் வடிந்தது.

மெதுவாக எழுந்தவள் அப்படியே சுவரில் தலையை சாய்க்கிறாள். மனதிலே சொல்ல முடியாது சோகங்கள் இவளுக்குள் புதைந்து இருந்தன. சர்மி ஒரு தனியார் மருத்துவமனையில் தாதியாகப் பணி புரிந்துவருகிறாள். இவளுக்கு இரவு, பகல் எனக் கடமை நேரங்கள் மாற்றப்படும். இருந்தாலும் இரவுக் கடமைகளையே அதிகம் செய்யத் தயாரானாள் சர்மி.

காரணம் இறைவ்ன் இரவைப் படைத்தது உயிர்களின் அமைதியான உறக்கத்திற்காக. ஆனால் சர்மிக்கோ ஒவ்வொரு இரவுகளும் புயலோடு, காற்றுமாய் அடைமழை பெய்யும். ஒவ்வொரு இராப்பொழுதும் இவளின் விழிகளில் அடைமழைதான்.

சுவரிலே தலையை சாய்த்தவள் தன் பக்கத்தில் கிடந்த டயறியை எடுத்து திறந்தாள். இராமுழுவதும் விழிநீர் வடித்து களைத்துப் போனேனோ என்னமோ...? வடிந்த கண்ணீர் காய்ந்துவிட்டது. டயறியைத் திறந்து தன் முகத்துக்கு முன்கொண்டு வந்து முத்தமிட்டபடி மனதிலே இடிமுழக்கம் இரண்டாம் மழை ஆரம்பமானது.

பொலு பொலு என கண்களில் இருந்து அருவிகொட்டியது... அந்த டயறியில் அப்படி என்னதான் பார்த்திருப்பாளோ..? ஆம். நன்றாக நினைவிருக்கிறது. அவள் பார்த்தது வேறொன்றும் இல்லை. இவளின் இதயத்தில் காதலை விதைத்து தினம் தினம் கலங்கவைத்து விலகிநின்று வேடிக்கை பார்க்கும் கல்நெஞ்சு படைத்த லோகேசின் புகைப்படம்தான்.

சர்மியின் இரண்டாவது மழைக்கான காரணம். மீண்டும் தலையை சுவரில் சாய்ந்தவளாய் விம்மி விம்மி வாய்விட்டு அழுகிறாள். இரண்டோ மூன்று மணித்தியாலங்களாய் ஓயாத அடைமழைதான். பின்னர் சற்று ஓயத் தொடங்கியது. அழுகையை நிறுத்தியவள் தன் சிந்தனையை ஏதோ திசையில் திரும்பி விட்டாளோ தெரியவில்லை. கண்கள் இரண்டும் மெதுவாக மூடப்படுகிறது. உறக்கமோ இவளை மெதுவாகத் தாலாட்டுகிறது.

உறக்கத்துக்கு சொல்லமுடியாத சந்தோசம் பல நாட்களுக்குப்பின் சர்மியைத் தாலாட்டுவதில் ஒவ்வொரு மனிதனின் படைப்பிலும் இறைவன் சிறுசிறு துன்பங்களையும் வலிகளையும் கொடுத்திருக்கிறான். ஆனால் சர்மியோ ஒவ்வொரு நிமிடங்களும் வலியையும் சுமையையும் சுமந்தவளாய் தன் வாழ்நாளை நகர்த்துகிறாள்.

யார் செய்த பாவமோ நான் அறியேன். இவளின் நிலையோ மிகவும் பரிதாபகரமானது. ஒவ்வொரு மனிதனின் பிறப்புக்கு முன்னால் ஒரு சிறுகதை இருக்கிறதோ நானறியேன். ஆனால் சர்மியின் பிறப்புக்கு முன்னரே இவளுக்கான ஒரு வலி ஆரம்பமானது. அவை இப்போ தொடர்கிறது.

சர்மி கருத்தரித்து ஒன்பதாம் மாதத்திலே இயமதர்மன் இவளின் தந்தையைப் பறித்து விட்டான். பின் தந்தையின் முற்பத்தி ஓராம் நாள் சடங்கிலே வலிகளை சுமப்பதற்காக கருவறையில் இருந்து வெளியேறுகிறாள் சர்மி. ஆனால் இவளின் உறவுகளுக்கு தாங்கொணாத்துயரம் தந்தையைத் தின்றுவிட்டு பெண்ணாய் பிறந்துவிட்டாளே. என்று.

யார்தான் என்ன செய்யமுடியும்? அதுவும் ஒரு வேதனைதான். இவ்வாறு காலங்கள் கடக்கின்றன. சர்மிக்கோ வயது எட்டாகிறது. இவளின் தாய் மரகதம் கணவனை இழந்தவளாயும் வயதிலே சிறியவளாயும் காணப்பட்டபோது மரகதத்துக்கு பக்கத்து வீட்டுப் பையன்மேல் காதல் கருக்கட்டியது. காதலோடு ஓர் இரு மாதங்கள் கடந்தன. செய்வதறியாது திக்குமுக்காடினாள் மரகதம்.

குயிலினம் பாட்டிசைக்க, காகங்கள் கரைந்திட, ஏழைகளின் கடிகாரம் சேவல்...! விடிந்துவிட்டதாக குரலெழுப்ப, கடல் நீரிலே முகம் கழுவி சூரியன் மெல்ல மெல்ல தன் வரவைத் தொடர்ந்திட, காலை என்றாலே அவரவர் தங்கள் கடமைகளைத் தொடர்வார்கள். ஆனால் அன்று இரவு மூடப்பட்ட மரகதத்தின் கதவு இன்னும் திறக்கப்படவில்லை.

மிகவும் சிறியவளான சர்மி தந்தையின்றி தாயின் அரவணைப்பில் மிகவும் செல்லமாக வளர்ந்தவள். தான் படுக்கையைவிட்டு எழும் போது தாய்முகம் கண்டுமகிழ்வாள். வழமை போல் உறக்கத்தில் இருந்து கண்விழித்து அங்கும் இங்குமாய் தலையை சாய்த்து தன் தாயைத்தேடுகிறாள். எத்திசையிலும் மரகத்தைக் காணவில்லை.

சட்டென்று எழுந்து படுக்கையில் உட்கார்ந்த வண்ணமாய் அம்மா... அம்மா... பதில் எதுவும் கிடைக்கவில்லை. கண்களை இருகரங்களாலும் குடைந்தவளாய் தேம்பி, தேம்பி அழத் தொடங்கினாள். இவளின் அழுகைக் குரல் வீட்டுக்குப் பின்புறம் பட்டியில் பால் கறந்து கொண்டிருந்த பரமசிவத்தாரின் காதில் விழுந்து விட்டது. பரமசிவத்தார் வேறு யாரும் இல்லை. சர்மியின் தந்தைக்கு சமனான பெரியப்பா.

மரகதத்தின் வீடுநோக்கி விரைவாக ஓடி வந்தார் பரமசிவம். கதவு பூட்டப்பட்டிருந்தது. யன்னல் வழியாக சர்மி... சர்மி... ஏன் குஞ்சு அழுகிறாய் கொம்மா எங்க? அம்மா.. ம்....ம்..ம்... அம்மா... ம்...ம் அம்மாவைக் காணல்ல. பெரியப்பா என்று வாய்விட்டு அழுதாள் சர்மி.



கொஞ்சம் பொறம்மா வெளியால எங்கையாலும் நிக்கிறாளோ தெரியேல்ல. கூப்பிட்டுப் பார்க்கிறன் என்றபடி...!

மரகதம்... மரகதம்... எங்க போட்டாள். விடிய வெள்ளன? பொட்ட அழுகுது என்று தனக்குள் முணுமுணுத்தபடி வீட்டை ஒரு வலம் வந்துவிட்டார். எங்கேயும் மரகதம் கிடைக்கவில்லை. எங்கே போய் தெலஞ்சாளோ. பெட்ட அழுகுது. அவள முதல் தூக்குவம் என்று கதவை உடைத்து சர்மியைத் தூக்கி தன் தோழில் போட்டுக் கொண்டு அழாதயம்மா. கொம்மா கடப்பக்கம் போயிருப்பாள், இப்ப வந்திடுவாள். எதுக்கும் நீ பெரியம்மாவோட இரு.

பெரியப்பா தெருவில போய் பார்த்துக்கொண்டு வாறன் என்று கூறியபடி தன் மனையிவிடம் சர்மியைக் கொடுத்துவிட்டு தெருப்பக்கம் செல்கிறார் பரமசிவம்.

இண்டைக்கு ஏன் விடிய வெள்ளன வந்து நிக்கிறாங்கள்? எண்டு தனக்குள் எண்ணியபடி சந்தியை நெருங்குகிறார் பரமசிவம்.

அடேய் என்ர இந்த வெள்ளன வந்து நிக்கிறியள் இவடத்த? என்று கேட்டவுடன் அவர்களிடம் இருந்துவந்த பதில் பரமசிவத்தின் இதயத்தைக் கிழித்தது. தலையில் இடிவிழுந்த மாதிரி இருந்தது. என்ன பரமசிவத்தார் வெள்ளயும் சொள்ளையுமாய் வாறாய். உங்கட குடும்பமும் ஒரு குடும்பமோ...?

என்ன கதையட கதைக்கிறியள். கதையை அளந்து கதையுங்கோ. நடந்தது அறியாத பரமசிவம் வார்த்தையை விடுகிறான்.

சீ... தூ... ஒரு பெண்புள்ளயை நடுத்தெருவில விட்டுட்டு உன்ர தம்பின்ர மனுசி பக்கத்து வீட்டுக்காரனோட பாஞ்சது எங்களுக்கு என்ன தெரியாது எண்டே நினைக்கிறாய்?

அய்யோ என்னடா சொல்லுறியள் என்று ஏங்கி விழுந்த பரமசிவத்தை அவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள். பின்னர் குணமடைந்து வீட்டுக்கு வந்தார் பரமசிவம். இதுவே சர்மியின் இரண்டாவது வலி இனிதே ஆரம்பமானது.

அன்றைய காலத்தில் பொருளாதாரத் தட்டுப்பாடு. பண வசதி, வேலைவாய்ப்புக்கள், இல்லை பரமசிவத்திற்கு. அவருக்கும் மூன்று பிள்ளைகள். என்ன செய்வதென்று அறியாமல் ஒரு நாள் சிந்தித்து நல்ல முடிவுக்கு வந்தார்.

சர்மியின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும். பிள்ளை நன்றாகப் படிக்கவேண்டும் என்று எண்ணி சர்மியை ஒரு சிறுவர் மடத்தில் இவளை கொண்டுபோய் எட்டு வயதிலே விட்டுவிட்டார்.

சர்மியோ சரியான கெட்டிக்காரி. ஒவ்வொரு தவணைப் பரீட்சையிலும் முதலாம், இரண்டாம் ஆளாகவே வருவாள். இவ்வாறு நாட்கள் கடந்தன. சர்மிக்கோ வயது பதினைந்து. பதினாறு ஆகிறது. O/L, A/L என எல்லாப் பரீட்சையிலும் சித்தி அடைந்தாள் சர்மி.

இவளின் சொந்த இடம் வன்னி. பண்டார வன்னியனின் பெயர் சொல்லும் வன்னிப்பெரு நிலப்பரப்பில் யுத்தம் ஆரம்பமானது.

இதன்பின்னர் சிறுவர்களைப் பாதுகாக்க இயலாமல் உறவுகளிடம் ஒப்படைத்தார்கள். சர்மியும் பருவ வயசாகக் காணப்பட்டாள். இவளையும் பெரியப்பாவான பரமசிவத்திடம் ஒப்படைத்து விட்டனர்.

யுத்தத்தினால் ஏற்பட்ட எறிகணைக்குப் பாய்ந்து ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து இருந்து இறுதியாக முள்ளி வாய்க்காலை சென்றடைந்தனர்.

கதைகூறும் என்னால் தாங்கமுடியவில்லை. பாவம் அவள் சர்மி எப்படித்தாங்கி இருப்பாள்...? ஊய்.... டமார்... ஊய்... டமார்... எறிகணை. சர்மியும் அவளின் பெரியம்மா குடும்பமும் இடி இருந்த தறப்பாள் கொட்டிலுக்குமேல் விழுந்தது. அடிக்கு மேல் அடி என்பதுபோல் வலிக்குமேல், வலி இவளுக்குத்தான் நிகழ்கிறது. "அய்யோ பெரியப்பா" எங்களை விட்டுட்டுப்போய்ட்டிங்களே..? ஆம் எறிகணை வீச்சிலே தன் உயிரை இழந்தார் பெரியப்பா. கணவனை இழந்த வேதனையிலும் தங்கள் தந்தையை இழந்த வேதனையிலும் துடித்தது சர்மியின் பெரியப்பா குடும்பம். நாட்கள் நகர யுத்தம் முடிவடைந்தது. சிறிலங்கா இராணுவத்தினரால் எஞ்சிய மக்கள் மீட்கப்பட்டனர்.

பின்னர் அனைவருமாக வவுனியா செட்டிக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட அகதிகள் முகாமில் அமர்த்தப்பட்டார்கள். சர்மிக்கு தன் பெரியம்மாவையும் உடன்பிறவா சகோதரர்களையும் பார்க்க, அவளால் தாங்கமுடியவில்லை. செய்வதறியாமல் தன்னையே குழப்பிக்கொண்டிருந்தாள்.

மனதில் இப்படி ஒரு சிந்தனை அவளுக்கு ஏற்பட்டது. பெரியம்மா ஒரு பெண்ணாக இருந்து தன் மூன்று பிள்ளைகளையும் என்னையும் எப்படி வளர்ப்பா..? வேண்டாம் நான் பெரியம்மாவிற்கு சுமையாய் இருக்கக்கூடாது. பெரியம்மாவிடம் இருந்து எங்கையாவது சென்று விடவேண்டும் என்று எண்ணிக் கொண்டு தன் கண்ணில் இருந்து வடிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

அப்போது "படைத்தவன் படி அளக்காமலா போய்விடுவான்" ஒவ்வொரு குடிசைகளுக்கும், ஒரு சபையைச் சேர்ந்த போதகர்களும், ஊழியக்காரர்களும் அன்பர் இயேசுவைப் பற்றி சத்தியம் சொல்லிக் கொண்டுவந்தார்கள்.

உண்மைதான். இயேசு திக்கற்றவர்களையும். பாவிகளையும். விதவைகளையும். நேசிக்கிறவராய் இருக்கிறார். அதனால் போதகர் மூலமாய் சர்மியைத் தேடிவந்தார் என்பது நம்பத்தக்க உண்மையே...!

இவ்வாறு அவர் சொல்லிமுடிந்ததும் வந்ததில இருந்து நானே கதைக்கிறன். உன்னைப் பற்றி சொல்லம்மா...? என்றார் போதகர். எதைச் சொல்வாள் சர்மி. ஒன்றா? இரண்டா? எதைச் சொல்லித் தீர்ப்பாள். கண்களில் கண்ணீர் முட்டியது. நடந்தவற்றை விபரமாக எடுத்துக்கூறினாள் சர்மி. இதைக் கேட்ட போதகருக்கும் கண்கலங்கலானது. இவளின் விருப்பப்படியே தலைமைப்பீடத்திடம் கதைத்துவிட்டு வருகிறேன் என்று கூறி சென்றுவிட்டார் போதகர்.

அப்போது சர்மி க.பொ.த. உயர்தரத்தில் உயர் சித்தி பெற்றவளாய் காணப்பட்டாள். இவளுக்கு மருத்துவம் கற்கவேண்டும் என்பதே விருப்பமும்.

இவளின் விருப்பப்படியே தனியார் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் இவளை மருத்துவத் தாதிப் பணிக்கு கற்பதற்காக அந்நிறுவனத்தின் ஊடாக மருத்துவத் தாதி மாணவியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டாள்.

பின்னர் அவள் இலகுவில் எல்லாவற்றையும் நிறைவாகக் கற்கக்கூடியவள். திறமைசாலி. என்வே இரண்டு வருட தாதி மாணவர் படிப்பை முடித்து உலகளாவிய ரீதியில் நிறைவான தாதிப் பட்டம் பெற்று. ஒரு சிறந்த தாதியாக பணியாற்றிவந்தாள். இவளின் முன்னேற்றத்திற்கு கண்கண்ட தெய்வமான போதகரே காரணம். இவள் படிப்பை நிறைவேற்றும்வரை இவளைத் தாங்கிய தெய்வம் அவரே.

இப்போது கைநிறைய சம்பாதிப்பவளாக சர்மி காணப்பட்டாள். அதுமட்டும் அல்லாது கலைத்துறையிலும் கொஞ்சம் ஆர்வம் இருந்தது. கவிதைகள், சிறுகதைகள் என இவர் எழுதுவதுண்டு. வானொலிகள், பத்திரிகைகளிலும் இவளின் கவிதைகள் தவழ்ந்ததுண்டு. இப்படியே நாட்கள் நகர்ந்தன. இவளைவிட கவித்துறையில் பல படைப்புக்களையும், பல கவிகள், கட்டுரைகள், சிறுகதைகள் எனப் புரட்சி படைத்துவரும் கவிஞனாக யோகேசும் காணப்பட்டான்.

இவன் பார்வைக்கு அழகானவன். ஆனால், இவர்கள் இருவரும் கவிதைகளில் பல பங்குகள் வகிப்பதால் இருவருக்கும் எப்படியோ சந்திப்பு ஏற்பட்டு தொலைபேசி உரையாடலும் ஆரம்பமானது.

இவ்வாறு நாட்கள் நகர்ந்தன. யோகேஸ் சர்மிமேல் அதிக அக்கறை கொண்டு பாசத்தைவாரி இறைத்தான். அவனின் அன்பும், ஆதரவும் சர்மியை காதல்வலையில் விழுத்தியது.

யோகேசுக்கும் சர்மிமேல் காதல் வளர்ந்தது. ஆனால் சர்மியிடம் இருந்தது உண்மைக் காதல். உயிர் உள்ள காதல். ஆனால் யோகேசிடம் காமக்காதல் மட்டுமே காணப்பட்டது. இதை அறியாத சர்மி யோகேசின் ஆழ்ந்த அன்புக்கு தன்னை அடிமையாக்கிக்கொண்டாள். தன் வலையில் வசமாக மாட்டிய சர்மியை ருசிக்க நினைத்தான் யோகேஸ். அவனின் ஆசைக்கு தலையசைத்தாள். இன்று காதலுக்காக கற்பை இழந்தவளாய்...! இவ்வாறு நாட்களும் நகர்கின்றன. யோகேசும் கவித்துறையில் மேலும் மேலும் வளர்வதைக் கண்டு மகிழ்கிறாள் சர்மி.

தன்னவன் தன்னைவிட்டுச் செல்லப் போகிறான் என்பதை அறியாமல்.

இப்போது யோகேசின் காதலை எதிர்பார்த்து பெண்கள் கூட்டம் வரிசையாய் இவனுக்கோ தொடர்புகள் அதிகரிக்கின்ற கொஞ்சம் கொஞ்சமாய் சர்மியின் தொடர்பைத் துண்டிக்கிறான் யோகேஸ். வலி தாங்கமுடியாமல் வதைபட்டு நின்றாள் சர்மி. யோகேசின் சிந்தனை மாறுபட்டுவிட்டதையும் தன்னை அவன் வெறுக்கிறான் என்பதையும் நன்கு உணர்ந்துகொண்டு இதைப் பற்றி பலமுறை யோகேசிடம் அன்பாகவும், அதிகாரமாகவும் உரையாடினாள் சர்மி.

இவளின் நிலை கண்டு சர்மியின் நண்பர்கள் சிலர் யோகேசிடம் இந்த விடயம் சம்பந்தமாக கோபம்கொண்டு பல கேள்விகளைக் கேட்டார்கள்.

அவர்களுக்கு யோகேஸ் கூறிய பதில் நான் அவளைத் திருமணம் முடிப்பேன் என்று வாக்குறுதி கூறிவிட்டு, அதேசமயம் சர்மிக்கு அழைப்பை மேற்கொண்டு என்னை உனது நண்பர்களிடம் அவமானப்படுத்திவிட்டாய். உன்னை நான் காதலிக்கவில்லை. எனக்கு வீட்டில் திருமணம் பார்க்கிறார்கள். நான் முடிக்கப் போகிறேன். எனது திருமணத்தைக் குழப்பிடாதே என்று புலம்பினான். தன்னால் சீரழிந்துபோன சர்மியின் வாழ்க்கையை சிந்திக்காதவனாய்.

அவன் நன்றாக இருக்கவேண்டும் என்று மனதில் திடமான முடிவுகளோடு ஒவ்வொரு நிமிடங்களும் வலிகளை சுமந்தவாய். இன்றும் இவளின் விழிமழையோடு தன் காதலனின் திருமணத்தை ஏங்கி எதிர்பார்த்தபடி கண்ணீரோடும், நினைவுகளோடும் காலங்களைக் கழிக்கின்றாள்.

திருமண நாளிலே வாழ்த்துப் பூ தூவி தன் காதல் உண்மையானது என்பதையும், புனிதமானது என்பதையும். அவன் உணர்ந்து ஒரு துளி கண்ணீராவ்து சிந்தினால் உண்மையில் தன் காதல் புனிதமானது என்பதற்காக. அவன் தன்னை ஏமாற்றிச் சென்றாலும் அவனோடு வாழ்ந்த நிமிடங்களே போதும். அவனுக்காக நான் உயிர்வாழ எண்ணியவளாய் தன் காலங்களை கண்ணீரோடு நகர்த்துகிறாள்.

# புலம்பெயர் ஊடகங்களின் நிகழ்ச்சி நிரல் என்ன?

ஊடகங்கள் என்பவை எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற வரையறைகள் சில வெளிநாடுகளில் இருந்துகொண்டு நடத்திவரும் அநாமதேயமான இணையத்தளங்களால் மீறப்பட்டு வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் மக்களை பிழையான சிந்தனைகளுக்கும் தவறான செயற்பாடுகளுக்குமே இட்டுச்செல்லும். இந்த விடயங்களே இவ்வார ஆராய்வாக இருக்கிறது.

நாட்டைவிட்டுச் சென்றுள்ளவர்களின் இலகுவான உழைப்புத் தொழிலாக மாறிவரும் இணையத் தளங்களால் பல்வேறுபட்ட மக்கள் நலன்சார்ந்த விடயங்கள் பாழாகிப் போய்க்கொண்டு இருக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகளுக்குச் செலவு செய்யப்படும் பணம் எழுதும் விடயங்கள் குறித்து மக்களுக்காகச் செலவிடப்பட்டால் நமது மக்கள் எவ்வளவோ அபிவிருத்திகளைக் கண்டுவிடுவார்கள் என்று பலரையும் சிந்திக்க வைப்பதாக அமைகிறது.

இதுபோன்று தொடர்ச்சியாக யாரையும் சட்டைசெய்யாது செயற்படும் புலம்பெயர்ந்து வாழுகின்ற பலர் நாட்டில் என்ன நடக்கிறது என்றோ, பிரதேசங்களில் எவ்வாறான தேவைகள் இருக்கிறது என்றோ தெரியாது செயற்படுகிறார்கள் என்பது அவர்களது எழுத்துக்களில்–இருந்துபுரிகிறது.

யுத்தம் முடிந்து கடந்த 7 வருடங்களில் இலங்கையின் பல பகுதிகளும் மாற்றம் கண்டுள்ளன. அதிலும் மட்டக்களப்பு மாவட்டமானது மிக வேகமாக வளர்ச்சியடைந்து உள்ளதுடன், அதனைச் செய்துவருகிற யாரையும் யாருக்கும் பிடிப்பதில்லை.

அடிப்படையில், அடுத்தவர்களது சிரமங்களை வெளிக்கொணருவதாக எண்ணிக்கொண்டு சாதாரண மக்களுக்குக் கிடைக்கும் சாதாரண வசதிகளைக்கூட வீணாண விதண்டாவாதச் செயற்பாடுகளால் இல்லாமல் செய்கின்ற போக்கு பலரது பிழைப்பாகி விட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட வெள்ள்ப்பெருக்கு மாவட்டத்தின் 90 வீதமான பகுதிகளைப் பாதிப்புக்குள்ளாக்கியிருந்தது. இந்த வெள்ளப்பாதிப்பில் இருந்து யாருடைய உயிரும் போய் விடாது, மக்கள் சிரமப்பட்டு விடாது, நோய்கள் பரவாது மாவட்டம் மிகவும் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டது. கடந்த 2010ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின்போது பல உயிர்கள் பலியாகியிருந்தன. ஆனால் இந்த வருடத்தில் அது நடைபெறாது தடுக்கப்பட்டது என்றே சொல்லவேண்டும்.

படித்தவர்களுக்கும், சாதாரண அனுபவ அறிவுள்ளவர்களுக்கும் வித்தியாசம் இருக்கும். அதே போன்று படித்த அனுபவமுள்ளவர்களுக்கும் வித்தியாசம் இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

அதேபோன்று முடிவுகளை எடுக்கின்றபோதும் இந்த மூன்று பிரிவினருக்கும் வித்தியாசம் இருக்கும் எந்த ஒரு விடயத்தினையும் அப்போதைக்கு மட்டும் என்று யோசிப்பவர்களும் இருக்கும், நாளைக்கு என்று யோசிப்பவர்கள், அதனையும் தாண்டி ஒரு வாரம், மாதம், வருடம், சந்ததி என்று யோசிப்பவர்களும் இருக்கிறார்கள்.

இன்றைக்கு என்று யோசிப்பவர்களால் தான் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. நாட்டில் கட்டுப்பாடுகளை தளர்த்தி விட்டுவிட்ட அரசாங்கம், இவ்வாறான வதந்திகளால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கும் வீண் விளைவுகளுக்கும் என்ன தீர்வை வைக்கப்போகின்றது என்பது இப்போதைய முக்கிய கேள்வியாக இருக்கிறது.

அனேகமாக தமிழில் செயற்படும் வெளிநாடுகளில் இருந்து அநாமதேயமாக வந்துகொண்டு இருக்கும் ஊடகங்கள் உலக நாடுகள் அனைத்திலும் இருப்பவர்களது பணத்தினைச் சுரண்டும் ஒன்றாகவே மாறி இருக்கிறது. இதனைப் புரிந்துகொள்ளாத பெருந்தொகையானோர் இப்போதும் இந்த ஊடகங்களை நம்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.


புலம்பெயர் ஊடகம்

**- கிழக்கான் -**

அந்தவகையில், புலம்பெயர் ஊடகங்களின் நோக்கம் மக்கள் நலனா? என்ற முக்கியமான கேள்வி தோன்றுகின்றது. யாரோ ஒருவர் ஏதோ பொழுதுபோக்குக்காகவும் மற்றவர்களை இழிவுபடுத்துவதற்காகவும் செயற்படுத்துகின்ற இணையங்களைப் பார்த்து தம்மை சஞ்சலப்படுத்திக் கொள்ளும் அதிகாரிகளும் இருக்கிறார்கள்.

குறிப்பிட்ட சில ஊடகங்கள் அரச அதிகாரிகளையும், மக்கள் நலன்சார்ந்து செயற்படுபவர்களையும் அவதூறாக எழுதி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விடலாம். அல்லது தங்களது தளங்களை பிரபலப்படுத்திக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொள்வதற்கப்பால் மக்களைப் பிழையான வழிகளுக்கு இட்டுச் செல்லவும் முயல்கின்றன.

இவர்கள் ஒன்றை மட்டும் புரிந்துகொள்வதாக இல்லை. இருக்கின்ற அனைத்து அதிகாரிகளிலும் குறையை கண்டுபிடித்து துரத்திவிடுவதனால் எதனைச் சாதித்துவிட முடியும் என்பதுதான். ஊடகங்களில் நடைபெறுகின்ற அபிவிருத்திகளை எவ்வாறு மேம்படுத்தலாம். தவறு செய்பவரை எவ்வாறு திருத்தலாம். அவரது திறமைகளை மக்களுக்காக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றிச் சிந்திப்பவர்களாகவும் மேம்பாடுகளுக்காக உழைப்பவர்களாகவும் இருக்கவேண்டும்.

மாறாக அறிவீனமுள்ளவர்கள் போன்று தன்னுடைய சுயநலத்துக்காகவும், மனநெருக்கங்களுக்காகவுமான பிரதிபலிப்பாக அமையக்கூடாது. அதனால்தான் நாட்டின் நான்காவது தூணாக ஊடகத்துறை மதிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பற்றி தேவையான விடயங்களை விட்டுவிட்டு தேவையற்றவற்றைப் பற்றி எழுதி அதிகாரிகள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் குழப்பங்களை ஏற்படுத்த முனைவதாக அறியமுடிகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் கிழக்கின் மட்டக்களப்பு மாவட்டமானது மிகவும் அனர்த்தங்கள், அழிவுகளால் துன்பப்பட்டதாகும். இவ் மாவட்டம் இப்போது பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி கண்டுவருகிறது. இந்த அபிவிருத்திகள் யாரது கைகளுக்குள்ளால் வந்தவை என்பதற்கப்பால் எத்தனை நடந்தன. எவ்வாறு நடந்தன என்பதனைப் பற்றியே பார்க்க வேண்டும்.

வெளிநாடுகளைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஊடகங்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதுடன் மக்கள் நலன் சார்ந்த விடயங்களை வெளிக்கொண்ருபவையாக இருக்க வேண்டும். அத்துடன், வெளிப்படையானதாகவும் இருக்க வேண்டும்.

ஒரு ஊடகமானது குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்பட்டால் யார்மீதாக இருந்தாலும். அதன் அடுத்த பக்கத்தைக் கேட்டாகவேண்டும் வெளியிட்டாக வேண்டும். ஆனால் தற்போதைய சூழலில் யார் ஊடகங்களுக்குள் வரலாம் என்ற வரையறைகளே இல்லாமல் போய்விட்டன. இந்த நிலைமைகளில் மாற்றங்கள் தேவையாகும்.

வெறுமனே வதந்திகளையும், தனிப்பட்ட விரோதங்களையும் ஒன்றுமில்லாத கருத்துக்களையும் வெளியிடுபவையாக இருப்பதனைத் தவிர்த்து சிறந்த ஊடகக் கலாசாரம் ஒன்று இலங்கையிலும் உலகளவிலும் உருவாக வழி செய்யவேண்டும்.

எனவே, தட்டச்சு செய்வதற்கும் கணினியினை இயக்குவதற்கும் தெரிந்தால் போதும் என்ற நிலை மாறி புலம்பெயர் ஊடகங்கள் ஊடக தர்மம் குறித்தும், மக்கள் நலன்சார்ந்தும் கட்டாயமாகச் சிந்திக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தினையும் இவை பயன்படுத்தாவிட்டால் வீணான பிரச்சினைகளுடைய சமுதாயங்களையே இவை உருவாக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

*(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

## சர்வதேச மூலதனமும்....

சர்வதேச மூலதனமும் ஆலைகள் மூடப்படுகின்றன. பிறகு எப்படி வேலை வாய்ப்பு அதிகரிக்கும். விருப்ப ஓய்வூதியத் திட்டத்தின்மூலம் இன்று வரை கோடிக்கணக்கில் வெளியே அனுப்பப்பட்டிருக்கின்றனர். ஆனால் அந்த இடங்களுக்கு எங்கும் புதிய பணிநியமனங்கள் இல்லை. பன்னாட்டுக் கம்பெனிகள் இங்கு பெரும் தொழில்நுட்பத்தோடு வருகின்றன. அங்கு புதிய வேலை நியமனம் என்பது சுத்தமாக இல்லை. இந்த சந்தை உலகத்தில் இருந்து நாடு கடத்தப்பட்டவர்களாய் தேசத்தின் எதிர்காலக் கனவு மைந்தர்கள் நின்றுகொண்டு இருக்கிறார்கள்.

விவசாயம், தொழில் வணிகம் அனைத்தின்மீதும் உச்சக்கட்ட தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுள்ளது. விவசாயம் மற்றும் சேவைத் துறையிலான அரசின் மானியம் கொடூரமாக வெட்டப்பட்டுவருகிறது. இன்னொரு பக்கம் பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு சலுகைகள் வாரி வாரி வழங்கப்படுகின்றன.

"உலகமயம் பணக்கார்ரர்களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள இடைவெளியை குறைக்கிறது" என்று பிம்பங்களும், பிரமைகளும் திட்டமிடப்பட்டு காற்று வெளியெங்கும் தூவப்படுகின்றன. காப்புரிமைச் சட்டம் என்னும் அபாயகரமான வலைப்பின்னலில் மூன்றாம் உலக நாடுகளின் விவசாயம் சிக்க வைக்கப்பட்டுள்ளது. சிங்கங்களின் விருந்துகளுக்காக ஆடுகளைக் கட்டிப் போடுவதைப் போல பன்னாட்டுக் கம்பெனிகளின் முன்பு மூன்றாம் உலக நாடுகளை நிறுத்திவைத்திருக்கிறது காப்புரிமைச் சட்டம். பன்னாட்டுக் கம்பெனிகள் புதிய ரக விதைகளை அறிமுகம் செய்கின்றன. அதை வாங்கி பயன்படுத்தும் விவசாயிகள் அவற்றை சேகரித்து மீண்டும் பயிர் செய்யமுடியாது. விதைகளுக்கு அந்த பன்னாட்டு நிறுவனத்தைத்தான் அணுகவேண்டும். அவர்களின் கைகளில்தான் மரபணு வங்கிகள் இருக்கின்றன. நாம் அத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவதை காப்புரிமைச் சட்டம் அனுமதிப்பதில்லை.

"அமெரிக்காவின் காப்புரிமைச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் அது பாதுகாப்பு அபாயமாகக் கொள்ளவேண்டும்" என ஐக்கிய அமெரிக்கப் பிரதிநிதிகளின் சபையில் எடுக்கப்பட்ட முடிவானது மூன்றாம் உலக நாடுகள் எவ்வளவு பெரிய ஆபத்தில் சிக்கியுள்ளன என்பதை விளக்கும். சில பன்னாட்டு நிறுவனங்கள் அறிவுத்துறையில் ஏகபோகமாக விளங்குகின்றது. விவசாய ஆராய்ச்சியின் தலைமையிடமாக அந்நிறுவனங்கள் இருக்கின்றன.

சந்தையில் நிலவும் இலாபமே இந்நிறுவனங்களின் செயற்பாடுகளைத் தீர்மானிக்கிறது. சந்தையில் எந்த பொருளுக்கு அதிக இலாபம் கிடைக்குமோ அதை நோக்கியே விவசாயமும், விவசாயிகளும் திருப்பிவிடப்படும் அபாயம் உள்ளது. விவசாயிகளின் தேவைகளைப் பொறுத்து ஆராய்ச்சி என்பதும், சொந்த மண்ணுக்கும், மக்களின் தேவைக்கேற்ற பயிர்வகைகள் என்பதும் போய், ஏதோ ஒரு மேற்கத்திய நாட்டிற்கு தேவையான, நொறுக்குத்தீனிக்கான விளைநிலங்களாக கிராமங்கள் மாற்றப்படும் அபாயம் உள்ளது.

இப்போது எல்லாம் மிகத்தெளிவாகத் தெரிகிறது. வியாபாரப் பயிர்கள் என்ற பெயரில் உணவுப்பயிர்களை பயிரிடாமல் நம் வயிற்றலடிக்கும் முதலாளித்துவ உலகின் இரக்கமற்ற மூர்க்கத்தனம் நம் வாசல் கதவுகளைத் தட்டப்போகிறது. இந்த மண்ணுக்கு சொந்தமான பயிர்கள் காணாமல்போகும். உணவுப் பயிர்களுக்கு நாம் பிறகு வெளிநாட்டை நம்பி இருக்கவேண்டிய அவலம் நேரும்.

உலக வங்கியும், சர்வதேச நிதி நிறுவனமும், தற்போது GATT-இன் அடுத்த அவதாரமாக உருவாகியுள்ள World Trade Organisation -ம் வறுமையை போக்குவதாக எப்போதும் சொல்லுகின்றன. ஆனால் கடந்த பத்து ஆண்டுகளில் வறுமையில் வாடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. தினமும் 130 கோடி மக்கள் ஒரு டொலருக்கும் குறைவான சம்பளத்தில் வாழ்ந்து வருகின்றனர். இன்னொரு 160 கோடி மக்கள் இரண்டு டொலர் ஊதியத்தில் மூச்சுத் திணறுகின்றனர்.

உலகமக்களில் 5ல் ஒரு குழந்தை பசியால் துடிதுடித்து அழுதுகொண்டு இருக்கிறது. மூன்றில் ஒரு பகுதியினர் அடிப்படை மருத்துவ வசதி இல்லாமல் இறந்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் 5 வயதுக்கு குறைவான 12 கோடி குழந்தைகள் இறந்துகொண்டு இருக்கிறார்கள். இதை வெளியிட்டு இருப்பது உலக சுகாதார நிறுவனம்.

"பி2ஜே.டி.எம் ரக விமானங்களும் அவை வீசக்கூடிய சக்திமிக்க குண்டுகளுமாய் சேர்த்தால் ஒரு விமானத்தின் விலை 220 கோடி டொலராகிறது என்பதை வாஷிங்டன் செய்தியாளரே சொல்கிறார். ஆனால் 25 செண்ட் மதிப்புள்ள தடுப்பூசி இல்லாமல் குழந்தைகள் இறக்கின்றன. நீர்ச்சத்து இல்லாமல் எத்தனையோ குழந்தைகள் இறக்கின்றன.

சேவை என்கிற புனிதமான வார்த்தையை குப்பைத்தொட்டியில் வீசிவிட்டு எப்போது இலாபம் என்கிற பிசாசின் மொழி பேசப்பட்டதோ அப்போது மனிதாபிமானம் செத்துப் போய்விடுகிறது. மார்க்சும், ஏங்கெல்ஸும் குறிப்பிட்டதைப் போன்று "முதலாளித்துவ வர்க்கம் வெட்க உணர்ச்சியற்ற, அம்மணமான, நேரடியான, மிருகத்தனமான" சுரண்டலை நிலைநாட்டுகிறது.

உலகத்தின் ரொட்டி தேவையை 13 கம்பெனிகள் பூர்த்திசெய்து வருகின்றன. செயற்கையாக ரொட்டிக்குள் விற்றமின்களும். இதர புரதச் சத்துக்களையும் செலுத்தி விற்று வருகின்றன. அந்த வெள்ளைநிற ரொட்டிகள் குளோரின் டை ஒக்ஸைடினால் துவைக்கப்பட்டு நமக்கு வந்துசேருகின்றன என்பதை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. பிரம்மாண்டமான விளம்பரங்கள் மக்களை முட்டாளாக்கி அவைகளை நோக்கி இழுக்கின்றன.

மனிதர்களுக்கு இணக்கமான சந்தை இங்கு தேவையில்லை. சந்தைக்கு இணக்கமான மனிதர்களே அவர்களுக்குத் தேவை. அதுதான் சுதந்திரச் சந்தை. நம்முடைய சம்மதம், ஒப்புதலைப் பெற்றே யாவும் நடப்பதைப் போல இந்த இணக்கம் இங்கு ஏற்படுத்தப்படுவதுதான் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டமான உலகமயத்தின் மாயவித்தை. நமது கலாசாரம், பண்பாடுகளில் அதன் புற்றுநோய் போன்ற ஊடுருவல்தான் நம்மை இணக்கமானவர்களாக ஆட்டுவிக்கிறது; நமது கைகளாலேயே நமது கண்களை குத்தவைக்கிறது.



# கனவோடு பேசுதல்



கன்னிமாட இருளை
நிலவு கழுவி சலவை செய்து கொண்டிருந்தது.
ஆடவர் நுழைய அனுமதி இல்லை.
கன்னிமாடக் கட்டுப்பாடு அதுதான்!

கட்டுப்பாடு போட்டாலும்
காற்றும் காதலும்
எங்கும் துரிதகதியில் புகுந்துவிடும்.

காற்றுக்கும் – காதலுக்கும்
இதுவரை யாரும்
வேலி கண்டுபிடிக்க முடியவில்லை.
ஆற்றைக்கூட அணைபோட்டு தடுக்கலாம்
காற்றைத் தடுக்க
எந்தக் கருவியாலும் முடியாது!

காற்றைத் தடுத்தால்
உயிர் கூட்டைவிட்டுப் போய்விடும்.
காதலைத் தடுத்தால்
வாழ்க்கை பட்டுப் போய்விடும்!

காதலர்கள் சுவாசிக்கும் காற்றிலும் காதல்
கலந்திருக்கும்!
காதலரின் இதயத் துடிப்பிலும்
காதல் ஓசை கேட்டுக் கொண்டிருக்கும்!

கடலுக்குள் அலையடிப்பது மாதிரி
காதலர் நெஞ்சுக்குள்
காதல் ஓசை கேட்டுக் கொண்டிருக்கும்!

கோயில் மணியோசை ஒலித்தால்
ஊருக்கே அது கேட்கும்
காதல் மணியோசை ஒலித்தால்
இருவர் மனதுக்குள் மட்டுமே எதிரொலிக்கும்!

ஊசித் துளைவழியாக
ஒட்டகம் நுழைய முடியாது!
ஒரு துளையும் இல்லாதுபோனாலும்
காதலர் தங்களுக்குள் தாங்கள்
நுழைந்து கொள்ள முடியும்!

கன்னிமாடத்தில்
மஞ்சத்தில் மலர்ந்து கிடந்தாள் சொர்ணா.
அவள் மனதில் பரவிக் கிடந்தான் செழியன்!

கன்னிமாடக் கடப்பாடு கடந்து
காளை புகுந்து கிடந்தான் இதயத்தில்.

நேரில் கிடைக்காத யோகம்
சிலநேரங்களில் நினைப்பில் கிடைக்கிறது!
நினைப்புக்கு வெட்கமும் இல்லை;
வேறெந்த விவஸ்தையும் இல்லை!
கற்பனைக்கு சிறகு முளைக்க
நினைப்புகள் நெடும்பனையாக வளரும்!

விழித்திருக்கும் போது
நெஞ்சில் நிரம்பிவழியும் நினைப்புக்கள்
விழிகளை மூடிக் கொள்ளும்போது
கருவாகி உருவாகிக் கனவாகின்றன!
கனவு பொல்லாதது! கனவு
யார் தடுத்தாலும் நில்லாதது!

“சொர்ணா! என் கண்ணே!
மஞ்சத்தில் நீ புரளும்போது – என்
நெஞ்சத்தில் ஆசை புரள்கிறதேய்டி கண்ணே!

மன்றாட்டா? திண்டாட்டமா?
சம்மதம் சொல்ல வெட்கம் வரும்
மன்மத பாணங்கள் மனதில் எழும்!
உச்சியில் ஆசை தாவிவிட
தலை தாங்காது குனியும் – தரை நோக்கும்!

வெட்கத்தை மூட்டை கட்டிவிடு
வெப்பத்தை விரட்டக் கொட்டிக்கொடு
வெல்லத்தைப் பழிக்கும் இதழ் சுவையை
வெள்ளமென நீ விரைந்து கொடு!”
விரல் பற்றினான் – பற்றினாள்
விரல்களை மோதவிட்டாள்.
கன்னமும் கன்னமும் சேர்ந்து கொள்ள
எண்ணத்தால் சம்மதம் பகிர்ந்துகொண்டாள்.
காதருகே காதல் மொழி பூசினான்;
தேனருவி என நெஞ்சினில் வாங்கினாள்!

தோள் பற்றினான் – துவண்டாள்
மடியினில் சரிந்தவள் புரண்டாள்!
மங்கிய நிலவினில் மடியினில்
மலர்க்கொடி!
பொங்கிய காளை வண்டெனத் தாவினான்!

“போகாதே நில்!
தனித்திருந்தால் வெந்துபோவேன்
தாகத்தில் நான் காய்ந்து போவேன்
போகாதே நில்! போகாதே நில்!
மூழ்கிப் படித்த புத்தகத்தை
விடியலின் கரம் மூடிவிட்டதே!
மீதிக்கதையை படிக்க வேண்டாமா
போகாதே நில்! போகாதே நில்!”

களுக்கென்று நகைத்தாள்
கண்மணி சொர்ணா.
கண்டது கனவு
கண்ணுக்குள் வந்தவர் காதலர்!

“கனவே நன்றி! கனவே வாழி!
மனதைக் கவர்ந்தவர்
மனதில் உள்ளதை
தூதெனச் சுமந்து வந்தாய் வாழி!

வீட்டுக்கு வந்தவர்
யாரெவர் எனினும்
விருந்து கொடுப்பது நம் குணமாகும்!
கனவே நீயோ
நெஞ்சுக் கூட்டுக்குள் வந்தாய்
உனக்கென்ன விருந்து செய்யப்போகிறேன்?
கனவே உனக்கென்ன
கைமாறு செய்யப்போகிறேன்?!”

கனவோடு பேசினாள்
கன்னிமாட அழகி!

ஆம்! காதலர் மனம் கனிவானது
அது காதலுக்கு உதவும் புல்லையும்
வாழ்த்தும்
பூவையும் போற்றும்!

இதோ திருவள்ளுவர் காட்டும் காதலியும்
கனவோடு பேசுகிறாள் கேளுங்கள்.

**“காதலர் தூதொடு வந்த கனவினுக்கு**
**யாது செய் வேன்கொல் விருந்து”**

**அதிகாரம் –122, குறள் – 1211**

# சிந்தியா பதில்

**சிந்தியா! 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த அரசியல் கட்சிகள் இணங்கியுள்ளதாக பிரதமர் ரணில் கூறியுள்ளாரே?**

**ச.வரதராஜா, கொக்குவில்.**

13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த முடியாது என்று எவராவது கூறியிருந்தால். அதுதான் பிரச்சினைக்குரியது. ஏனெனில். 13ஆவது திருத்தம் என்பது அரசியல் அமைப்பின் ஒரு பகுதி.

அரசியல் அமைப்பு என்பது இலங்கையின் அதியுச்ச சட்டக்கோவை. அதை எவரும் மீறவோ - மறுக்கவோ முடியாது.

ஆனால். துரதிர்ஷ்டவசமாக கடந்த அரசாங்கம் பேச்சளவில் இதையே சொல்லிவந்தது. தமிழ்பேசும் மக்கள் எதிர்பார்ப்பது பேச்சை அல்ல செயலை.

அதுசரி பிரதமர் குறிப்பிடுகின்ற அரசியல் கட்சிகளில் ஒன்றைச் சேர்ந்த அத்துரலிய ரத்னதேரர் வடக்கு. கிழக்கு மக்களுக்கு இருப்பது பொருளாதாரப் பிரச்சினை என்று திருவாய் அருளியுள்ளாரே! பிரதமர் அறியவில்லை போலும்!

☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺

**சிந்தியா! புதிய அரசாங்கம் துரிதகதியில் செயற்படுவது போல் தெரிகிறதே?**

**எம்.எம்.உமரலி, வலஸ்முல்ல.**

விரைவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன்னர் எதிர்த் தரப்பை தோலுரித்து வலுவிழக்கச் செய்யவேண்டுமென்றும் ஆலாய்ப் பறக்கிறார்கள்.

இது சில இடங்களில் மூக்குடைபடவும் செய்திருக்கிறது.

உதாரணமாக: காலி துறைமுகத்தில் ஏதோ பெருமளவில் ஆயுதங்கள் இருக்கிறது என்று சொன்னார்கள். பின்னர் அவை பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டில் இருக்கும் ரத்ன லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் ஆயுதங்கள் என்கிறார்கள்.

கே.பி. நாட்டைவிட்டு ஓடிவிட்டார் என்றார்கள். ஆனால் அவர் கிளிநொச்சியில் இருப்பதாக செய்தித் தகவல்கள் கூறுகின்றன.



இவ்வாறு தேர்தலில் வெல்லவேண் டும் என்ற அவசரம் சில இடங்களில காலைவாரிச் செல்கிறது. நிதானம் இழப்பார்களேயானால். முகங்குப்புற விழவேண்டியும் ஏற்படலாம். எனவே துரிதகதில் நிதானமும் தேவை.

☺☺☺☺☺☺☺☺☺☺☺☺

**சிந்தியா! காணாமல் போனோரின் உறவினர்களுக்கு மைத்திரியின் ஆட்சியில் விடிவு கிடைக்குமா?**

**து.பாவலன், கிளிநொச்சி.**

விடிவு கிடைக்கவேண்டும் என்பது தான் எமது பிரார்த்தனையும்.

☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺

**சிந்தியா! நொதேன் நிறுவனம் நிலத்தடி நீருடன் கழிவு ஒயிலைக் கலப்பதாக குற்றச் சாட்டப்படுகிறதே?**

**எஸ்.அஸ்வினி, சுன்னாகம்.**

யாழ்ப்பாணத்தில் வலிகாமப் பிரதேசத்தை அச்சுறுத்தும் பாரிய பிரச்சினையாக இது இப்போது உருவெடுத்துள்ளது.

சுன்னாகத்தில் ஆரம்பித்து. முழுப் பிரதேசத்தையும் இப்பிரச்சினை தொற்றிக்கொண்டிருக்கிறது.

இதற்குக் காரணம். "நொதேன் பவர்" நிறுவனத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மின் உற்பத்தியின்போது வெளி விடப்படும் கழிவு ஓயில்கள் நிலத்தடி நீருடன் கலக்கப்பட்டமையே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது.

தீர்க்கதரிசனமற்ற மாற்றான் பிள்ளை மனப்பான்மையின் வெளிப்பாடு. இதைக் கட்டுப்படுத்தத் தவறினால் யாழ்ப்பாணம் பாரிய அச்சுறுத்தல்களை எதிர்நோக்கும். அதன் ஜீவநாடியான விவசாயம் அழிக்கப்படும். எனவே தேவையற்ற வாதப் பிரதிவாதங்களை விடுத்து து[illegible] நடவடிக்கையே அவசியம்.

☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺

**சிந்தியா! கால்பந்தாட்ட வீரர் கிறிஸ்ரியானோ றொனால்டோ தனது காதலியைப் பிரிந்து விட்டாராமே?**

**க.சர்மி, வவுனியா.**

என்ன சர்மி. இதையெல்லாம் கேள்வி என்று கேட்கிறீர்கள். அவர்களுடைய கலாசாரத்தில் இதெல்லாம் "ஜுஜுப்பி." ( இந்தக் கலாசார மோகம் இப்போது நம்மத்தியிலும் பரவ ஆரம்பித்திருக்கிறதுதானே)

றொனால்டோ மொடல் அழகியான இரீனா சாயிக்கை கடந்த 5 வருடங்களாக காதலித்து வந்தாராம். பார்த்தீர்களா அவர்களைப் பொறுத்தவரையில் 5 வருடம் என்பதே ஒரு சாதனையான சமாச்சாரம்தான்.

☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺

**சிந்தியா! மனிதர்களைவிட குரங்குகள் குணத்தில் உயர்ந்தவையாக இருக்கின்றனவே. என்ன நினைக்கின்றீர்?**

**G.கர்னுஜன், காலி.**

இந்தச் சிந்தியா இருப்பது இருக்கட்டும். மனிதனின் பரிணாம வளர்ச்சி பற்றி ஆய்வுசெய்த டார்வின் என்ன சொல்கிறார் தெரியுமா?

"பொதுவாக குரங்குக் குட்டி வளர்ந்து பெரிய குரங்காக மாறுகின்றது. பன்றிக் குட்டி வளர்ந்து பன்றியாக மாறும். ஆனால் மனிதன் மட்டும் வளர்ந்த பிறகு உண்மையான மனிதனாக இருப்பதில்லை . குணத்தால் பன்றியாகவோ. குரங்காகவோ. மாறிவிடுகின்றான்."

# காதிலை பூகந்தசாமி

வணக்கமுங்க... நானு பாப்பையா சாலமன் வந்திருக்கே. இங்க ஐந்து வருசத்துக்கு முன்னாடி வோர் நடந்திச்செல்லே. அதில ஜினோசைட்டு... ஜினோசைட்டு.. எண்ணு ஒண்ணு நடந்திச்சிதுண்ணு சொல்லுறாக. அதுக்காக ஜெனீவாவில வருசா வருசம் வெள்ளக்காரனுக கூடிப் கூடிப் பேசுறாக. அங்க மட்டுமா இங்கயும் சிலபேரு ஜினோசைட்டு நடந்திட்டுதுண்ணு சொல்லுறாக. இன்னும் கொஞ்சப் பேரு அப்படி அது இல்லை எண்டுறாக.

உதால ஜனங்க ரொம்பவே குழம்பியிருக்கிறாக. ஏனெண்ணா அதுகளுக்கு எதுவுமே விளங்கல. அந்தளவுக்கு நம்ம பசக குழப்பி வைச்சிருக்காக. அதாலை ஒரு பட்டிமன்றம் வைச்சு நல்ல முடிவு சொல்லச் சொல்லி கூட்டிட்டு வந்திருக்காக.

இன்றைய நம்மோட பட்டிமன்றத்தோட தலைப்பு இலங்கையில் ஜினோசைட்டு நடந்திச்சுதா? இல்லையண்ணா இல்லையா?. இங்க பேசுறதுக்கு எங்ககூட நான்கு பெரிய மனுசனுக வந்திருக்காக. ஜினோசைட்டு நடந்திச்சுதுண்ணு பேசுறதுக்காக இரண்ணு பேரு. அதில ஒருத்தரு அன்புத்தம்பி கஜேந்திரனு. மற்றவரு நம்ம வெடிமுத்து சிவாஜி என்னு சொல்லுவாக.

ஜினோசைட்டு நடக்கேல்லை என்னு சொல்லுறதுக்காக இரண்ணு பேரு வந்திருக்காக. அவக இரண்ணு பேருமே கோர்டு போட்டவக. மூத்தவரு விக்கி. மற்றவரு சுமன். இவக நாலு பேருமே பேசப்பேறாக. என்னத்தைப் பேசுறாக எண்ணு பார்த்து நாம ஒரு முடிவுக்கு வரலாம். இங்க முதல்ல பேசப்போறவக ஜினோசைட்டு நடந்தது எண்ண அணியில இருந்து தம்பி கஜேந்திரா. இவ யாரு பிள்ள எண்ணு நா சொல்லத் தேவையில்லை. உங்க எல்லோருக்கும் தெரியும். இவரோட அப்பன், பாட்டன் எல்லாம் சட்டத்தைப் பிடிச்சு சட்டைப் பொக்கட்டுக வைச்சவனுக. ஹி..ஹி...ஹி இவரும் சட்டம் படிச்சவருதான். ஆனா பாட்டன், பூட்டன் சம்பாதிச்சத காலி பண்ணுறத்தையே முழுநேர தொழிலா வைச்சிக்கிறாரு.

வாங்க தம்பி கஜேந்திரரு. றோட்டு றோட்டா ஜினோசைட்டு... ஜினோசைட்டு.. எண்ணு கூறதை இஞ்சையும் கொஞ்சம் சொல்லுறாங்கப்பா...

**கஜேந்திரன்:-** நடுவர் அவர்களே! இந்த மண்ணிலே ஜினோசைட்டு என்று சொல்லப்படுகின்ற மிகப் பயங்கரமான இனப்படுகொலை நடந்தது என்பதை என்னோடு வலியுறுத்திப் பேசுவதற்காக வந்திருக்கும் அண்ணன் சிவாஜி அவர்களே! முழுப்பூசணிக்காயை மூடிமறைப்பதற்காக அல்லும் பகலும் மூளையை சலவை செய்து கொண்டிருக்கும் எதிர்த்தரப்பு வல்லுனரே! எங்களுடைய பித்தலாட்டங்களை எல்லாம் சகித்துக் கொண்டிருக்கும் மக்களே! அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாட்டிலே ஒரு கொடிய யுத்தம் நடந்து முடிந்து ஆண்டுகள் ஐந்து நடந்து முடிந்திருக்கிறது. இருந்தாலும் அந்த யுத்தத்தில் நடந்த மனித உயிரிழப்புகள் திட்டமிட்ட முறையில் நடாத்தப்பட்டு இன அழிப்பு என்பதை நிரூபிப்பதற்கான போதிய சான்றுகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. அந்தவகையிலேதான் நாங்கள் சொல்கிறோம். இங்கு நடந்தது இனப்படுகொலை....

**சாலமன்:-** (குறுக்கிடுகிறார்) ஜினோசைட்டு ஜினோசைட்டு எண்ணு சொல்லுறீக. அப்படிண்ணா என்ன சமாச்சாரம் எண்ணு சொல்லுங்கப்பா.

**கஜேந்திரன்:-** நடுவர் அவர்களே! ஒரு இனத்தை, அதன் அடையாளங்களை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ இல்லாதொழிப்பதற்கு அல்லது திரிவு படுத்துவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட செயற்பாடுகள் இன அழிப்பு என்று சொல்லப்படும்.

அந்தவகையிலே பார்த்தால், இறுதி யுத்தத்தின்போது நடந்தது இன அழிப்பு என்பதற்கான போதிய சான்றுகள் இருக்கின்றன. ஆகவே இங்கே நடந்தது இன அழிப்புத்தான் என்பதை வலியுறுத்தி வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன்.

**சாலமன்:** ஹி... ஹி... வெள்ளைக்காரனுங்க ஜினோசைட்டுக்கு சொன்ன வரைவிலக்கணத்தை சுருக்கமா மொழிபெயர்ப்பு செய்திருக்கிறாரு தம்பி. இங்க நடந்ததுக்கு தன்ட சட்டப்பையில ஆதாரம் இருக்கிறதா சொல்லிப்புட்டு போயிருக்கிறாரு.

அப்பிடி ஏதும் நடக்கல. நடந்தது தம யுத்தம். இவங்க கிட்ட இருக்கிற ஆதாரம் எல்லாம் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் எண்ணு சொல்லி வாதாடவேண்டிய கட்டத்தில இப்ப நம்மட அண்ணன் விக்கி இருக்கிறாரு.

ஹி... ஹி... ஹி... பாத்திகளா தமிழில ஒரு பழமொழி சொல்லுவாக, "ஓடமும் ஒரு நாள் வண்டியில ஏறும். வண்டியும் ஒரு நாள் ஓடத்தில ஏறும் எண்ணு." அந்தமாதிரி கோட்டில அங்க அப்புடி இருந்தவரு, இங்க என்னோட பட்டிமன்றதுக்கு வந்திருக்காக. ஒரு காலத்தில இவக முன்னாடி தலைநிமிர்ந்து பேசப் பயந்தவக எல்லாம் இன்னைக்கு இவாளுக்கு சுட்டுவிரல் காட்டி பேசுறாக. வாங்கையா வாங்க. உங்க நியாயத்தைச் சொல்லுங்க.

**விக்கி:** நடுவர் அவர்களே! எனது தரப்பு வாதிகளே! எதிர்த்தரப்பினரே! அன்பான மக்களே! எல்லோருக்கும் மேலாக சிறை சென்றாலும் என் மனச்சிறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் காமகோடி பிரேமானந்த சுவாமிகளே!

எனக்கு முன்னர் இங்கு பேசிய எதிர்த்தரப்பு வாதி சொல்லியிருந்தார். வரைவிலக்கணப்படி இனப்படுகொலை நடந்ததாக. அதில் ஒரு மாற்றத்தைச் செய்ய விரும்புகிறேன். இங்கே நடந்தது, இனப்படுகொலைக்கு ஒப்பான ஒரு சம்பவமே தவிர இனப்படுகொலை அல்ல.

**சாலமன்:** (குறுக்கிடுகிறார்) ஏங்கையா! நடந்தது, ஜினோசைட்டா, இல்லையாண்ணு சொல்லுங்க. அதைவிட்டுபுட்டு. ஒப்பாக, உப்பில்லைண்ணு சொல்லிக்கிட்டு இருக்கிறீக. இங்க என்ன சாம்பாரா பரிமாறிக்கிட்டு இருக்கிறாக.

**விக்கி:** நடுவர் அவர்களே! நாற்பது வருடங்களுக்கு மேற்பட்ட சட்டஅனுபவங்களில் இருந்து சொல்கிறேன். இங்கு நடந்தது ஜினோசைட்டு என்று சொல்வதற்கு சட்டத்தின் படி மன்றம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும். வெறுமனே கம்பியூட்டர் பிரதிகளும்,

பத்திரிகைச் செய்திகளையும் மட்டும் வைத்துக்கொண்டு ஒரு தீர்மானத்திற்கு வருவது தவறான தீர்வுக்கு வழியமைத்துவிடும். அத்தோடு குற்றத்தை நிரூபிப்பதற்கு குற்ற எண்ணம் 'இருந்திருக்கவேண்டும்' அதனை நிரூபிப்பதற்கு போதுமான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகவே நான் சொல்கிறேன், அது எந்தவகையிலும் ஜினோசைட்டாக இருந்துவிட முடியாது.

**சாலமன்:-** என்னையா இவனுக நம்மளையே குழப்புறாக.

சனத்தின்ர உடம்பில சன்னம் இருந்தாலும் அடிச்சவங்க மனசில எண்ணம் இல்லை யெண்ணு நிரூபிக்க இல்லையென்கிறாக. நம்மளுக்கு ஒரு இளவும் விளங்குதுல்லை. ஒரே குழப்பமாய் இருக்குது. மிகுதிய அடுத்த கிழமை பார்ப்பமே.

நன்றி. வணக்கம்.

# இந்தவாரம் உங்கள் பலன்

(29.01.2015 தொடக்கம் 04.02.2015 வரை)

## மேடம்

தந்தையின் உடல்நிலை பாதிப்புகளால் பொருட்செலவுகள் ஏற்படலாம். புதிய கடன்களை வாங்குவதற்கான முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும். பிள்ளைகளால் இருந்து வந்துள்ள தொல்லைகள் சற்று குறைந்து காணப்படும். நண்பர்கள் உறவினர்களின் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். கொடுக்கல், வாங்கலில் சற்றுக்கவனமுடன் இருப்பது நல்லது. அடிமையாட்களால் ஆதாயம் இல்லை. குடும்பத்தில் காரணம் இல்லாத விசயங்களுக்காக வீண் பிரச்சினைகள் வந்துபோகும். புதிய ஆடைகள் அணிகலன்கள் வாங்குவதற்காக புதிய கடன்கள் வாங்குவீர்கள். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது.

## துலாம்

மாணவர்கள் கல்வி பயிலும் இடங்களில் வீண் பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடும் என்பதால் மிகுந்த கவன முடன் இருத்தல் நல்லதாகும். மனைவியின் உடல்நிலையில் பாதிப்புகள் எற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். பங்காளி களுடன் சேர்ந்து நடத்தும் கூட்டுத்தொழில்களில் காரணமற்ற மனக்கசப்புகள் வர இருப்பதால் முன்கோபத்தை விலக்குதல் சிறந்தது. அரசியல் வாதிகளின் மூலமாக எதிர்பார்த்து இருந்த உதவிகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. காதல் விசயங்களில் நற்செய்திகள் வந்துசேரும். உடல்நிலையில் மூலம் மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகும்.

## இடபம்

பொழுதுபோக்கு விசயங்களுக்காக வீண் பணச்செலவுகள் ஏற்படலாம். யாத்திரையில் கவனமுடன் பயணம் செய்துவரவும். கணவன், மனைவி உறவுகளில் சற்றுக் கவன-முடன் நடந்துகொள்வது நல்லதாகும். தந்தைவழிச் சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து சொத்துக்கள் கிடைக்கும். தனப்புழக்கம் சுமாராகக் காணப்படும். பொதுப்பணிகளில் ஈடுபடுவோர்கள் மிகக் கவனமுடன் இருப்பது நல்லது. உடல்நிலையில் உஷ்ணம் மேகம் போன்ற உபாதைகள் வந்துபோகலாம். சகோதரர் களால் சம்பந்தில்லாத பிரச்சினைகளும், மனக் குழப்பங்களும் வந்துசேரும். புதிய கடன்களை வாங்குவதால் திருப்பிச் செலுத்த இயலாமற் போகக்கூடும் என்பதால் கடன்வாங்குவதைத் தவிர்த்தல் நல்லது.

## விருச்சிகம்

மற்றவர்களில் பிரச்சினைகளில் அநாவசியமாகத் தலையிட்டு மனக்குழப்பத்தை ஏற் படுத்தாதீர்கள். பங்குத்தொழில் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுப் புதிய தொழில்களைத் தொடங்குவீர்கள். வங்கிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான அலுவலகங்களில் பணி புரிவோர்களுக்குப் பதவி உயர்வுடன்கூடிய பணி இடமாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. சொந்தபந்தங்களுடன் குடும்பத்தில் நீண்டகாலமாக இருந்துவந்துள்ள மனக்கசப்புகள் குறைந்து ஒற்றுமை உண்டாகும். தந்தை, மகன் உறவு களில் நல்ல சூழ்நிலை காணப்படும். தாயின் உடல் இருந்துவந்த பாதிப்புகள் சற்றுக் குறைந்து மருத்துவச் செலவுகள் குறையும். வெகுகால மாகத் திருமணம் ஆகாமல் இருந்தவர்களுக்குத் திருமணத் தடைகள் நீங்கித் திருமணம் ஆகும்.

## மிதுனம்

நீண்டகாலமாக வேலை இல்லாதவர் களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும் மனத்தைரியமுடன் எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். பொருளா தாரத்தில் இருந்த நெருக்கடிகள் மாறி ஓரளவு முன்னேற்றம் காணப்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகளில் மனத் திருப்தி அடைவீர்கள். புதிய வாகனங்கள் வாங்கு வது போன்ற முயற்சிகளில் சற்று காலதாமதம் ஏற்படலாம். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் முன்கோபத்தை தவிர்ப்பது நல்லதாகும்.

## தனுசு

உத்தியோகத் துறையினர்களுக்குப் பதவி உயர்வுடன்கூடிய இடமாற்றம் ஏற்படலாம். பொதுத்தொண்டுகளில் ஈடுபடுவதன் மூலம் நற்பெயர்களை எடுப்பீர்கள். கண், காதுகளில் கவனம் தேவை. எடுத்துக்கொண்ட காரியங்களை மிகுந்த முயற்சியின்மேல் செய்துமுடிப்பீர்கள். பொருளாதாரத்தில் இருந்து இன்னும் சற்று நீடிக்கும். பிறருக்காக உதவிசெய்து மனமகிழ்ச்சி அடைவீர்கள். தாயின் உடல்நிலையில் இருந்து வந்த தொல்லைகள் சற்று குறைந்து காணப் படும். புதிய மருத்துவர்களின் உதவியால் நோய்கள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள். நீண்ட நாட்களாக வராத கடன் கொடுத்திருந்த பணம் பிரச்சினைகளின் பேரில் திரும்பக் கிடைக்கும்.

## கடகம்

புதிய வீடு வாகனங்கள் வாங்குவது போன்ற புதிய முயற்சிகளில் சில தடை-கள் வந்துசேரும். கேட்ட இடத்தில் பணம் கிடைப்பதில் சற்று காலதாமதம் ஏற்படும். பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் சற்று குறைந்து நண்பர்களால் பொருளுதவி கள் கிடைக்கும். வெளிநாடு செல்லுதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். விடுபட்டுபோன பழைய வழக்குகள் மீண்டும் தலைதூக்கும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு மனநிம்மதியை இழக்காதீர்கள். குழந்தைகளுக்கான மருத்துவச் செலவுகள் ஏற்படக்கூடும். நீண்டதூரப் பயணங்கள்மூலமாக எதிர்பார்த்த காரியங்களில் சில பின்னடைவுகள் ஏற்படும்.

## மகரம்

உடல்நிலையில் மேகம் உஷ்ண சம்பந்தம் ஆகிய உபாதைகளும், ஒவ்வாமை போன்ற தொற்றுநோய்களும் வந்து நீங்கும். வெளிநாடுகளுக்குச் சென்று வருவதற்கான புதிய முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்து சேருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. பழைய கடன்கள் மீண்டும் தொல்லை கொடுக்கும். தொலை தூரப் பயணங்களைத் தவிர்த்தல் நல்லதாகும். நாட்பட்ட பழைய கடன்களை அடைத்து புதிய கடன்கள் வாங்க முயற்சிப்பீர்கள். வாக னங்களில் எச்சரிக்கையுடன் பயணம் செய்தால் விபத்துக்களைத் தவிர்க்கலாம். தேவையற்ற புதிய நண்பர்களின் தொடர்புகளால் மனநிம்மதி குறைய இருப்பதால் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

## சிங்கம்

காதல் விசயங்களில் சற்று கவனமு டன் செயற்படுவது நல்லது. பிள்ளை களுக்க வெகுகாலமாக தடைப்பட்டு இருந்த சுப-காரிய நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடிய காலமாகும். வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். நாட்பட்ட விசா சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நல்ல செய்திகள் வந்துசேரும். வேலை இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமாகும். வீட்டைத் திருத்திக் கட்டுவதற்காக நீண்டநாட்களாக எடுத்துக்கொண்ட முயற்சிகள் நிறைவேறும். பொதுத்தொண்டுகளில் எச்சரிக்கை யுடன் பணியாற்றுவது நல்லது.

## கும்பம்

விபரீதமான எண்ணங்களை நினைத்து வீண் மனக்குழப்பத்திற்கு ஆளாக வேண்டாம். புதிய கடன்கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லதாகும். பிரிந்துபோன கணவன் - மனைவி உறவுகளில் கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒன்று சேரக்கூடியு காலமாகும். நண்பர்கள் மற்றும் உற்றார், உறவினர்களின் திடீர்வரவால் பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் உண்டாகலாம். உயரமான இடங்களில் மிகுந்த கவனமுடன் வேலைசெய்வது நல்லது. குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் சற்று குறைந்து மனநிம்மதி ஏற்படும். பொதுநலக் காரியங்களில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள். பூர்வீகமான இடங்களுக்குச் சென்றுவர வாய்ப்பு உள்ளது.

## கன்னி

ஒரு சிலருக்கு நினைத்த இடங்க ளில் பணி இடமாற்றங்கள் ஏற்படலாம். விட்டுப்போன உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. காதல் விசயத்தில் நல்ல செய்திகள் கிடைக்கும். தொழிற்சாலைகளை திருத்தி அமைக் கப் போட்ட திட்டங்களில் வெற்றி அடையலாம். காணாமற்போன பொருட்கள் நண்பர்களின் உத வியால் திரும்ப வீடு வந்துசேரும். நிலம் மற்றும் நகைகளை அடகு வைத்தல் போன்ற வற்றின் மூலமாகப் பணம் வந்துசேரும் உத்தியோகம் பார்ப்பவர்கள் மேலதிகாரிகளுடன் கவனமுடன் நடந்துகொள்வதால் வீண் பிரச்சினைகள் குறை யும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## மீனம்

வெளிநாடு சென்று வருவதற்கான முயற்சிகளில் மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். புதிய ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வாங்குவதைத் தவிர்க்கவும். மனநிம்மதியின்மை காரணமாக நித்திரை பங்கமும் காலந்தாழ்ந்த உணவருந்துதலும் ஏற்படும். நண்பர்கள் உறவினர்களின் வருகையால் பண உதவியும் மனநிம்மதியும் உண்டாகும். வீடு மற்றும் தொழிற்சாலைகளுக்காக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த பண உதவி கள் கிடைக்கும். நீண்டதூரப் பயணங்களால் எதிர்பார்த்து இருந்த் ஆதாயம் கிடைப்பதில் சற்றுக் காலதாமதம் ஏற்படும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

## மிதக்கும் நகரம்



மிதக்கும் நகரம் படகு, கட்டுமரம், கப்பல் கடலில் மிதந்து செல வதைப் பார்த்திருக்கிறோம். இனி, ஒரு நகரமே கப்பலுக்குள் உருவாகி கடலுக்குள் உலா வர உள்ளது. சுமார் ஒரு மைல் நீளமுள்ள பிரீடம் ஷிப் உருவாக உள்ளது. இதில் கப்பலில் மிதந்து கொண்டே உலகைச் சுற்றி வரலாம் 50 ஆயிரம் பேர்வரை. இவ்வளவு பேர் எப்படி.. என்ற கேள்வி எழுகிறதா? கப்பலில் அமைய உள்ள குடியிருப்புப் பிரிவுகளில் 50 ஆயிரம் பேர் வசிக்க முடியுமாம். இங்கு வசிக்கும் மக்கள் நிரந்தரமாகத் தங்கியபடி உலகை வலம் வரலாம்.

கப்பல் தளத்தின் உச்சியில் சிறிய வகை விமானங்கள் இறங்கி ஏறும் ஓடுபாதைகளும், விமானங்களை நிறுத்துவதற்கான இடங்களும் அமைக்கப்பட உள்ளன. மிகப் பெரிய வணிக வளாகம், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பலவிதமான பொழுதுபோக்கு அம்சங்களுடன் தொலைக்காட்சி, இணைய வசதி போன்ற சிறப்பம்சங்களுடன் பிரீடம் ஷிப் அமைக்கப்பட உள்ளது. கப்பலிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளால் கடல் பாதிக்கப்படாமல் இருக்க கழிவுகள் மறுசுழற்சி செய்தோ அல்லது எரிக்கப்பட்டோ அழிக்கப்பட உள்ளன. சாதாரண மக்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத இந்தக் கப்பலைக் கட்டி முடிக்க 62,495 கோடி ரூபாய் (10 பில்லியன் டாலர்) செலவிடப்பட உள்ளதாம்.

## தொழிலதிபர்



இந்திய வம்சாவளியை சேர்ந்த 13 வயது மாணவன் ஒருவன் இளம் வயதில் தொழிலதிபராகி உள்ளான்.

அமெரிக்காவில் கலிபோர்னியாவை சேர்ந்த 13 வயது சிறுவன் சுபம் பானர்ஜி 8ஆம் வகுப்பு படித்துவருகிறான். இவனது பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடந்தது. அதில் வைப்பதற்காக கண் பார்வையற்றவர்கள் படிக்கும் பிரெய்லி பிரிண்டரை உருவாக்கினான். தற்போதுள்ள பிரெய்லி பிரிண்டர் 9 கிலோவுக்கு மேல் எடை உள்ளது. ஆனால் சுபம் பானர்ஜி தயாரித்துள்ள பிரிண்டர் மிக குறைந்த எடை கொண்டது. மேலும் விலையோ மிகவும் குறைவு அதாவது ரூ.15 ஆயிரம் மட்டுமே. மேலும், சிறுவன் சுபம் பானர்ஜி ரூ.20 லட்சம் முதலீட்டில் புதிதாக சிறிய கம்பெனி தொடங்கி தொழில் அதிபர் ஆகியிருக்கிறான்.





## தாய்மை...

உலகத்திலுள்ள எந்தவொரு விடயத்துக்கு வேண்டுமானாலும் சரியான விளக்கமொன்றை கொடுக்கமுடியும். ஆனால் தாய் அல்லது அம்மா என்ற வார்த்தைக்கு சரியான விளக்கத்தை தேடுவது மிகவும் கடினம். சொற்களாலோ செயல்களாலோ விபரிக்க முடியாதவரே தாயாவார். வடஇந்தியாவின் உத்தரபிரதேசத்தில் வசித்துவரும் உலகிலேயே மிகவும் வயது முதிர்ந்த தாயொனருவரின் வாழ்க்கை தொடர்புடைய செய்திகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஆம், இத்தாய்க்கு 76 வயதாகின்றது. இவருக்கு 6 வயதுடைய சிறுவனொருவன் இருக்கின்றான். இவருக்கு 70 வயதிருக்கும் போது இவருக்கு இரட்டை குழந்தைகள் பிறந்துள்ளன. அதில் 4 வயதிருக்கும்போதே ஒரு குழந்தை உயிரிழந்துள்ளது. வயது முதிர்ந்துவிட்டது என்றுகூட பார்க்காது சிரமப்பட்டு தனது மற்றுமொரு மகனை இவர் வளர்த்துவருகின்றார். தனது கணவருக்கு 89 வயாதாகின்ற நிலையில், தான் இப்படியொரு சிறுவனை வளர்ப்பதற்கு மிகவும் பெருமை அடைகின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இச்சிறுவன் உங்களுடைய பேரனா என்று பலர் பலமுறை என்னிடம் கேட்டுள்ளனர். இல்லை இது எனது மகன் என்று கூறுகையில் என்னை வித்தியாசமாக பார்ப்பார்கள். அது பற்றி நான் கவலையடைவது இல்லை. எனக்கு இருக்கும் உணர்வு சொற்களால் விளங்கப்படுத்த முடியாத ஒன்றாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.



## நட்சத்திரம்

வடதுருவத்தின் நம்பிக்கை நட்சத்திரம் ஒன்று மின்ன ஆரம்பித்திருக்கின்றது. வடுக்களையும் அவலங்களையும் மட்டுமே செய்திகளாக உலகுக்கு அனுப்பிக்கொண்டு இருந்த இலங்கையின் வட துருவம் எதிர்காலத்தில் சாதனையாளர்களையும் உலகத்தின் சிறப்புப் பக்கங்களையும் இடம்பிடிக்கச் செய்ய ஆயத்தமாகிக் கொண்டு இருக்கின்றது. அதற்கான எதிர்வுகூறல்களில் ஒன்றுதான் இப்படத்தில் காணப்படும் சிறுமி வி.ஆஷிகா.

பளுவைத் தூக்கி கையில் பிடித்து நெஞ்சு நிமிர்த்தி நிற்கிறாள். இவர் யார்?, என்ன செய்தார் என்பது தொடர்பான முழுவிபரங்களை அறிவதற்கு நீங்கள் ஆவலாய் இருப்பீர்கள். உங்களுக்காக 21 ஆம் பக்கம் தயாராயிருக்கின்றது.

(21 ஆம் பக்கம் பார்க்க)

## தண்டனை







சவுதியில் நபர் ஒருவருக்கு வாரந்தோறும் 50 கசையடிகள் வழங்கப்பட்டுவருவது அவரது மனைவியை கண்ணீரில் ஆழ்த்தியுள்ளது. சவுதியில் வாழ்ந்து வரும் ரைப் படாவி (Raif Badawi) என்ற நபர் இணையத்தில் இஸ்லாம் தொடர்பான தவறான கருத்துக்களை பதிவு செய்ததாக கடந்த 2012ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இவருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், 1000 கசையடிகளும் தண்டனையாக விதித்து சவுதி நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில் அவருக்கு மொத்தம் 1000 கசையடிகள் தரப்படும் என்றும், அதை ஒவ்வொரு வாரமாய் பிரித்து வாரத்திற்கு 50 கசையடிகளாய் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நிறைவேற்றப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. ரைப் படாவின் மனைவி Ensaf Haidar மற்றும் மூன்று குழந்தைகள் கனடாவில் உள்ள கியூபெக்(Quebec) மாகாணத்தில் அகதிகள் முகாம் ஒன்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

கணவர் அனுபவிக்கும் கொடுமையை தாங்கமுடியாத மனைவி இதுகுறித்து வலைப்பதிவில் கருத்து ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியதாவது, என் கணவருக்கு கொடுக்கப்பட்டுள்ள தண்டனை மிகவும் கொடூரமானது என்றும், இது ஒரு குற்றச்செயல் எனவும் கண்ணீர்மல்கக் கூறியுள்ளார்.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைசஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜனவரி 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 15 வியாழக்கிழமை (29.01.2015) பக்கங்கள் IV ஓசை – 121

### பாரதப் பிரதமர் நரேந்திரமோடியை

## வடக்கு, கிழக்கிற்கு வரவேற்கிறது ஈ.பி.டி.பி.

பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை வடக்கு, கிழக்கிற்கும் வரவேற்பதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளாகங்களான பொறியியல் மற்றும் விவசாய பீடம் ஆகியவற்றின் கட்டடத் தொகுதிகளுக்காக 600 மில்லியன் ரூபாய் வழங்கியிருப்பதற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி இந்திய அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

அறிவியல்நகர் யுத்த காலத்தில் புலிகளின் பயிற்சி முகமாக இருந்தது இந்நிலையில், யுத்தத்திற்குப் பின்னர் இலங்கை படையினர் தமது முகாமை அங்கு அமைத்திருந்ததன் காரணத்தினால் அந்தப் பகுதியை விடுவிக்க முடியாது என்று கூறியிருந்தனர்.

ஆனாலும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ்

iv ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் பொன்சேகாவுக்கு பதவி, பட்டங்கள் வழங்கல்

(கொழும்பு)

சரத் பொன்சேகாவிடம் இருந்து பறிக்கப்பட்ட அனைத்து பதவிகள், பட்டங்கள் என்பன அவருக்கு மீள வழங்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னர் இராணுவத்தில் அவர வகித்த முப்படைகளின் தள கர்த்தர், இராணுவத் தளபதி போன்ற பதவிகள் மற்றும் அவர் வசமிருந்த ஜெனரல் உள்ளிட்ட பட்டங்களே மீள வழங்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் அனைத்துக் குற்றச்சாட்



டுக்களில் இருந்தும் விடுதலை செய்யப்பட்ட சரத் பொன்சேகாவுக்கு நேற்று இழந்த பதவிகள் அனைத்தும் மீளவழங்கப்பட்டுள்ளன என பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

# பிரதம நீதியரசராக மீண்டும் ஷிராணி

### நேற்று பொறுப்பேற்பு; இன்று ஓய்வு

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா நேற்று உயர்நீதிமன்றத்துக்குச் சென்று தனது கடமைகளை மேற்கொண்டார்.

ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தில், முன்னைய அரசாங்கத்தால் சட்ட ரீதியாக குற்றப் பிரேரணை நிறைவேற்றப்படவில்லை என்றும் எனவே ஷிராணி பிரதம நீதியரசர் பதவியிலிருந்து சட்டரீதியாக நிறுத்தப்படவில்லை என்றும், அப்பதவியை

iv ஆம் பக்கம் பார்க்க



### மொஹான் பீரிஸ்ிற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என வலியுறுத்தி கொழும்பு உயர்நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்பாக சட்டத்தரணிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொழிற்சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் நேற்றுக் காலையில் ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்தனர்.

அத்துடன் தற்போதுள்ள பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அரசியல் செல்வாக்கில் அரசியல் காரணங்களுக்காக நியமிக்கப்பட்டவர். அவர் மீது பல குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளன.

## பிரதம நீதியரசராக ஸ்ரீபவன் பதவியேற்பார்?



இலங்கையின் அடுத்த பிரதம நீதியரசராக, உயர்நீதிமன்ற நீதியரசர் கே.ஸ்ரீபவன் நியமிக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பிரதம நீதியரசராக மீண்டும் கடமைகளை பொறுப்பேற்ற கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க இன்று தனது பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் உயர் நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீபவன் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீபவன் பிரதம நீதியரசராக நியமிக்கப்படலாம் என நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரிய கருத்துக்களை வெளியிட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## இடதுசாரிக் கட்சிகள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

இடதுசாரி கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துள்ளனர்.

லங்கா சமசமாஜ கட்சி, கம்யூனிச கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தனது வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி, எதிர்கால திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

மேலும் ஜனாதிபதிக்கு ஆத

iv ஆம் பக்கம் பார்க்க

## அரசாங்க ஊழியர்களுக்கு சலுகை விலையில் தொலைக்காட்சி

வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக கூட்டுத்தாபனம் அரசாங்க ஊழியர்களுக்கு விசேட சலுகை விலையில் தவணை அடிப்படையில் செலுத்தும் வகையில் தொலைக்காட்சி இயந்திரங்களை வழங்க முன்வந்துள்ளது.

வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக கூட்டுத்தாபனம், சர்வதேச தரத்துக்கேற்ப இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ள STC General LED என்ற தொலைக்காட்சிகளை நாடுமுழுவதிலுமுள்ள அதன் காட்சியறைகளில் பெற்றுக் கொள்ள முடியும் என பொது முகாமையாளர் பெரகும் விஜயரத்ன தெரிவித்தார்.

இதன்படி, கொழும்பு, கண்டி, குருநாகல் ,அனுராதபுரம், யாழ்ப்பாணம், நாரஹேண்பிட்டி, மாத்தறை ஆகிய சகல கிளைகளிலும் பார்வனையாளர்கள் இந்த தொலைக்காட்சியை கொள்வனவு செய்ய முடியும் எனவும் பொது முகாமையாளர் பெரகும் விஜயரத்ன தெரிவித்தார்.

## ஆர்ப்பாட்டம்

இந்திய வீட்டுத் திட்டத்தில் ஊழல் இடம் பெற்றுள்ளதாகக் கூறி புன்னாலைக்கட்டுவன் வடக்கு மக்கள் நேற்று நண்பகல் உடுவில் பிரதேச செயலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே வீடுகள் உள்ளவர்களுக்கு இந்திய வீட்டுத் திட்டத்தில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று கூறியே அந்தப்பகுதி கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், மற்றும் பிரதேச செயலக உயர் அதிகாரிகளுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச செயலக வாயிலில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை அவதானித்த உதவிப் பிரதேச செயலர் பொது மக்

iv ஆம் பக்கம் பார்க்க

## பிரித்தானிய அமைச்சர் வடக்கிற்கும் விஜயம்



பிரித்தானிய வெளியுறவு அலுவலக அமைச்சர் ஹுகோ ஸ்வைர் நேற்று இலங்கைக்கு விஜயம் செய்தார்.

நாளை வரை தங்கியிருக்கும் அவர், யாழ்ப்பாணத்துக்கும் செல்லவுள்ளார் என்று கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது. ஹுஹோ இலங்கைக்கு விஜயம் செய்யும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கொழும்பில் அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்துக்காக பிரித்தானியா தொடர்ந்தும்

iv ஆம் பக்கம் பார்க்க

## 102 வயதில் காலமானார்

(வடமராட்சி)

வடமராட்சியைச் சேர்ந்த சமூக சேவையாளர் ஒருவர் 102 வயதில் காலமானார். துன்னாலையைச் சேர்ந்த இளையதம்பி கோவிந்தசாமி என்பவரே 102 வயது வரை வாழ்ந்து காலமானவராவார். இவர் இப்பிரதேசத்தில் சமூக சேவைகளில் முன்னணியில் திகழ்ந்தவராவார். (01)

## விசேட பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

புலோலி புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு சங்கத் தலைவர் வீ.கே.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளதாக செயலாளர் ஆர்.நிமலன் அறிவித்துள்ளார். (01)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினராகிய நாங்கள் முன்னாள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் **கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்தும் விசேடமாக ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் **சில்வேஸ்திரி அலென்ரின்** அவர்களின் நிதியில் இருந்தும் இந்த நிதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு முன்னின்று உழைத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் **கே.வி.குகேந்திரன் (ஜெகன் தோழர்)** அவர்களுக்கும், இந்நிதியினைப் பெற்றுக்கொடுப்பதற்கு முழுமையாக பாடுபட்ட நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான **அம்பலம் இரவீந்திரதாசன்** அவர்களுக்கும் எமது ஆலய பரிபாலன சபையினரும், அடியார்களும், பொது அமைப்புகளும் எமது மனமார்ந்த நன்றிகளினை தெரிவிப்பதுடன் என்றென்றும் உங்களது அரசியல் பணி வெற்றிபெற வாழ்த்துவதுடன் என்றென்றும் உங்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.







**மணல்தறை லேன், கந்தர்மடம்.**

**கண்ணகி அம்மன் ஆலயம்.**

(C/3807)


## ஏகாதசி தீர்த்தம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை ஏகாதசி தீர்த்தம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 7.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம் பெறும்.

மு.ப. 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீமத் நாகவரத நாராயணர் ஸ்ரீ தேவி, பூமா தேவி சகிதராய் அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்தருள்வார். மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும். (68)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | வியாழக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | மக்கள் முகம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

# நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 329
திகதி - 2015.01.27
வர்ணம் - மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் | ஆங்கில எழுத்து

**13 45 57 63 P**

பரிசுத் தொகை ரூபா. **21,958,120/-** வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 06 | 300,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 204 | 204,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 331 | 331,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9266 | 555,960/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4793 | 191,720/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 120208 | 2,404,160/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17402 | 348,040/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 21,958,120/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,334,880/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. **22,193,280/-**

2015.01.30ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

web : www.dlb.lk

(C/3979)


# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications upto 16.02.2015 from qualified persons for the under mentioned posts:

**PHYSICAL EDUCATION UNIT**

Visiting Instructor for the following fields:
**Badminton-Men/ Chess-Men/Chess-Women/Karate/**Rugby/ Tennis

**UNIT OF ALLIED HEALTH SCIENCES FACULTY OF MEDICINE**

Temporary Demonstrator in Nursing

| Post | Salary |
|---|---|
| Visiting Instructor | Rs. 750/- per hour |
| Temporary Demonstrator | Rs. 21,370/- per month |

Applications for the above posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, either in person or by post, on a payment of Rs.100/- per application form . Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for **more than one** post should apply in separate forms.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA.**
**28.01.2015**

(C/3868)

# கோண்டாவில் பகுதி கிணறுகளிலும் கலந்தது கழிவு ஒயில் படலம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், தெல்லிப்பளை பகுதிகளின் கிணறுகளில் காணப்பட்ட கழிவு ஒயில் கடந்த ஒரு. சில நாட்களாக கோண்டாவில் மேற்குப் பகுதியிலுள்ள கிணறுகளிலும் கலந்திருப்பது பொதுமக்களால் அவதானிக்கப்பட்டுள்ளது.

கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்குப் பகுதியிலுள்ள குடிநீர் கிணறுகளில் ஒயில் படலம் காணப்படுவதாகவும், இந்நீரை அருந்தியவர்கள் வயிறு சம் பந்தமான உபாதைகளுக்கு உள்ளாகி இருப்பதாகவும், தோலில் ஒருவித அரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கிராம உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியதுடன், நல்லூர் பிரதேச தவிசாளருக்கு மனுஒன்றை இப்பிரதேச மக்கள் கையளித்துள்ளனர்.

இம் மனுவில் மேற்படி விடயத்தை தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு வந்தது மட்டுமன்றி, உடனடி நிவாரணங்களையும் கோரியுள்ளனர். உடனடியாக நிவாரணங்களையும் கோரியுள்ளனர். உடனடி நிவாரணங்களாக குடிநீர் விநியோகத்தையும், நீர்ப்பரிசோதனையையும் ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுள்ளனர்.

நீர்ப்பரிசோதன்னை மூலம் ஒயில் கலந்திருப்பது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் பிரதேச மக்கள் சார்பாக இப்பிரச்சினை தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து உதவுமாறும் கேட்டுள்ளனர். (06)

# மாணவர்களுக்கு நிதியுதவி

(வடமராட்சி)

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அறக்கொடை நிதியத்திலிருந்து வடமராட்சி வலய வசதி குறைந்த நூறு மாணவர்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிதி மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வு வடமராட்சி வலயத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், ஆறு.திருமுருகன் உட்பட நிதியப் பிரமுகர்களும் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட வசதி குறைந்த 100 மாணவர்களுக்கு நிதியைக் கையளித்தனர்.

நிதியம் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் நந்தகுமாரிடம் 2 இலட்சம் ரூபா நிதியை ஏற்கனவே வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (01)

# மகாத்மா காந்தியடிகளின் 67 ஆவது சிரார்த்த தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் நடத்தும் மகாத்மா காந்தியடிகளின் 67 ஆவது சிரார்த்த தின நிகழ்வு நாளை பிற்பகல் 3.00 மணிக்கு சங்கத்தின் தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கத்தின் யாழ்.மாவட்ட பணிமனையில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காந்தி திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வைத் தொடர்ந்து ஆரம்பமாகும் சிரார்த நிகழ்வின் வரவேற்புரையை காந்தீயம் ஆசிரியர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி நிகழ்த்துவார்.

அருளாசியுரையை சின்மயா மிஷன் யாழ்.வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா வழங்குவார்.

பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத் தூதுவர் ஏ.நடராஜன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, மூத்தகாந்தியவாதி சோ.க.தம்பிப்பிள்ளை, மெய்யியற்துறை விரிவுரையாளர் ந.சிவகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

காந்தீயம் பத்திரிகை வெளியீடும் இதன் போது இடம்பெறும். வெளியீட்டுரையை யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மு.ஜெ.சுஜீந்திரன் வழங்குவார். சங்கத்தின் யாழ். மாவட்ட கிளைத் தலைவர் கா. கார்த்திகேசு கவிதாஞ்சலி நிகழ்த்துவார்.

2014 காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். நன்றியுரையை நிர்வாக சபை உறுப்பினர் செ.சுப்பிரமணியம் நிகழ்த்துவதுடன் விருந்தினர் கௌரவிப்பும் இடம்பெறும்.

# மெய்வல்லுநர் போட்டி

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் பாடசாலை அதிபர் செல்வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.புகன் ஸ்ரீந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (06)

# தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு

வேலணை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு இன்று காலை 10.00 மணியளவில் வேலணைப் பிரதேச சபையினது உப பணிமனையான மண்டைதீவு உப பணிமனையின் அலுவலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா (போல்) தலைமையில் நடைபெறுகின்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் கலந்துகொள்கின்றார்.

துறைசார் விருந்தினர்களாக தீவக வலய கல்விப் பணிப்பாளர் தி.யோன்குயின்ரஸ், மண்டைதீவு மகா வித்தியாலய அதிபர் சு.கனகரத்தினம், மண்டைதீவு றோ.க.த.க பாடசாலை அதிபர் அ.ஜோன்கொலின் மற்றும் கிராம அலுவலர்களான ம.சசிகாந், ஏ.தேவகி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கௌரவ விருந்தினர்களாக சபையின் உறுப்பினர்களும் கலந்துகொள்கின்றனர்.

கருத்துரையினை சபையின் செயலாளர் மு.இராசகோபால் வழங்கவுள்ளார்.

பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து 'வாசிப்பு அறிவின் சேமிப்பு' என்ற தலைப்பில் கவிதைப் போட்டி நடாத்தவுள்ளனர்.

ஏற்கனவே தேசிய வாசிப்பு மாத நிகழ்வு சம்பந்தமாக நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டிகளில் முதலிடம் பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (05)

# ஆலய மண்டபத்தில் மது; 3 இளைஞர்களுக்கு வழக்கு

(கரணவாய்)

ஆலய மண்டபத்தில் மது அருந்திக்கொண்டிருந்த 3 இளைஞர்கள் பொலிஸாரிடம் வசமாக மாட்டினர்.

நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் நெல்லியடி விக்னேஸ்வரா வீதியிலுள்ள கோயில் மண்டபத்தில் மாமிசத்துடன் மது அருந்திய 3 இளைஞர்கள் அவ்வீதியால் ரோந்து சென்ற நெல்லியடி பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டபோது அவர்கள் மூவரையும் பொலிஸார் கைது செய்ததுடன், பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்தனர்.

இம்மூவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டதுடன் நாளை பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (18)

# மாணவியை தாக்கிய தந்தைக்கு மனநோய் சிகிச்சையளிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியவிளான் .பகுதியில், பாடசாலை மாணவியொருவரைத் தாக்கி அவரைப் படுகாயமடையச் செய்த மாணவியின் தந்தையை மனநோய் சிகிச்சைக்கு உட்படுத்துமாறு இளவாலைப் பொலிஸாருக்கு யாழ். சிறுவர் நீதவான் நீதிமன்ற நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

சந்தேகநபரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் பணித்தார். மதுபோதையில் கடந்த செவ்வாய்க்கிழமை வீட்டுக்குச் சென்ற தந்தை, படித்துக்கொண்டிருந்த மகளை அழைத்து கட்டையால் காலில் தாக்கியுள்ளார். இதில் காயமடைந்த பாடசாலை மாணவி தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட இளவாலை பொலிஸார், தந்தையை நேற்றுக் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.




# நிரந்தர நியமனம் வழங்கக்கோரி சுகாதார தொண்டர்கள் போராட்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றும் ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறு நேற்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், மல்லாவி, புதுக்குடியிருப்பு ஆகிய வைத்தியசாலைகளில் 1995ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றி வரும் 63 ஊழியர்களே இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சுகாதாரத் தொண்டர்கள், பதாதைகளுடன் ஊர்வலமாகச் சென்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகனை சந்தித்து இது தொடர்பில் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.



காரைநகர் சுந்தரமூர்த்தி கரை வீதி புனரமைப்புப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்புனரமைப்புப் பணிகளை ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச இணைப்பாளரும், காரைநகர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான வீ.கண்ணன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். மேற்படி வீதி காரைநகர் பிரதேச சபையினால் புனரமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிலுள்ள அகதிகளை அழைப்பது குறித்து பேச்சு

(புதுடில்லி)

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகள், நாடு திரும்புவது குறித்த பேச்சு இருநாட்டு பிரிதிநிதிகளுக்குமிடையில் நாளை நடைபெறும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் சையத் அக்பருதீன் தெரிவித்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தியா சென்ற சமயம் இது குறித்து பேசப்பட்டதென்றும் அவர் தெரிவித்தார்.

அகதிகளுக்கான ஐ.நா. மன்றம், ஐரோப்பிய ஒன்றியம் என்பன, இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை அவர்களது சொந்த நாட்டில் குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்கு உதவ முன்வந்துள்ளன.

இதுகுறித்து அந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் இலங்கையின் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனைச் சந்தித்து பேசினர்.

இதன்போது இந்தியாவிலிருந்து அழைத்துவரப்படும் மக்களுக்காக வாழ்வாதார தொழில் உதவிகளை வழங்குவதற்கு அந்த நிறுவனங்கள் இலங்கைக்கு உதவ உறுதியளித்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை வங்கியின் தலைவராக ரொனால்ட் பெரேரா

(கொழும்பு)

இலங்கை வங்கியின் புதிய தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

சிரேஷ்ட அனுபவமிக்க சட்டத்தரணியான ரொனால்ட் பெரேரா மேன் முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்திலும் பணியாற்றியுள்ளார். இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினராவார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் எல்.எல்.பி. பட்டதார்ரியான ரொனால்ட் பெரேரா இங்கிலாந்தின் நொதம்ப்ரியா பல்கலைக்கழகத்தில் எல்.எல்.பி.பட்டம் பெற்றவராவார்.

ரொனால்ட் பெரேரா ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர் போல் பெரேரா மற்றும் மேல் மாகாண சபையின் முன்னாள் தலைவரான திருமதி குலசீலி பெரேரா ஆகியோரதும் புதல்வராவார்.

# காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு பின்பக்கமாகவுள்ள இரத்தினபுரம் ஆற்றுப்பகுதியை சேர்ந்த மக்கள் தங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்கி வீட்டுத்திட்டத்தில் உள்வாங்குமாறு கோரி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தக் கிராமத்தில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றிணைந்து கிராமத்திலிருந்து ஊர்வலமாக ஆரம்பித்து மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தாங்கள் குடியிருக்கும் காணிகளுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கவேண்டும். புதிய அரசாங்கம் எங்களுக்கு நியாயமான முடிவை கொடுக்க வேண்டும், எமது பிரதேச பிரதேச செயலரை மாற்ற வேண்டும், மக்களை ஏமாற்றும் அரச அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டும், வீட்டுத்திட்டத்தில் இணைக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் மாவட்டச் செயலாளர் கருத்து கூறுகையில், கிளிநொச்சி குளம், அதன் பின்பகுதி, இரத்தினபுரம் ஆற்றுப்பகுதிகளிலுள்ள பொதுக் காணிகளில் பொதுமக்கள் சிலர் குடியேறி வசித்து வருகின்றனர். அவர்கள் அந்தக் காணிகளை தங்களுக்கு என்று வழங்கி காணி உறுதிகள் வழங்கும்படி கோரிக்கை முன்வைத்து வருகின்றனர்.

அவர்களில் இரத்தினபுரம் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தி, மகஜர் ஒன்றை தந்துள்ளனர். இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடி நியாயத்தன்மை மற்றும் பாதிப்புக்கள் குறித்த ஆராய்ந்து இதற்குரிய சரியான முடிவை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

# இலங்கையில் ஜனநாயகம்; ஒபாமா நம்பிக்கை



இலங்கை தொடர்பில் புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா தெரிவித்துள்ளார். இந்தியாவின் ஸ்ரீபோர்ட் கேட்போர் கூடத்தில் பரக் ஒபாமா ஆற்றிய உரையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் ஜனநாயகம் தொடர்பில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போன்ற நாடுகளின் எதிர்காலத்தை சுபீட்சமாக்க இந்தியா ஒத்துழைப்பு வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

## பிரதம...

அவர் தொடரமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, 44 ஆவது பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸுக்கும் ஜனாதிபதி செயலகம் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

அந்தக் கடிதத்தில், அவருடைய நியமனம் சட்டரீதியானது அல்ல என்றும் ஆரம்பத்திலிருந்தே தவறான அணுகுமுறைகளுடன் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று மதியம் உயர்நீதிமன்ற வளாகத்துக்கு வந்த ஷிரானி பண்டாரநாயக்க தனது பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அத்துடன், இன்று அப்பதவியிலிருந்து தான் ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பத்தை அரசிடம் சமர்ப்பிப்பார் என்றும் ஷிராணி அறிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் சட்ட ரீதியான பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவே என ஜனாதிபதி மைத்திரிபால தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கில் தெரிவித்துள்ளார்.

ஷிரானி பண்டாரநாயக்கவே பிரதம நீதியரசர் என நேற்றுக் காலை, ஜனாதிபதியும் அமைச்சரவையும் ஏற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு...

தேவானந்தாவின் தொடர்ச்சியான அரசியல் முயற்சிகளின் பயனாக அறிவியல்நகர் பகுதியை மீண்டும் எமது பிள்ளைகளின் உயர்கல்வித் தேவைக்காக பெற்றுக் கொள்ள முடிந்தது.

அதுமட்டுமன்றி சிரமதான அடிப்படையில் நாம் அப்பகுதியை துப்புரவு செய்து விவசாய பீடத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கும், பொறியியல் பீடத்தை புதிதாக நிறுவுவதற்கும் ஏற்பாடுகளைச் செய்து ஆரம்பித்து வைத்திருந்தோம்.

தற்போது அந்தப் பீடங்களின் அத்தியாவசிய கட்டடத் தொகுதிகளின் தேவைக்கும், வளர்ச்சிக்கும் உதவும் வகையில் எமது கோரிக்கைகளுக்கமை வாக இந்திய அரசு பெருந் தொகையான பணத்தை ஒதுக்கியிருப்பது எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது.

இதேபோல் இந்திய அரசின் உதவியோடு பலாலி விமான நிலையத்தையும் சர்வதேச தரத்துக்கு புனரமைக்க வேண்டுமென நாம் அரசுகளிடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

இதேவேளை, மார்ச் மாதமளவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோ்டி இலங்கைக்கு வருகை தர இருப்பதாக வெளியாகிய செய்தி, தமிழ் மக்களிடையே எதிர்பார்ப்புக்களை அதிகப்படுத்தியுள்ளது. பாரதப் பிரதமர் நரேந்திரமோடி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் வருகை தந்து போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், மக்களையும் பார்வையிட வேண்டுமெனவும் மேலும் ஆற்றவேண்டிய அபிவிருத்தி ப்பணிகள் தொடர்பாகவும் அக்கறை செலுத்த வேண்டுமெனவும் நாம் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் எமது மக்கள் சார்பாக பிரதமர் நரேந்திரமோடியை வடக்கு, கிழக்கு நோக்கியும் ஈ.பி.டி.பி.யாகிய நாம் வரவேற்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச நாடக விழா

(கொழும்பு)

அரச நாடகவிழா 2015 எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி மருதானை டவர் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இம்முறை அரச நாடக விழாவின் இறுதிச் சுற்றுக்காக 7 நீண்ட நாடுகளும் 17 சிறு நாடகங்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்நாடக விழாவை கலாசார மற்றும கலை அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் கலாசார விவகார திணைக்களம் மற்றும் இலங்கை கலை சபை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

# பங்கு பரிவர்த்தனை தலைவராக திலக்

(கொழும்பு)

இலங்கை பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக திலக் கருணாரத்ன நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

## இடதுசாரி....

ரவு அளிப்பது குறித்து தமது கட்சியில் ஏற்பட்ட சில முரண்பாடுகள் தொடர்பில் இடதுசாரிக் கட்சி பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

## பிரித்தானிய....

உதவும் என்று ஹூகோ இலங்கை விஜயத்துக்கு முன்னர் கருத்து வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாண விஜயத்தின் போது அவர் ஆங்கில மொழி பயிற்சிகள் தொடர்பிலான முன்னேற்றங்களை அவதானிக்கவுள்ளார்.

## ஆர்ப்பாட்டம்...

களுடன் கலந்துரையாடி இ[illegible] குறித்து தான் பிரதேச செ[illegible]ரிடம் தெரிவிப்பார் என்று உறுதி வழங்கியதை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வாகனத்தில் சென்று அரசாங்க அதிபரிடமும் மனுவைக் கையளித்தனர்.

# நான்காம் ஆண்டு நினைவில்




**இரத்தினசிங்கம் சதீஸ்**
**(தோழர் சதீஸ்)**
**(வெற்றிலைக்கேணி, முள்ளியான்)**

வடமராட்சி கிழக்கு மக்களின் மீள்குடியேற்றத்திற்காகவும் அவர்களை பூர்வீக நிலங்களில் வாழவைப்பதற்காகவும் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் வாழ்ந்த தோழர் சதீஸ் அவர்கள் தனது இன்னுயிரை தியாகம் செய்து இன்றோடு நான்கு வருடங்கள் நிறைவடைகிறது.

ஆனைவிழுந்தான் வீதியில் தலையில் அடிகாயத்தோடு இறந்து கிடந்த தோழர் சதீஸின் இறுதி நாட்களை எந்நாளும் மறப்பது கடினம். தோழமையோடு இன்முகம் மலர அனைவரோடும் பழகும் அன்புத்தோழர் சதீஸ் அவர்கள் வடமராட்சி கிழக்கு மக்களின் குரலாக ஓங்கி ஒலித்தார். அவரது கொலையோடு தொடர்புபட்டவர்களை நீதியின் முன்னால் நிறுத்த வேண்டும் என இப்போதும் தோழர்களாகிய நாங்கள் குரல் கொடுத்து வருகின்றோம்.

ஆண்டுகள் நான்கு ஆகிவிட்டபோதும் சமூக சேவையும் மக்கள் பணியுமே தனது வாழ்வு என வாழ்ந்து உயிர்நீத்த தோழர் சதீஸின் நினைவுகளை சுமந்து மக்கள் பணி தொடர்வதே தோழனே உனக்கு செலுத்தும் மரியாதைக்குரிய அஞ்சலியாகும்.

தோழர்கள்
(இ) ஈழுமக்கள் ஜனநாயகக் கட்சி.

## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/4000)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஜனவரி 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.